Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை.
சிறு மழைக்கான
சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 ■ சுடர்: 28 ■ கதிர்: 203 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆனி 3, திங்கள் 17.06.2013

**இந்தியா**



பக். 06

காங்கிரஸ் கூட்டணிக்கு அழைக்க மாட்டோம். ஐக்கிய ஜனதா தளம் குறித்து ராகுல்

**உலகம்**



பக். 07

பேச விருப்பம் அமெரிக்காவை அழைக்கிறது வடகொரியா

**விளையாட்டு**



பக். 22

கிண்ணம் பரிஷ் வசம்



பக். 23

பந்தை சேதப்படுத்தினரா இங்கிலாந்து வீரர்கள்?

# பிரச்சினை நீடித்தால் தனிநாடு உருவாகும்

## பொது எதிரணிக் கட்சிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 17

''என்றுமில்லாதவாறு இலங்கையில் இனவாதமும் மதவாதமும் இப்போது தலைவிரித்தாடத் தொடங்கியுள்ளன. இந்த நிலை தொடருமாயின் இன்னும் இரு தசாப்தங்களுக்குள் உலக நாடுகளின் தலையீட்டால் இலங்கை இரண்டாகப் பிளவுபட்டு தனிநாடொன்று உருவாகும்'' என்று பொது எதிர்க்கட்சிகள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

கொழும்பு, ராஜகிரியவில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க பணிமனையில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே மௌபிம மக்கள் கட்சியின் உப செயலாளர் சமரவீர வீரவன்னி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

> “ஒரு நாட்டிலுள்ள இரு இனங்களுக்கிடையில் பிரச்சினை தொடர்ந்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்குமானால், அந்த நாடு உலக நாடுகளின் தலையீட்டால் இரண்டாகப் பிரிந்து தனிநாடு உருவாவதை கடந்த காலங்களில் கண்டிருக்கிறோம்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''தற்போதே நாட்டில் இன, மத வாதங்கள் அதிகமாகத் தலை தூக்கியுள்ளன. இதனால்தான் உலக நாடுகள் பலவும் இலங்கைக்கு எதிராகத் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளன. ஒரு நாட்டிலுள்ள இரு இனங்களுக்கிடையில் பிரச்சினை தொடர்ந்தும் இடம்பெற்றுக் கொண்டிருக்குமானால், அந்த நாடு உலக நாடுகளின் தலையீட்டால் இரண்டாகப் பிரிந்து தனிநாடு உருவாவதை கடந்த காலங்களில் கண்டிருக்கிறோம்.

இலங்கையும் அதுபோலவே இரண்டாகப் பிரிக்கப்படும் அபாயத்தை நோக்கித்தான் பயணித்துக்கொண்டிருக்கின்றது. இன்னும் இரு தசாப்தங்களில் உலக நாடுகளின் தலையீட்டுடன், இலங்கைஇரண்டாகப் பிளவுபடும் அபாயம்ஏற்படலாம். எனவே அரசு இன, மத ரீதியிலான பிரச்சினைகளுக்கு முடிவு கட்ட முன்வர வேண்டும் - என்றார். (ங-சி)

# ஜூலை முதல் பஸ் கட்டணம் உயரும்

யாழ்ப்பாணம், ஜூலை 17

ஜூலை முதலாம் திகதியிலிருந்து தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிப்பதற்கு தனியார் போக்குவரத்துச் சங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக புதிய கட்டண அட்டவணை தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்ததும் ஜூலை முதலாம் திகதியிலிருந்து பஸ் கட்டணங்கள் உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த வருட ஆரம்பத்தில் டீசலின் விலை உயர்ந்ததைத் தொடர்ந்து பஸ் கட்டணங்களையும் அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ங-22)

# ஆஸியில் ஈழ அகதிகள் மீது மீண்டும் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 17

ஆஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் உள்ள சன்சயின் பகுதியில் ஈழ அகதிகள் மீது கறுப்பினத்தை சேர்ந்தவர்கள் மீண்டும் கொடூரத் தாக்குதலை மேற்கொண்டு அவர்களின் பொருள்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் ஈழ அகதிகள் இருவர் கடைக்கு சென்றுவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோது கறுப்பினத்தைச் சேர்ந்த சுமார் பத்து பேர் இவர்களை வழி மறித்துத் தாக்கியுள்ளனர்.

இதில் ஒருவர் கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி மயங்கிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மற்றைய நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கிலக்கான ஈழ அகதியிடமிருந்த பெருந்தொகையான பணமும் ஐபாட் மற்றும் தொலைபேசி என்பனவற்றையும் கறுப்பின நபர்கள் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

இந்த மாதம் முதலாம் திகதி குறித்த பிரதேசத்தில் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர்களின் வெறியாட்டத்தில் நான்குபேர் கத்தி வெட்டுக்கு இலக்காகினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 13 ஆவது திருத்தத்தை காப்பாற்ற களமிறங்க வேண்டும் இந்தியா

## ஈழத் தமிழர்கள் மாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி, ஜூன் 17

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை இலங்கை அரசு ஒழிக்க முனைவதை இந்தியா வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காமல் , ஒப்பந்தத்தை காப்பாற்ற உடனடியாக தலையிட வேண்டும்-இவ்வாறு புதுடில்லியில் நடைபெற்ற ஈழத் தமிழ்த் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.



அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பனின் ஏற்பாட்டில் இந்த மாநாடு கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் நடைபெற்றது. இதில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான வீ.ஆனந்தசங்கரி, வடகிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள், ஈழ தேசிய ஜனநாயக முன்னணியின் தலைவர் ஞா.ஞானசேகரன் மற்றும் புலம்பெயர் தமிழர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இதன் போது நிறைவேற்றப்பட்ட முக்கிய தீர்மானங்கள் சில வருமாறு:-

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்க இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் பின்னரே வடக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

காணி,பொலிஸ் அதிகாரங்கள் தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

தமிழர் பகுதிகளில் நடைபெறும் திட்டமிட்ட சிங்களக்

தொடர்ச்சி: பக்கம் 21

# பிரபாகரனின் கனவை நனவாக்க அரசு முயற்சி

கொழும்பு, ஜூன் 17

'' புலிகளின் தலைவர் பிரபாகரன் போர் மூலம் இலங்கையை இரண்டாக்க கண்ட கனவையே அரசு போர் புரியாமலேயே நனவாக்க முனைகிறது.''

இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார் ஐ.தே.கவின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோசப் பெரேரா.

பொது எதிரணிக் கட்சிகளின் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பில் 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து அதை நடைமுறைப்படுத்தி மாகாணசபைகளை இயங்கவைத்த பெருமை ஐக்கிய தேசியக் கட்சிக்கே உண்டு. வடக்குத் தேர்தல் நடத்துவது குறித்து நாட்டில் தற்போது பல கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்று வருகின்றன.

இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து நாட்டின் பல தலைவர்களும் பல கருத்து

தொடர்ச்சி: பக்கம் 21

# மட்டக்களப்பில் மதச் சச்சரவு போதகர் உட்பட 12 பேர் காயம்

கொழும்பு, ஜூன் 17

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனைப் பிரதேசம் சுக்கான்கேணியில் நேற்றுக்காலை இந்து ஆலய நிர்வாகிகளுக்கும் மெதடிஸ்த மிஷன் திருச்சபையினருக்கும் இடையே திடீரென கைகலப்பு ஏற்பட்டது. இதில் மதபோதகர் ஒருவர் உட்பட 12 பேர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியிலுள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதே சமயத்தில் அருகில் உள்ள மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்திலும் வழிபாடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

அப்போது திருச்சபையின் வழிபாடுகள் ஒலிபெருக்கி மூலம் நடைபெறுவதால் தமது பூசைகளுக்கு இடையூறு ஏற்படுவதாக பிள்ளையார் ஆலய நிர்வாகிகள் ஆட்சேபனை தெரிவித்தனர். இதை அடுத்து வாய்தகராறு முற்றிமோதலாக வெடித்தது. இதையடுத்து அந்தத் திருச்சபை தேவாலயமும் அதன் அருகில் இருந்த வீடொன்றும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளன.


இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் பலரிடம் வாக்குமூலங்களை பெற்றுள்ளனர். சந்தேகத்தின் பேரில் இருவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ங-சி)

# 3 மாகாணங்களுக்கு ஒரே நாளில் தேர்தல்

கொழும்பு, ஜூன் 17

வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகள் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் கலைக்கப்பட்டு, செப்ரெம்பரில் தேர்தல் நடத்தப்படவுள்ளதாக அரச தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாண தேர்தலுடன் வடமேல் , வடமத்திய மாகாணங்களின் தேர்



தலையும் நடத்துவதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

முதலில் இந்த மூன்று மாகாணங்களுக்கும் தனித் தனியாக வெவ்வேறு திகதிகளிலேயே தேர்தல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது மூன்று மாகாணங்களுக்கும் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் ஒரே சமயத்தில் தேர்தலை நடத்த அரசு முடிவெடுத்துள்ளது. (ங-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மலையகத்துத் தமிழ் யுவதி மலேசியாவில் மர்மச் சாவு

## கொலையா? தற்கொலையா?

கொழும்பு, ஜூன் 17
சுற்றுலாவிசாவில்வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்வதாகக் கூறி மலேசியாவிற்குக் கடத்திச் செல்லப்பட்ட மலையகத்தைச் சேர்ந்த தமிழ் யுவதியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ள சம்பவமானது தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
ரோகினிதேவி என்ற குறித்த யுவதி தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டுள்ளார் என கூறப்பட்டாலும், படுகொலை செய்யப்பட்ட பின்னர் அவர் தூக்கில் போடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் மேலோங்கியுள்ளது.
ஜீவா என அழைக்கப்படும் வட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்த ரோகினிதேவி, பொருளாதார நெருக்கடி காரணமாகக் கொழும்பிலுள்ள வீடு ஒன்றில் பணிபுரிய கடந்த செப்ரெம்பர் மாதம் வந்துள்ளார். பின்னர் நவம்பர் மாதமளவில் வட்டகொடையிலுள்ள தனது வீட்டுக்கு சென்ற ரோகினி, தான் வேலைப் பார்க்கும் வீட்டு உரிமையாளர்கள் மலேசியாவுக்கு தன்னை 3 மாதகால சுற்றுலா விசாவில் அழைத்துச் செல்வுள்ளார்கள் என்று தெரிவித்து 10 ஆயிரம் ரூபாவை எடுத்துச் சென்றுள்ளார்.
ஆனால், அதன் பிறகு தன் வீட்டாருடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்தாத அவர் மூன்று மாதங்களுக்குப் பிறகு, தான் மலேசியாவில் உள்ளதாகவும், தனக்கு ஒரு பிரச்சினையிருப்பதாகவும் தாயிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தியுள்ளார்.
தகவல் அறிந்த ரோகினியின் குடும்பத்தினர், ரோகினி கொழும்பில் வேலைப் பார்த்த வீட்டிற்குத் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்த போதும் எவ்வித தகவலும் கிடைக்கப் பெறவில்லை. பிறகு மகள் அழைப்பு விடுத்த தொலைபேசி இலக்கத்திற்குத் தொடர்புகொண்ட போதும் அது இயங்கவில்லை.
இதன் பின்பு எந்தத் தொடர்பையும் ஏற்படுத்தாத றோகினி மலேசியாவில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டதாக இம்மாதம் 13 ஆம் திகதி மலேசியாவிலிருந்து அவரின் குடும்பத்திற்கு தகவல் கிடைத்துள்ளது.
அவரின் சாவில் சந்தேகம் குடும்பத்தாருக்கு ஏற்பட, றோகினி மலேசியா சென்ற விடயம் தொடர்பில் தகவல்களைத் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளனர். அப்போது தான், ரோகினிதேவி மலேசியாவிற்கு கடத்திச் செல்லப்பட்டுள்ளதை அறிந்துள்ளனர். இதனால், அவரது சாவு கொலையா அல்லது தற்கொலையா எனும் கேள்வி குடும்பத்தாருக்கு ஏற்பட்டுள்ளது.

# '13' குறித்த அவசர சட்டமூலம் மு.காவின் நிலைப்பாடு என்ன?

## ஐ.தே.க.கேள்வி



கொழும்பு, ஜூன் 17
13ஆவது திருத்தச்சட்டத்திலுள்ள அதிகாரங்களைக் குறைக்கும் நோக்கில் அரசு கொண்டுவரவுள்ள அவசர சட்டமூலம் குறித்து அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன என அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் ஐக்கிய தேசியக் கட்சி கேள்வியெழுப்பியது.
13ஆவது திருத்தச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்வதை அமைச்சர் ஹக்கீம் எதிர்ப்பாராயின், எப்படி அவர் அமைச்சரவையில் இருக்கிறார்? இது ஒரு முக்கிய பிரச்சினையாகும் என்று ஐ.தே.கவின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோஸப் மைக்கல் பெரேரா தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற பொது எதிர்க்கட்சிகளின் ஊடக சந்திப்பில் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
கடந்த கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிக வாக்குகளைப் பெற்றதன் பின்னர் அதன் தலைவர் அரசுடன் இணைந்தார். இப்போது இலங்கையிலுள்ள முஸ்லிம்களுக்குப் பிரச்சினை இருக்கிறது. இந்நிலையில் 13 ஆவது திருத்தம் தொடர்பில் மு.கா. தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் எங்கு இருக்கிறார்?
13ஆவது திருத்தத்தில் மாற்றங்களை மேற்கொள்ள ஹக்கீம் எதிர்ப்பாராயின், அவர் எப்படி அமைச்சரவையில் இருக்கிறார்? அத்துடன், 13இன் அதிகாரங்களைக் குறைக்கும் வகையில் அரசு நாடாளுமன்றில் கொண்டுவரவுள்ள அவசர சட்டமூலத்தை அவர் எதிர்ப்பாராயின் எப்படி அவர் அமைச்சரவையில் இருக்கமுடியும்?
எனவே, மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு என்ன என்பதை அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் நாம் கேள்வி எழுப்புகிறோம்.
ஏனெனில், அமைச்சரவையில் எடுக்கப்படும் தீர்மானம் அரசின் தீர்மானமாகும். ஒன்றில் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும். எதிர்த்தால் அரசிலிருந்து வெளியேறவேண்டும். இல்லாவிட்டால் முழு நாட்டையும் ஏமாற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசத்தையும் ஏமாற்ற முயற்சிப்பார் - என்றார்.
இதன்போது தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் ஸாலி கருத்துத் தெரிவிக்கையில்,
வடக்கு, கிழக்கு ஒருபோதும் இணையாது
கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லிம்களும் சிங்கள்வர்களும் சேர்ந்தால் அங்கு பெரும்பான்மை உருவாகிவிடும். இந்நிலையில், வடக்கு, கிழக்கு ஒன்றாக இணைய முடியுமா? ஒருபோதும் இணையாது. யாரைச் சந்தேகப்படுகிறீர்கள் முஸ்லிம்களையா?
அரசு இப்படியொரு நடவடிக்கையை மேற்கொள்கின்றபோதும் முஸ்லிம் அரசியல்வாதிகள் அரசினுள்ளேயே இருந்து கொண்டிருக்கின்றனர் - என்றார்.

## 'மிஸ் கோல்' காவுகொண்டது உயிரை



கொழும்பு, ஜூன் 17
தொலைபேசி தொடர்பான 'மிஸ் கோல்' விவகாரத்தால் ஏற்பட்ட பிரச்சினையால் இளைஞர் ஒருவர் மிகவும் கொடூரமான முறையில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.
முத்தெனியா அங்குனுகொலபெலஸ்ஸ பகுதியைச் சேர்ந்த சுஜித் பிரசன்ன ரத்நாயக்க (வயது - 32) என்ற நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.
கொலை செய்யப்பட்ட நபரின் இளைய சகோதரனின் மனைவியின் தொலைபேசிக்கு தொடர்ச்சியாக 'மிஸ் கோல்'கள் போட்டு நபரொருவர் தொல்லை கொடுத்துள்ளார். இவ்விவகாரம் தொடர்பில் ஆராயச் சென்றபோதே குறித்த இளைஞர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிய வருகின்றது.
தம்பியின் மனைவிக்கு 'மிஸ் கோல்' அழைப்பு விடுத்த நபருடன் இவர் அழைப்பை ஏற்படுத்தி விசாரித்தபோது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட ''நீ சண்டியனாக இருந்தால் முத்தெனியாவிற்கு வா'' என 'மிஸ் கோல்' தொல்லை கொடுத்த நபர் கூறியுள்ளார்.
இதனையடுத்து ரத்நாயக்க தனது இளைய சகோதரர் உட்பட மேலும் இருவருடன் முத்தெனியாவிற்கு வாகனத்தில் சென்றுள்ளார். அப்போது இருகுழுக்களிடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக ரத்நாயக்கா துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார் என விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது.



பத்திரிகைத் துறையில் 60 ஆண்டு காலப் பூர்த்தி செய்துள்ள மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.கோபாலரத்தினத்துக்கு நேற்றுப் பாராட்டு விழா நடைபெற்றது.
வண்ணைக் கலைவாணர் நாடகமன்றத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வு சேர்.பொன்.இராமநாதன் வீதியிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றபோது ஊடகவியலாளர்கள், கலைஞர்கள், புத்திஜீவிகள் எனப் பலர் அவரைக் கௌரவித்தனர். (4)

# சம்பூரில் 819 ஏக்கர் காணி சிங்கப்பூர் நிறுவனத்துக்கு

கொழும்பு, ஜூன் 17
திருகோணமலை சம்பூரில், மூலோபாய அபிவிருத்தித் திட்டம் ஒன்றுக்காக 4 பில்லியன் டொலர் (500 பில்லியன் ரூபா) செலவில் கனரகத் தொழிற்துறை சிறப்பு வலயம் ஒன்று உருவாக்கப்படுவதற்கு இலங்கை அரசும் பச்சைக்கொடி காட்டியுள்ளது எனச் செய்தி வெளியாகியுள்ளது.
இதன் முதற்கட்டமாக, ஆழமான இறங்குதுறை ஒன்றும், களஞ்சியம் ஒன்றும் 700 மில்லியன் டொலர் (88.26 பில்லியன் ரூபா) செலவில் அமைக்கப்படவுள்ளன.
இரண்டாவது கட்டத்தில், இரும்புத்தாது மற்றும் கற்கரித் தொழிற்சாலை என்பன 1300 மில்லியன் டொலர் (163.86 பில்லியன் ரூபா) செலவில் அமைக்கப்படும்.
மூன்றாவதும் இறுதியுமான கட்டத்தில், கப்பல்கட்டும் மற்றும் திருத்தும் தளம், இயந்திர உற்பத்தி, மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு தொழிற்சாலைகள் மற்றும் அது சார்ந்த தொழிற்கூடங்கள் 2000 மில்லியன் டொலர் (252 பில்லியன் ரூபா) அமைக்கப்படவுள்ளன.
இந்தச் சிறப்பு கனரகத் தொழிற்துறை வலயத்தின் மூலம், 10 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்றும், இந்தப் பிரதேசத்தின் நகர அபிவிருத்தி மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் உயரும் என்றும், இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன, அமைச்சரவை சகாக்களிடம் கூறியுள்ளார்.
இந்தத்திட்டத்துக்காகசிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட இலங்கை கேற்வே இன்டஸ்ட்ரீஸ் என்ற தனியார் நிறுவனத்துக்கு, 819 ஏக்கர் நிலம், இலங்கை முதலீட்டுச் சபையால் 99 ஆண்டுகால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.
அதேவேளை, சம்பூரில் 500 மில்லியன் டொலர் செலவில் அனல்மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கும் இலங்கை ஏற்கனவே இந்தியாவுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.
சம்பூரில் பாரம்பரியமாக வசித்து வந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், மீளக்குடியமர இலங்கை அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.
அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதற்குத் தேவைப்படும் காணி தவிர, எஞ்சிய பொது மக்களின் காணிகளில், இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும் என்று அரசு உறுதியளித்திருந்தது.
அதற்கு முரணாகவே சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சம்பூரில் 819 ஏக்கர் காணியை இலங்கை அரசு குத்தகைக்கு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# வர்த்தகர் படுகொலை; வாஸ் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூன் 17
பம்பலப்பிட்டியைச் சேர்ந்த பாதணி வர்த்தகரான முஹமட் சியாமின் கொலை வழக்கில் சந்தேகத்தின் பேரில் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்ட கம்பஹா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தன தற்காலிகமாக வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.
பம்பலப்பிட்டியைச் சேர்ந்த பிரபல வர்த்தகரான சியாம் கடந்த மாதம் 22 ஆம் திகதி துப்பாக்கியால் சுடப்பட்ட நிலையில் தொம்பே பகுதியில் வைத்து சடலமாக மீட்கப்பட்டார். சியாம் கொலை செய்யப்பட்டு 2 வாரங்களில் கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் சியாமின் நண்பரும், பொலிஸார் மூவரும் கைது செய்யப்பட்டனர்.
இறுதியாக சந்தேகத்தின் பேரில் கைதாகிய கம்பஹா மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்த்தன கடந்த 13 ஆம் திகதி நோய் ஏற்பட்ட காரணத்தினால் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
பின்னர்நேற்றுமுன்தினம்மாலை சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அவரை மாற்றி விட்டதாக சிறைச்சாலை ஆணையாளர் ஜி.பி. [illegible] நேற்று தெரிவித்தார்.
இந்நிலையில், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள பிரதி பொலிஸ் மா அதிபர் வாஸ் குணவர்தனவையும், கைது செய்யப்பட்டுள்ள ஏனைய மூன்று பொலிஸாரையும் அப்பதவிகளிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்தி வைத்துள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன நேற்று தெரிவித்தார்.



# உயிரிழந்த மீனவர்களுக்காக 20 இல் சர்வமதப் பிரார்த்தனை

## இலங்கையிலும், இந்தியாவிலும்

கொழும்பு, ஜூன் 17
சீரற்ற காலநிலையால் உயிரிழந்த மீனவர்களின் ஆத்மசாந்திக்காக எதிர்வரும் 20ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு இலங்கையிலும், இந்தியாவிலும் சர்வமத வழிபாடுகள் நடைபெறவுள்ளன. இதில் குறிப்பாக, வெள்ளவத்தை புனித லோரன்ஸ் தேவாலயத்தில் திருப்பலி பூஜையும் நடைபெறவுள்ளது.
இலங்கையில் மட்டக்களப்பு, மன்னார், காலி உள்ளிட்ட பகுதிகளிலும், இந்தியாவில் இராமேஸ்வரம், சென்னை, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளிலும் ஒரே நேரத்தில் குறித்த வழிபாட்டை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெள்ளவத்தையில் நடைபெறும் திருப்பலி பூஜையில் மீன்பிடி பிரதியமைச்சர் சரத் குமார குணரத்ன, சர்வமதத் தலைவர்கள், பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினர் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர் என்று நிகழ்வு ஏற்பாட்டாளர் எஸ்.பி.அந்தோனிமுத்து தெரிவித்தார்.
அத்துடன், இந்தியாவில் இதற்கான ஏற்பாடுகளை தமிழக மீன்பிடி சங்கத்தின் ஆலோசகர் தேவதாஸ், தமிழகப் பாரம்பரிய மீன்பிடி சங்கத்தின் தலைவர் எஸ்.சதீஸ் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார். (ங-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காச நோய்த் தாக்கம் 2012 இல் குறைவு

## மருத்துவர் யமுனானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ்.மாவட்டத்தில் காச நோயாளர்களின் எண்ணிக்கை இந்த வருடம் கணிசமான அளவு குறைவடைந்துள்ளது என்று யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் சி.யமுனானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருடம் காசநோயால் 319 பேர் யாழ்.மாவட்டத்தில் காச நோயாளர்களாகச் சிகிச்சை பெற்றிருந்தனர். எனினும் 285 பேர் நோய்த் தாக்கத்திலிருந்து குணமடைந்ததுடன் 13 பேர் இறப்பினையும் சந்தித்தனர். அத்துடன் 8 பேர் தொடர்ந்து சிகிச்சை பெறாமல் இடை நிறுத்தியுள்ளனர்.

கடந்த வருடம் 319 பேர் காச நோயாளர்களாக இனங் காணப் பட்ட நிலையில் இந்த வருடம் கடந்த 5 மாத காலப் பகுதிக்குள் 110 பேர் மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளனர். இந்த நிலையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் காச நோயாளர்கள் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்துள்ளது.

எனினும் வைத்தியசாலையில் நிலவும் ஆளணி மற்றும் இயந்திரங்களின் பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டால் காச நோயாளர் எண்ணிக்கை இன்னும் குறைவடைய வாய்ப்பு உள்ளது.


போர்ச் சூழலின் பின்னர் வன்னி மாவட்டம் உட்பட யாழ்.மாவட்டத்தில் காசநோயாளர்கள் அதிகம் எனக் கணிக்கப்பட்ட நிலையில் சுகாதார அமைச்சின் கண்காணிப்புப் பிரிவு நோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்தியுள்ளது.

குறிப்பாக பொது மக்கள் காசநோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காது அதற்கான சிகிச்சைகளைப் பெற்று நோய்த் தாக்கத்தில் இருந்து விடுபடலாம்.

கடந்த 5 வருட காலப் பகுதிக்குள் மட்டும் 72 பேர் காச நோயால் யாழ்.மாவட்டத்தில் இறப்பைச் சந்தித்துள்ளனர். எனினும் சிகிச்சை பெற்றவர்களில் அதிகளவானோர் குணமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. -என்றார். (வ-14-9)

> "கடந்த வருடம் 319 பேர் காச நோயாளர்களாக இனங் காணப் பட்ட நிலையில் இந்த வருடம் கடந்த 5 மாத காலப் பகுதிக்குள் 110 பேர் மட்டுமே சிகிச்சை பெற்றுள்ளனர்.

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மேலும் இரு விடுதிகள் விரைவில்



தென்மராட்சி, ஜூன் 17

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மேலும் இரு விடுதிகள் விரைவில் ஆரம்பிக்க வைத்தியசாலை நிர்வாகத்தினர் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மது போதைக்கு அடிமையாகி அதிலிருந்து மீள முடியாமல் உள்ளவர்களுக்கு ஒரு விடுதியும், வன் முறைகளுக்கு உள்ளாகும் பெண்கள், சிறுவர்களுக்கென ஒரு விடுதியும் திறக்கப்படவுள்ளன.

வைத்தியசாலைக்கு ஏழு சுகாதார உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு நேற்று கடமைகளைப் பொறுப்பேற்றதையடுத்து விடுதிகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

> "பெண்கள், சிறுவர்களுக்கென ஒரு விடுதியும் திறக்கப் படவுள்ளன.

வைத்தியசாலையில் ஏற்கெனவே ஆண், பெண் விடுதிகளாக இயங்கிய கட்டடத்தில் புதிய பிரிவுகள் இயங்கவுள்ளன. (வ-9)

## அனலைதீவு வைத்தியசாலைக்கு விரைவில் புதிய கட்டடம்

> "கனடா ஒன்றியம் ரூபா 87 லட்சம் நிதியுதவியை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம், ஜூன் 17

அனலைதீவு அரசினர் வைத்தியசாலையில் புதிதாக வைத்தியசாலைக் கட்டடம் ஒன்று அமைக்கப்படுகின்றது. கனடாவில் வதியும் அனலைதீவு மக்கள் அமைப்பான அனலை கனடா மக்கள் ஒன்றியம் கட்டடத்தை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. இதற்கென கனடா ஒன்றியம் ரூபா 87 லட்சம் நிதியுதவியை வழங்கியுள்ளது. விரைவில் கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டு வைத்தியசாலையிடம் ஒப்படைக்கப்படும். (வ-7)



சுனாமி போன்ற இடர்களில் இருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்வது குறித்து எழுவைதீவில் மாணவர்களுக்கு தீவக வலயத்தின் ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் சி.கமலநாதன், செயல்முறைப் பயிற்சி வழங்குவதைக் காணலாம். (ஒ-7)

# தே.அ.அ.இல்லாதோர் அதனைப்பெற நடவடிக்கை

## பவ்ரல் அமைப்பு தீவிரம்

வலி. வடக்கு, ஜூன் 17

வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் யாழ் மாவட்டத்தில் தேசிய அடையாள அட்டை இல்லாதோருக்கு அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பதில் பவ்ரல் அமைப்பு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ் மாவட்டத்தில் கடந்த கால போர் மற்றம் பிறப்புச் சான்றிதழ் இன்மைபோன்ற பல காரணங்களாலும் யாழ். மாவட்டத்தில் அதிகமானோரிடம் தேசிய அடையாள அட்டை அற்ற நிலைமை காணப்படுகின்றது.

வாக்காளர் இடாப்பு பதிவின் போது கூட தேசிய அடையாள அட்டை இலக்கம் கேட்கப்பட்டும் அது இல்லாததால் இலக்கம் பதியப்படாது விடப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில் யாழ்ப்பாணத்தில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களை இனம் கண்டு அவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக் கொடுப்பதில் பவ்ரல் அமைப்பு பிரதேச செயலர்கள் பிரிவு ரீதியாக சென்று நடமாடும் சேவைகளை ஏற்படுத்தி தேசிய அடையாள அட்டைகளைப் பெற உதவிகளையும் வழங்கி ஊக்குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

# வீட்டுக்கு முன் கட்டப்பட்ட ஆடு ஓட்டோவில் திருட்டு

வலி. வடக்கு, ஜூன் 17

வீட்டின் முன்பாக உள்ள வீதியில் கட்டி நின்ற ஆட்டை திருட்டுத்தனமாக சிலர் ஓட்டோவில் ஏற்றிச் சென்ற சம்பவம் சனிக்கிழமை மாலை சுன்னாகம் கிழக்கில் இடம்பெற்றுள்ளது.

சுன்னாகம் ரயில் நிலையத்துக்கு அருகில் வீதியோரத்தில் உள்ள புற்களை மேய்வதற்காக ஆட்டைக் கட்டிவிட்டு அதன் உரிமையாளர் விட்டின்முன்புறமாக நின்றுள்ளார்.

இந்த வேளையில் ஓட்டோவில் வந்த இருவர் வீதியோரத்தில் மேய்ந்து கொண்டு இருந்த ஆட்டின் கயிற்றை ஓட்டோவில் இருந்தவாறு பிடித்து இழுத்து கயிற்றை வெட்டி தாம் வந்த ஆட்டோவில் ஆட்டை ஏற்றிக் கொண்டு தப்பிச்சென்றுள்ளனர்.

ஆட்டின் உரிமையாளர் வீட்டில் இருந்து வெளியே வந்து பார்த்து போது சுமார் பத்தாயிரம் ரூபாவுக்கும் மேல் பெறுமதியுடைய தனது ஆடு திருடப்பட்டதைக் கண்டு அதிர்சியுற்றதுடன் இது சம்பந்தமாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். (வ-86)


> "ஓட்டோவில் வந்த இருவர் வீதியோரத்தில் மேய்ந்து கொண்டு இருந்த ஆட்டின் கயிற்றை ஓட்டோவில் இருந்த வாறு பிடித்து இழுத்து கயிற்றை வெட்டி தாம் வந்த ஆட் டோவில் ஆட்டை ஏற்றிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

# 45 உணவகங்கள் மீது சட்ட நடவடிக்கை

## வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில்

அச்சுவேலி, ஜூன் 17

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள 45 உணவு தயாரிப்பு நிலையங்கள் மீது "மக்கள் பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் உணவு தயாரிப்பதில் ஈடுபட்டமை- விற்பனை செய்தமை" என்ற வகையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் அணியொன்று மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் முடிவில் 45 உணவு தயாரிப்பு விற்பனை நிலையங்கள் மீது மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உணவுச்சாலைகள், உணவகங்கள், வெதுப்பகங்கள் என்பன மக்கள் பயன்பாட்டுக்கு உதவாத வகையில் உணவு தயாரிப்பில் ஈடுபட்டமை, விற்பனை செய்தமை என்ற வகையில் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன.

அச்சுவேலியில் 13 நிலையங்களும், சிறுப்பிட்டியில் 12 நிலையங்களும், நீர்வேலியில் 2 நிலையங்களும், உரும்பிராயில் 09 நிலையங்களும், புத்தூர் பகுதியில் 09 நிலையங்களும் திடீர் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

மேற்படி உணவகங்கள் பலவும் உணவக கட்டமைப்பு நிலை தொடர்பாக கடந்த காலங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு தரநிலைச் சான்றிதழ் பெற்றுக் கொண்டவையே. தற்பொழுது தரநிலைச் சான்றிதழைப் புறம்தள்ளிவிட்டு தரக்குறைவான நிலையில் செயற்பட முற்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (வ-11)

## கலட்டி வீதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம், ஜூன் 17

வட்டுக்கோட்டை கலட்டி வீதிக்கு குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளதாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிராந்திய முகாமையாளர் பே.தபேந்திரகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

கலட்டி வீதிக்கு கடந்த வருடம் நிலத்தடி கீழ் குழாய் பொருத்தும் பணி நிறைவடைந்துள்ளது.

தற்போது தனி இணைப்புத் திட்டத்தின் கீழ் 25 விண்ணப்பதாரிகளுக்கு குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இதற்கான பயனாளிகள் தெரிவினை அந்தப் பிரதேச ஓய்வு பெற்றவருமான வரிப் பரிசோதகர் ரி.எஸ்.சிறிகாந்தன் மேற்கொண்டு வருகின்றார்.

இந்தப் பணி நிறைவுற்றதும் சங்கரத்தை நீர் விநியோகத் திட்டத்தில் இருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்கும் திட்டம் ஆரம்பமாகும்- என்றார். (எ-50)

# தபால் அதிபருக்கான 6 மாத பயிற்சி இன்று ஆரம்பம்

கொழும்புத்துறை, ஜூன் 17

வட பிராந்திய தபால் அதிபர்களுக்கான 6 மாதகால பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவுள்ளது.

யாழ்.அஞ்சல் அலுவலகத்தில் அமைந்துள்ள அஞ்சல் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ள பயிற்சிநெறியின் இறுதியில் சான்றிதழும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடாது யாப்பைத் திருத்தியமைக்கும் முயற்சி

## இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 17

ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடாது. ஆசிரியர் சேவை யாப்பைத் திருத்தி அமைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளமைக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

ஆசிரியர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த விடயம் தொடர்பில் தம்முடன் கலந்துரையாடலில் ஈடுபடாது விட்டால் கல்வி அமைச்சுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

புதிய யாப்பின் பிரகாரம் சம்பளச்சீராக்கல் படியாக 70 ரூபாவை மட்டுமே தற்போது பெறமுடியும். 390 ரூபாவை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் தலா 47 ஆயிரம் ரூபாவை ஒவ்வொருவரும் மீளச் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்தவகையில் 49 ஆயிரத்து 259 பேர் பாதிப்புக்களுக்கும் வருமான இழப்புக்கும் உள்ளாக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் 06/2006 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை அதிபர் சேவை தரம் I , தரம் 2:I இலங்கை ஆசிரியர் சேவை தரம் I ஆகியவற்றுக்கான சம்பளப்படி சீராக்கப்பட்டு கடந்த ஏழரை வருடங்களாக சம்பளச் சீராக்கல் படியும் வழங்கப்பட்டு வந்தது.

ஆனால் கல்வி அமைச்சு தற்பொழுது வெளியிட்டுள்ள ஏப்ரல் 26 ஆம் திகதிய 2013/14 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் இருந்து அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் பெற்று வந்த சம்பளப்படி சீராக்கலை நீக்கம் செய்திருப்பதோடு வழங்கப்பட்ட சீராக்கல்படியை அவர்களிடமிருந்து அறவிடுவதற்கும் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இலங்கை அதிபர் சேவை தரம் I யைச் சேர்ந்த 1,781 பேரும், இலங்கை அதிபர் சேவை 2: I யைச் சேர்ந்த 2,423 பேரும், இலங்கை ஆசிரியர் சேவை தரம் I ஐ சேர்ந்த 43,555 பேரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகும் நிலை உருவாகியுள்ளது.

இது தொடர்பிலேயே இலங்கை ஆசிரியர் சங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் இது தொடர்பாக ஆசிரியர் தொழிற் சங்கங்களுடன் கலந்துரையாடாது தேசிய சம்பள பதவி ஆளணி ஆணைக் குழுவுடனும், பொதுச் சேவைகள் ஆணைக்குழுவுடனும் மாத்திரமே கலந்துரையாடிவிட்டு இந்தத் திட்டத்தை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது. 2011 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து இதனை நடைமுறைப்படுத்தவும் தீர்மானித்துள்ளது.

எனவேதான் இனியும் தாமதிக்காது இது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாட வேண்டும். அல்லது கல்வி அமைச்சுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் - என்று மேலும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை- இலங்கை தரம் பெற்ற அதிபர்கள் சேவை சங்கம் கல்வி அமைச்சரிடம் இந்த விடயம் தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"ஆசிரிய- அதிபர்களின் கொடுப்பனவு'' சீராக்கல் படியை தொடர்ந்து வழங்க வேண்டும். ஏழு வருடங்களுக்கு முன்னர் வழங்கியதை நிறுத்தியதும்; வழங்கிய தொகையை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை எடுப்பதும் ஆசிரியர்-அதிபர்களை பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்குவதுடன் உள ரீதியிலான பாதிப்புக்களுக்கு உள்ளாக்கும். தொடர்ந்து உரிய சம்பளச் சீராக்கல் படியை வழங்க வேண்டும் என்று தமது கோரிக்கையை முன் வைத்துள்ளனர். (க-4-11)

# வெளிநாடுகளுக்குச் செல்லும் ஆண் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 17

வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புக்களைத் தேடிச் செல்லும் ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள்தாக வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மேம்பாட்டு அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டின் கடந்த 5 மாத காலப்பகுதியில் வெளிநாடுகளில் வேலைவாய்ப்புக்களுக்கெனச் செல்லும் ஆண் தொழிலாளர்களில் அதிகரிப் பொன்று காணப்படுவதாகவும், கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது 18 சதவீத அதிகரிப்பைக் காட்டுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை பெரிதும் வளர்ச்சியடைந்து வருவதாகவும், பெண்களுக்குப் பதிலாக தொழில் சார் வேலைவாய்ப்புக்களுக்கு ஆண் தொழிலாளர்கள் செல்வது அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர் இந்த வளர்ச்சி நாட்டின் வெளிநாட்டுச் செலாவணிச் சேமிப்புக்கு நேரடிப் பங்களிப்பை வழங்கி வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த ஆண்டில் வெளிநாட்டில் பணிபுரிபவர்கள் மூலமாக 6 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான அந்நியச் செலாவணியை இலங்கையினால் பெறக்கூடியதாக இருக்குமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்த உழைப்பாளிகளின் பாதுகாப்பு, சமூக நலத் திட்டங்கள் என்பனவற்றுக்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமெனவும் . தரமான வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களைத் தரப்படுத்துவது தொடர்பாக முறையான செயற்றிட்டமொன்று கட்டமைக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-22)

**வேலையாள்கள் தேவை**

யாழில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு Photoshop, Video Editing தெரிந்தவர்கள் தேவை.

தொடர்புகளுக்கு: 0785661886

(38426)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ். கச்சேரி அருகில் அமைந்துள்ள பெரிய மேல்மாடி வீடு வாடகைக் குண்டு. அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGO'S) விரும்பத்தக்கது.

0777120238, 0778736700

(38424)

Reg.No.GL41

UNHCR
The UN Refugee Agency

**INVITATION FOR BID**
**SEWALANKA FOUNDATION**
**VAVUNIYA**

**SEWALANKA FOUNDATION** is a National Non-Governmental Organization (NGO) which has been in existence for the last nineteen years serving the needy and the deserving, severely affected either by natural disasters or by internal conflict across the entire country, and generously funded by the **UNHCR.**

1. **Sealed Bids are invited for the following works from eligible and qualified bidders for the Renovation of 100'x30' & 120'x25' Class Room Block below up to 01st of July 2013 at 2.30 p.m.** and will be **open on 01st of July 2013 at 2.45 p.m** in the District Office, No 75, Thirunagar Road, Kilinochchi. Late bids will be rejected. The bidders or their authorized representatives are invited to be present at the opening occasion.
2. Bidding will be conducted through Local Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered having registered office in North, in the field of Building Construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Qualifications requirements are indicated in section 1 item 5 of the Bidding document. Additional details are provided in the bidding Data sheet (Section -02)
5. Interested bidders may obtain further information from **Project Manager, District Office, No 75, Thirunagar Road, Kilinochchi (Tel No: 021-2285082) or** E-Mail to killinochi.finance@sewalanka.org and inspect the bidding documents at the same address on any working day from 9.00 hrs to 17.00 hrs on or before **28th of June 2013 at 5.00 p.m.**
6. Pre-bid Consultation : The firms those are interested for construction before to bid, a pre bid consultation will be given to them on **24th of June 2013 from 2.00pm** onwards regarding information on the requirements, specification, standards of the construction work
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Project Manager, District Office, No 75, Thirunagar Road, Killinochchi** from **2013.06.18 until 2013.06.28 from 9.00 hrs to 17.00 hrs** upon payment of non-refundable fees of **Rs. 2,000.00** for each bid. The method of payment should be by cash.
8. Prepared Bids adhering to all the conditions specified in the Bid Documents should be put into the tender box at **District Office, No 75, Thirunagar Road, Kilinochchi,** or sent by registered post addressed to: **The Project Manager, Sewalanka foundation, District Office, No 75, Thirunagar Road, Kilinochchi, Srilanka to receive on or before 01st of July 2013 at 2.30 pm. Tender code number must be mentioned in the top of the envelop.**
9. The validity should be offered for 60 days from the time of opening of bids and 180 days from the binding of contract agreement.

The bill of quantity envisaged in the projects advising to quote to the works as per the specifications on bid codes are as follows.

| Tender Code | Narration of the works | Total estimated amount in LKR | Required ICTAD Grade | Bid Bond in LKR |
|---|---|---|---|---|
| SLF/UNHCR/ MULLAI/P-II/01 | Renovation of 100'x30' Class Room Black at Arasarathnam GTMS in Mullaitivu District. | 3.4 Mn | C7 or above | 70,000/- |
| | Renovation of 120'x25' Class Room Black at Arasarathnam GTMS in Mullaitivu District. | 3.6 Mn | | |

Any expenses arising on the preparation of bid document and submission should not be reimbursed.

**Project Manager,**
**SEWALANKA FOUNDATION,**
**District Office,**
**75. Thirunagar Road,**
**Kilinochi.**

(C9870)

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல் நாளை

யாழ்ப்பாண வர்த்தகர்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாகவும், இந்தப்பிரச்சினைதொடர்பில் அவர்களை மீட்டெடுப்பது தொடர்பாகவும் யாழ்.வணிகர் கழகம் இலங்கை மத்திய வங்கி உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 3 மணிக்கு யாழ். வணிகர் கழக பணிமனையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து வர்த்தக சங்கங்களில் இருந்து 5 முக்கிய பிரதிநிதிகளை பங்குபற்றுவதற்காக அனுப்பி வைக்குமாறு கேட்கப் பட்டுள்ளது. (எ)

## விசேட தேவை உடையோருக்கு அரை நிரந்தர வீட்டுத்திட்டம்

வலி.தென் மேற்கில் சமூக சேவைகள் பிரிவு ஊடாக விசேட தேவையுடையோர்க்கு அரை நிரந்தர வீடு அமைக்க நிதியுதவி வழங்கப்படுகிறது.

முதற்கட்டமாக ஒரு லட்சம் ரூபா விசேட தேவையுடைய பயனாளிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது. அடுத்தகட்டமாக மிகுதி ஒன்றரை லட்சம் ரூபா விரைவில் வழங்கப்படவுள்ளது.

வலி.தென் மேற்கு பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார். (வ-14)

**நல்லைக் குமரன் மலர் (21) - 2013**



நல்லூர் கந்தப் பெருமானின் மகோற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவால் வருடந்தோறும் வெளியிடப்படும்

**நல்லைக்குமரன்**

மலருக்கு (21) பொருத்தமான ஆக்கங்களை வேண்டி நிற்கின்றோம்.

**ஆக்கங்கள்**

- ஏற்கனவே வெளிவந்த நல்லைக் குமரன் மலர்கள் அல்லது வேறு மலர்களில் வெளிவராததாக இருத்தல் வேண்டும்.
- சைவசமய ஆய்வுகளாகவும், சைவசமயத் தத்துவ விளக்கங்களாகவும் நல்லைக் கந்தனின் பெருமைகளை இயம்புவனவாகவும் இருத்தல் அவசியம்.
- கணினி மூலம் பாமினி எழுத்தில் [Font Size 12] பதிப்புச் செய்து அச்சுப் பிரதியாகவும் இறுவெட்டிலும் [ஆகக்கூடியது 5 பக்கம்] தருதல் வேண்டும்]

ஆக்கங்கள் யாவும்
பதிப்பாசிரியர்
இல 21/3A, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்
என்னும் முகவரிக்கு 30.06.2013ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

*செ.பிரணவநாதன்*
*தலைவர் / ஆணையாளர்*
*சைவசமய விவகாரக் குழு, யாழ். மாநகரசபை.*

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முகாமைத்துவ உதவியாளராக பதவி வகிக்கும்

**திரு. விஜயரட்னம் சசிக்குமார்** அவர்கள்

அகில இலங்கை சமாதான நீதிவானாக கடந்த [14.06.2013]இல் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். இவரது பணி சிறக்கப் பாராட்டி வாழ்த்திப் பெருமகிழ்வடைகின்றேன். [37156][16.14.9]


Best Wishes

J.சஞ்சை
24/2, சிவநகர், உருத்திரபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கில் நடப்பட்டன 10 ஆயிரம் மரங்கள்

### சுற்றுச் சூழல் தினத்தையொட்டி



யாழ்ப்பாணம், ஜூன் 17
உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வடமாகாணத்தில் 10 ஆயிரம் பயன்தரு மரங்கள் நடப்பட்டுள்ளன.
கடந்த மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரை வடமாகாணத்தில் உள்ள உள்ளூராட்சிச் சபைகள் மற்றும் ஏனைய திணைக்களங்கள் ஊடாக பயன்தரு மரங்கள் நடப்பட்டுள்ளன. இவ்வாறு நடப்பட்ட மரங்களை தொடர்ச்சியாக ஆறு மாத காலத்துக்குப் பராமரிக்குமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.
இதேவேளை ஜனாதிபதியின் பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஐந்து வருட காலமாக பல லட்சம் மரங்கள் அரச திணைக்கள வளாகங்களில் நடப்பட்டன.
இவ்வாறு நடப்பட்டு செழிப்பாக வளர்ந்த மரங்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.
விவசாயத் திணைக்களத்தின் ஊடாக இந்த வருடம் ஒரு லட்சம் மரம் நடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்படவுள்ளமை இங்குகுறிப்பிடத்தக்கது. (வ-50)

## சுகாதார சீர்கேடான கொல்களத்தில் இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள்

### அச்சுவேலி, புத்தூர் மக்கள் கடும் விசனம்

அச்சுவேலி, ஜூன் 17
வலி.கிழக்குப் பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் கொல்களம் சுகாதார சீர்கேடான வகையில் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.
இதற்கு சுகாதாரப் பகுதியினர் தடைவிதித்துள்ள போதிலும் தற்போதும் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றது. சுகாதார சீர்கேடான இந்தக் கொல்களத்தில் சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படாமல் இறைச்சி வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதாகப் பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.
அச்சுவேலி வடக்கு வல்லையிலுள்ள மயானத்துக்கு அருகில் அமைந்துள்ள இந்தக் கொல்களம் பயன்பாட்டுக்கு உதவாததும் சுகாதாரச் சீர்கேடானதும் என சுகாதாரப் பகுதியினரால் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னரே வலி.கிழக்குப் பிரதேச சபை நிர்வாகத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. மேலும் தமது கண்காணிப்பு நடவடிக்கையையும் இடைநிறுத்திவிட்டனர். ஆனால் தொடர்ந்து சுகாதாரப் பகுதியினரின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்படாமல் இங்கு மாடுகள் வெட்டப்பட்டு அச்சுவேலி- புத்தூர் பகுதிகளிலுள்ள மாட்டிறைச்சி விற்பனை நிலையங்களில் விற்பனை இடம்பெற்று வருகின்றது.
இறைச்சிக்காக வெட்டப்படும் மாடுகள் 24 மணித்தியாலயத்துக்கு முன்னர் அதற்குரிய தொழுவத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மாட்டின் உடல்நிலை, வயது, பால் மற்றும் சட்டபூர்வமான தன்மை இறைச்சி வெட்டுவதற்கு உகந்ததுதான் என்று பிரதேச கால்நடை வைத்திய அதிகாரியாலும் பொதுச் சுகாதாரப் பரிசோதகராலும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் கொல்களத்தில் வெட்டப்பட்டு விற்பனைக்குத் தயாராகும் இறைச்சியை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பரிசீலனை செய்து விற்பனைக்கு உரியது என்பதை உறுதி செய்து இறைச்சியில் முத்திரை இடல் வேண்டும். இந்த நடைமுறை ஒழுங்கு விதிகள் எதுவும் பின்பற்றப்படாமலேயே அச்சுவேலி, புத்தூர் பகுதிகளிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை இடம்பெறுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
இந்த விடயத்தில் வலி.கிழக்குப் பிரதேச சபை நிர்வாகம் மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-11)



## தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளில் தொண்டராசிரியராகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான விசேட கலந்துரையாடல் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.
ஜனாதிபதியின் இணைப்பாளர் ச.கனகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சம்பந்தப்பட்ட தொண்டராசிரியர்களை சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பார்வைக் குறைபாடு இருப்போருக்கு நலத்திட்டம்


### சுகாதாரத் திணைக்களத்தால்

கண் பார்வை இழந்தவர்கள், பார்வையில் குறைபாடு காணப்படுபவர்களுக்கு மாகாண சுகாதாரத் திணைக்களமும் சமூக சேவைகள் திணைக்களமும் இணைந்து பல்வேறு நலத்திட்டங்களை வழங்கவுள்ளன.
கண்பார்வை அற்றவரை குடும்பத் தலைவராகக் கொண்ட குடும்பத்துக்கு மாதாந்த உதவித் தொகை வழங்கப்படுவதுடன் இரண்டரை லட்சம் ரூபா செலவில் வீடமைப்புத் திட்டமும் கண் பார்வையற்றவர்களுக்கு மேலும் பல உதவிகளும் வழங்கப்படவுள்ளன. பார்வையில் குறைபாடு உள்ளவர்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கல் உட்பட நலத் திட்டங்களும் வழங்கப்படவுள்ளன.
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த கண் பார்வையற்றவர்கள், பார்வையில் குறைபாடு காணப்படுபவர்கள் உரிய மருத்துவச் சான்றிதழுடன் தத்தமது பிரிவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பரிந்துரை பெற்று பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தமது விண்ணப்பங்களை கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## இவர்கள் ஏன் இங்கே...?







சுழிபுரம் பறாளையம்பதி சித்தி விநாயகர் ஆலயத்தின் வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச் சுவர்களில் காணப்படும் ஓவியங்கள் நயன்மார்களின் ஓவியங்கள் அல்ல...! நாயன்மார்களுக்குப் பதிலாக முன்னாள் அரசியல் தலைவர்களின் ஓவியங்கள் அடுத்தடுத்து காணப்படுகின்றன. அந்த அரசியல்வாதிகளில் தமிழர்களுக்கு 'வேட்டு' வைத்தவர்களும் காணப்படுகின்றனர். அந்தச் சுவரை ஆலயத்தினர் ''சமாதான அரண் 2000'' எனக் குறிப்பிட்டுள்ளனர். ஜே. ஆர். ஜெயவர்த்தன, சந்திரிக்கா, பிறேமதாச, ரணில், மஹிந்த ராஜபக்ஷ, தந்தை செல்வா , அமிர்தலிங்கம் போன்றவர்களும் சுவர் ஓவியங்களில் காணப்படுகின்றனர். 'வேட்டு' வைத்தவர்கள் யார், யார் என்பதை நீங்களே தெரிவு செய்து கொள்ளுங்கள்...!

## இளைஞர்களின் விளையாட்டு முயற்சிக்கு சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூன் 17
இளைஞர்களின் விளையாட்டு முயற்சிகளுக்கு சமூகம் சகல நிலையிலும் ஒத்துழைப்பு வழங்கி உற்சாகப்படுத்த வேண்டும். அப்போதுதான் விளையாட்டுத் துறையில் யாழ்.மாவட்ட தனித்துவத்தையும் பெருமையையும் நிலைநாட்டச் செய்ய முடியும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
வலி.கிழக்குப் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டு அரங்கில் அண்மையில் பிரதேச செயலர் எம். பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:



யாழ்.மாவட்டம் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கியது. தனித்துவமான பெருமையைக் கொண்டிருந்தது. அந்த மேல் நிலையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும். இளைஞர்களின் விளையாட்டு நிகழ்வில் சமூகத்தின் சகல மட்டத்தினரும் கலந்துகொண்டு உற்சாகப்படுத்த வேண்டும்.
இன்றைய விளையாட்டு விழா நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்ற போதிலும் பொதுமக்கள் கலந்துகொண்டிருக்கின்ற அளவு மிகக் குறைவாக உள்ளது. இந்த நிலை கவலை அளிக்கின்றது. இந்த நிலை மாற வேண்டும்.
பிரதேச செயலர் பிரிவு வாரியாக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே விளையாட்டு நிகழ்வுகளை நடத்த வேண்டும். இளைஞர்களின் திறமைக்கு களம் அமைத்துக் கொடுத்து அவர்களின் ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு சமூகம் உரிய முறையில் மதித்து கௌரவிக்க வேண்டும்.
விளையாட்டில் உயர்வு, தாழ்வுக்கு இடமில்லை. இன்றைய தோல்வியை நாளைய வெற்றியின் முதற்படியாகக் கொண்டு [illegible] வேண்டும்- என்றார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்தது கூட்டணி

## முடிவுக்கு வந்தது பீகாரின் கூட்டு ஆட்சி

பாட்னா, ஜூன் 17
தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசில் இருந்து விலகுவதாக ஐக்கிய ஜனதா தளம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பை ஐக்கிய ஜனதா தள தேசியத் தலைவர் சரத் யாதவ் மற்றும் பீகார் முதல்வர் நிதிஷ்குமார் ஆகியோர் இணைந்து அறிவித்தனர்.
பா.ஜ.கவில் குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு அளிக்கப்படும் முன்னுரிமையை அடுத்து கட்சிக்குள்ளும், அதன் கூட்டணி கட்சிகளுக்குள்ளும் பெரும் அதிருப்தி எழுந்துள்ளது. அதன் தொடர்ச்சி யாகவே ஐக்கிய ஜனதா தளம் கூட்டணியில் இருந்து விலகியுள்ளது.
இந்த முடிவு குறித்து சரத் யாதவ் மற்றும் நிதீஷ்குமார் ஆகியோர் இணைந்து ஊடகவியலாளர்சந்திப்பை நடத்தினர். அவர்கள்சந்திப்பின்போது கருத்துத் தெரிவிக்கையில், ''தேசிய ஜனநாயகக் கூட்டணியில் மிகப் பெரும் கட்சியாக ஐக்கிய ஜனதா தளம் இருந்துவந்தது. தற்போது நாங்கள் கூட்டணியில் இருந்து விலகியுள்ளோம். கடந்த 17 ஆண்டுகளாக கூட்டணியில் இருந்தோம். பாரதிய ஜனதா கட்சியின் தற்போதைய செயற்பாடுகள் திருப்தி தருவனவாக இல்லை. எங்களால் முடிந்தளவு கூட்டணி தர்மத்தைக் காப்பாற்ற முயற்சித்தோம். அது முடியாத நிலையில் கூட்டணியில் இருந்து விலகுவதற்கு முடிவு செய்துள்ளோம். இது தொடர்பாக ஆளுநரை எதிர்வரும் 19 ஆம் திகதி சந்தித்து சிறப்பு சட்டசபைக் கூட்டத்தை கூட்டவும், எமது பலத்தை நிரூபிப்பதற்கான நம்பிக்கை வாக்கெடுப்பு நடத்தவும் அனுமதி கேட்கவுள்ளோம்'' என்று தெரிவித்தனர். (ற)

## காங்கிரஸ் கூட்டணிக்கு அழைக்க மாட்டோம்

### ஐக்கிய ஜனதா தளம் குறித்து ராகுல்



யாழ்ப்பாணம், ஜூன் 17
தேசிய ஜனதா கூட்டணியில் இருந்து ஐக்கிய ஜனதா தளம் விலகியுள்ள நிலையில், காங்கிரஸ் கூட்டணியில் சேருமாறு அதனை அழைக்க மாட்டோம் என்று தெரிவித் துள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல் காந்தி.
''கூட்டணியில் சேருமாறு அழைப்பு விடுப்பது குறித்த விடயம் காங்கிரஸ் உட்கட்சி சம்பந்தப்பட்ட விடயம்.
இதுகுறித்து நான் எந்த முடிவும் எடுக்க முடியாது என்பதை வெளிப்படையாகவே கூறுகின்றேன்.
யாருக்கும் அழைப்பு விடுக்கும் எண்ணம் இதுவரை கட்சியில் இல்லை.'' என்று தெரிவித்துள்ளார் ராகுல்.
காங்கிரஸ் கட்சியின் பிரதம வேட்பாளராகும் சந்தர்ப்பங்கள் உங்களுக்கு உள்ளதா? என்று அவரிடம் கேட்டபோது, ''இதுகுறித்து என்னிடம் கேட்காதீர்கள். காங்கிரஸ் கட்சியிடம் கேளுங்கள். எனக்குத் தரப்படும் பணிகளையே நான் செய்கின்றேன்'' என்று தெரிவித்தார் அவர். (ற)

## பதவி விலகினார் ஜோஷி

புதுடில்லி, ஜூன் 17
மத்திய தரைவழி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் சி.பி. ஜோஷி பதவி விலகியுள்ளார். குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியிடம் அவர் கையளித்த பதவி விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
மத்திய அமைச்சரவை இன்று மாற்றியமைக்கப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே இவர் பதவி விலகியுள்ளார்.
ஏற்கனவே மற்றொரு அமைச்சரான அஜெய் மாகென் பதவி விலகியுள்ள நிலையிலேயே ஜோஷியின் பதவி விலகலும் இடம்பெற்றுள்ளது.
தி.மு.க. மற்றும் திரிணமூல் காங்கிரஸ் மத்திய கூட்டணி ஆட்சியில் இருந்து வெளியேறியுள்ள நிலையில், அண்மையில் ரயில்வே துறை அமைச்சர் பன்சால் மற்றும் சட்டத்துறை அமைச்சர் அஸ்வனி குமார் ஆகியோரும் பதவி விலகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ற)

## கோபுரம் சாய்ந்தது....



இயக்குநரும், நடிகரும், தமிழின உணர்வாளருமான மணிவண்ணனின் உடல் நேற்று போரூரில் தீயுடன் சங்கமமானது. பொதுமக்கள், அரசியல் தலைவர்கள், நடிகர்கள் எனப் பெருந்திரளானோர் திரண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.
தமிழின உணர்வாளரான இவர் ஈழத் தமிழர்களுக்காக தமிழகத்தில் குரல் கொடுத்து வந்தவர்களில் முக்கியமானவராவார். தமிழுணர்வு காரணமாக அவர் இலங்கைக்கு நேரடியாக வந்து தமிழர்களின் உணர்வுகளை கொண்டு சென்று தமிழகத்தில் பிரதிபலித்தவர். இவரது மறைவுக்கு தமிழீழ நாடு கடந்த அரசு மற்றும் புலம் பெயர் தமிழர் அமைப்புகள் இரங்கல் வெளியிட்டுள்ளன. (ற)

## செங்கல்பட்டு முகாம் செய்யாறுக்கு மாற்றம்

சென்னை, ஜூன் 17
செங்கல்பட்டு சிறப்பு முகாம் செய்யாறுக்கு இடமாற்றப்படவுள்ளது என்று கூறப்படுகிறது. பாதுகாப்புக் காரணங்களுக்காகவே தமிழக அரசின் உள்துறை இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.
தற்போது இந்த முகாமில் 43 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவர் நைஜீரிய நாட்டைச் சேர்ந்தவர்கள். ஏனைய அனைவரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் செய்யாறில் உள்ள முகாமுக்கு மாற்றப் படவுள்ளனர்.
செங்கல்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்கள் தம்மை தமது நாட்டுக்குத் திருப்பி அனுப்புமாறு கோரி பல தடவைகள் போராட்டங்கள் நடத்தி வந்ததுடன், தம்மை முகாங்களில் இருந்து விடுவிக்குமாறும் கோரிக்கை விடுத்து வந்தனர். எனினும் தற்போது அவர்கள் அனைவரும் செய்யாறு முகாமுக்கு இடமாற்றப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

## இந்தியாவின் சிறந்த தந்தை ஷாருக்கான்



ஐதராபாத், ஜூன் 17
நேற்று தந்தையர் தினம் கொண்டாடப்பட்ட நிலையில், தந்தையர் தொடர்பாக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில் இந்தியாவில் சிறந்த தந்தையாக நடிகர் ஷாருக்கான் தெரிவு செய்யப்பட்டார்.
பிரபல பொலிவூட் நடிகரான ஷாருக்கானுக்கு ஆர்யன் என்ற மகனும், சுஹானா என்ற மகளும் உள்ளனர். சிறந்த தந்தை பிள்ளைகள் உறவு முறையிலும் அவர்களே முன்னிலையில் உள்ளனர்.
இரண்டாம் இடத்தில் நடிகர் அமிதாப் பச்சனும், மூன்றாம் இடத்தில் இந்திய கிரிக்கெட் வீரர் டெண்டுல்கரும் தெரிவாகியுள்ளனர். (ற)

## சூறாவளியால் வீசப்பட்ட குழந்தை உயிரிழந்தது

### தேனியில் பரிதாபச் சம்பவம்

சென்னை, ஜூன் 17
திடீரென வீசிய சூறாவளிக் காற்றால் தூக்கி வீசப்பட்ட 3 மாதக் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. இந்தச் சம்பவம் தேனி மாவட்டத்தில் உள்ள போடி பகுதியில் இடம்பெற்றுள்ளது.
தேனி மாவட்டம் போடி அருகே உள்ள சிலமலை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் சிவகுமார், போதுமணி தம்பதியினர். இரு வருடங்களுக்கு முன்னர் திருமணமான இவர்களுக்கு 3 மாதக் குழந்தை ஒன்று இருந்தது.
நேற்றுமுன்தினம் இரவு குழந்தையை வீட்டின் முன் இருந்த தகரக் கொட்டகையில் தொங்கவிடப்பட்டிருந்த தொட்டிலுக்குள் தூங்க வைத்தனர்.
அப்போது திடீரென கடும் வேகத்தில் சூறாவளிக் காற்று வீசியது. காற்றின் வேகம் காரணமாக தகரக் கொட்டகை சிறிது தூரம் தூக்கி வீசப்பட்டது. அதிலிருந்த குழந்தையும் கொட்டகையுடன் தூக்கி வீசப்பட்டது.
தூக்கி வீசப்பட்ட குழந்தை நிலத்தில் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது என்று கூறப்படுகிறது. (ற)



## பொலிஸ் நிலையத்தில் பெண் தற்கொலை; டில்லியில் பரபரப்பு

புதுடில்லி, ஜூன் 17
டில்லி பொலிஸ் நிலையத்தில் இளம் பெண் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார். அதையடுத்து அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
டெல்லியில் வசித்து வரும் பங்களாதேஷைச் சேர்ந்த 16 வயதுடைய பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்துள்ளார்.
இரு தினங்களுக்கு முன்னர் காணாமற் போனதாகக் கூறப்படும் குறித்த பெண், ரயில் நிலையத்தில் கண்டு பிடிக்கப்பட்டு பொதுமக்களால் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். அதையடுத்து அவர் பொலிஸ் நிலையத்தில் பெண்கள் உடைமாற்றும் அறையில் தங்க வைக்கப்பட்டார். எனினும் நேற்று மாலை அவர் பொலிஸ் நிலையத்தில் தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
இதுகுறித்து அந்தப் பெண்ணின் பெற்றோரிடம் பொலிஸார் தொடர்பு கொண்டபோது, குறித்த பெண்ணுக்கு திருமண ஏற்பாடுகள் செய்யப்பட்டதாகவும், அது பிடிக்காமல் அவர் வீட்டை விட்டு வெளியேறிய தாகவும் தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
எனினும் இந்தச் சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
குறித்த இளம்பெண் பொதுமக்களால் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஏன் பெற்றோருக்குத் தகவல் தெரிவிக்காமல் இறந்த பின்னர் தெரிவிக்கப்பட்டது என்று கேள்வி எழுப்பப்படுகிறது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 பேரின் தரவுகளை வழங்கியது பேஸ்புக்

நியூயோர்க், ஜூன் 17
2012 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் பிரபல சமூக வலைத்தளமான 'பேஸ்புக்'கில் 9 ஆயிரம் முதல் 10 ஆயிரம் பேரின் கணக்குகளிலுள்ள தரவுகளை அமெரிக்க அரசு கோரிப் பெற்றுள்ளது.
தேசிய பாதுகாப்பு விடயங்களைக் கருத்திற் கொண்டு அமெரிக்க அரசால் குறித்த தரவுகள் கோரப்பட்டன என்கிறது 'பேஸ்புக்' நிறுவனம்.
சிறுவர்கள் காணாமல் போதல், உள்ளூரில் இடம்பெறும் குற்றச் செயல்கள், பயங்கரவாதத் தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலேயே அமெரிக்க புலனாய்வு அமைப்பால் தரவுகள் கோரப்படுகின்றன என்று 'பேஸ்புக்' நிறுவனப் பேச்சாளர் தெரிவித்தார். (ற)




அமெரிக்காவின் இரகசிய கண்காணிப்புத் திட்டத்தை அம்பலப்படுத்திய சி.ஐ.ஏ. முன்னாள் பணியாளர் ஸ்னோடென்னுக்கு ஆதரவாக ஹாங்காங்கில் ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் இணையத்தளம் மூலம் பரிமாற்றம் செய்யப்படும் தகவல்களை அமெரிக்கா இரகசியமாகக் கண்காணித்து வருகிறது என்ற தகவலையே எட்வர்ட் ஸ்னோடென் அம்பலப்படுத்தியிருந்தார். இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள நிலையில், ஸ்னோடென் தற்போது ஹாங்காங்கில் தஞ்சம் புகுந்துள்ளார். (ற)

# ஜின்னாவின் வீட்டின் மீது தாக்குதல்

இஸ்லாமாபாத், ஜூன் 17
பாகிஸ்தானின் தந்தை என்று போற்றப்படும் முகம்மது அலி ஜின்னாவின் வீடு பயங்கரவாதிகளால் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.
பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் உள்ள அவரது வீட்டின்மீது பயங்கரவாதிகள் கையெறி குண்டுகள் கொண்டு தாக்குதல் நடத்தியதில் அந்தப் பழமையான வீடு முற்றாகச் சேதமடைந்துள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
குறித்த வீட்டில் வாழ்ந்து வந்த சுதந்திரப் போராட்ட வீரர் ஜின்னா இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் காசநோயால் பாதிக்கப்பட்டு 1948 ஆம் ஆண்டு குறிப்பிட்ட வீட்டிலேயே உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# பேச விருப்பம்

## அமெரிக்காவை அழைக்கிறது வடகொரியா

பியாயாங், ஜூன் 17
கடந்தவாரம் தென்கொரியாவுடன் இடம்பெறவிருந்த பேச்சுக்கள் தடைப்பட்டுப் போன நிலையில் அமெரிக்காவுடன் பேசுவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளது வடகொரியா. பாதுகாப்பு மற்றும் அணுசக்தி குறித்த விடயங்கள் குறித்தே பேச்சுக்கள் நடத்துவற்கு வடகொரியா விருப்பம் தெரிவித்துள்ளது.



கடந்தவாரம் வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையே நடைபெறவிருந்த பேச்சுக்கள் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தடைப்பட்டது. அதையடுத்து இருநாடுகளுக்கிடையிலான முறுகல் நிலை தொடர்ந்து வருகின்றது.
இந்தநிலையில் திடீரென அமெரிக்காவுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்துள்ள வடகொரியா, அதற்காக அமெரிக்கா எந்தவொரு நிபந்தனைகளையும் விதிக்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளது.
''பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையை மாற்றவும், அமைதி ஒப்பந்தம் ஒன்று தொடர்பாகவும், அணுசக்தி தொடர்பாகவும் நேர்மையான முறையில் விவாதிக்கவுமே நாம் இந்தப் பேச்சுக்கள் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். எமது நல்லெண்ணம் கொண்ட உறுதியான நடவடிக்கையை அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வேண்டும்'' என்று தெரிவித்துள்ளது வடகொரியா.
அணு ஆயுத சோதனையை அடுத்து, ஐ.நா. பொருளாதாரத் தடைகளை விதித்த பின்னர் அமெரிக்கா குறித்து கூடான அறிக்கைகளை வடகொரியா வெளியிட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



# ஈரான் ஜனாதிபதி ரௌஹானி


தெஹ்ரான், ஜூன் 17
ஈரானில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மிதவாத கட்சியைச் சேர்ந்த ஹசன் ரௌஹானி (வயது-64) 51 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 3.67 கோடி பேர் வாக்களித்தனர். அதில் ரௌஹானிக்கு ஆதரவாக 1.86 கோடி வாக்குகள் பதிவாகி உள்ளன.
இருமுறை பதவி வகித்த ஜனாதிபதி முகமது அஹமதி நிஜாத், இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை. அந்த நாட்டு சட்டப்படி 2 தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

# ஆப்கனின் பாதுகாப்பை இராணுவம் பொறுப்பேற்கும்

காபூல், ஜூன் 17
ஆப்கனின் பாதுகாப்பை அந்த நாட்டின் இராணுவம் முழுமையாகப் பொறுப்பேற்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆப்கனில் இருந்து வெளிநாட்டுப் படைகள் வெளியேறி வரும் நிலையில் தற்போது 92 மாவட்டங்களின் பாதுகாப்பு மட்டுமே நேட்டோ படைகளின் வசம் உள்ளன. தற்போது அவற்றையும் ஆப்கன் இராணுவம் பொறுப்பேற்கவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்ச்சியில் ஆப்கன் ஜனாதிபதி கலந்து கொள்வார் என்று கூறப்பட்ட போதும் அதற்கான திகதி அறிவிக்கப்படவில்லை. (ற)

# தூக்குத் தண்டனை; ஐ.நாவில் விவாதம்

ஜெனிவா, ஜூன் 17
தூக்குத் தண்டனையை இரத்துச் செய்வது குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் விவாதம் நடத்தப்படவுள்ளது.
தற்போதும் சில நாடுகளில் தொடர்ந்தும் தூக்குத் தண்டனை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலைமை கவலை அளிப்பதாக அமைகின்றது என்று தெரிவித்துள்ள ஐ.நா. சபை, இதுகுறித்து விவாதம் ஒன்றை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.
"தூக்குத் தண்டனையை இரத்துச் செய்வது குறித்து ஐ.நா. சபையில் விவாதம் நடத்தப்படவுள்ளது. வருடாந்தம் ஆயிரக்கணக்கானவர்களுக்கு தூக்குத் தண்டனைகள் நிறை வேற்றப்படுவதன் மூலம் சர்வதேச சட்டங்கள் மீறப் படுகின்றன.
தற்போது 150க்கும் அதிகமான நாடுகள் தூக்குத் தண்டனையை இல்லா தொழித்துள்ளன. அல்லது நடைமுறைப்படுத்து வதைக் கைவிட்டுள்ளன. எனினும் மத்திய கிழக்கில் சில நாடுகளில் தூக்குத் தண் டனை தற்போதும் நடை முறையில் உள்ளமை கவலை தருகின்றது.
இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நா. குழுவொன்று இந்த மாத இறுதியில் விவாதம் ஒன்றை நடத்தவுள்ளது.'' - என்று தெரிவித்துள்ளார் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன். (ற)




# நலம் பெறப் பிரார்த்தனை

ஜொகன்னஸ்பேர்க், ஜூன் 17
தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரது உடல்நலம் சீராக வேண்டி தென்னாபிரிக்காவின் பல்வேறு பகுதிகளில் பிரார்த்தனைகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.
நுரையீரல் அழற்சி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள மண்டேலாவின் உடல்நிலை தொடர்ந்தும் ஆபத்தான நிலையிலேயே இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# அடிக்கடி வந்த சிறுநீரால் 'கட்' ஆகியது சம்பளம்

மெல்பேர்ன், ஜூன் 17
அடிக்கடி சிறுநீர் கழிப்பதற்குச் சென்ற ஊழியர்களின் சம்பளத்தைக் குறைத்து அதிர்ச்சியளித்துள்ளது ஆஸி. நிறுவனம் ஒன்று.
ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த நிறுவனம் 'ஏஜிஸ் ஆஸ்திரேலியா'. அங்கு ஏராளமானோர் பணியாற்றி வருகின்றனர்.
பணியாளர்களின் வருகையைப் பதிவு செய்வதற்கு அந்த நிறுவனம் தானியங்கி செயன்முறையைப் பயன்படுத்தி வருகின்றது. அதாவது 90 செக்கன்களுக்கு மேல் பணியாளர் தனது இருக்கையில் இல்லை என்றால் அவரது கணினி செயற்பாட்டை நிறுத்தி விடும். பின்னர் அவர் அதற்கான காரணத்தை உட் செலுத்தியே பணியைத் தொடர முடியும்.
பணியாளர்களில் மூவர் அடிக்கடி தமது இருக்கையில் காணப்படுவதில்லை. அதற்கான காரணமாக அவர்கள் சிறுநீர் கழிக்கப் போவதாக தெரிவித்து வந்துள்ளனர். பொறுத்துப் பார்த்த நிறுவனம் அவர்களின் சம்பளத்தில் 'அடிக்கடி சிறுநீர் கழிக்கச் சென்றமைக்காக' என்று கூறி ஒரு தொகையைக் 'கட்' செய்து விட்டது.
அதை எதிர்த்து அந்த மூவரும் நீதிமன்றம் சென்றனர். பல வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர் 'கட்' செய்த தொகையைதிருப்பி வழங்க உத்தரவிட்டது நீதிமன்றம்.
''அவர்களுக்கு காலை, மதியம், மாலை என இடைவேளைகள் வழங்கப்படுகின்றன. அதை விடவும் அவர்கள் அடிக்கடி 'அங்கு' போவதால் பணிகள் பாதிப்படைகின்றன' என்கிறது அந்த நிறுவனம். (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் இராணுவ முகாம்கள் திட்டமிட்ட முறையில் அமைப்பு

## கூட்டமைப்பு குற்றச்சாட்டு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனின் இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் மட்டக்களப்பின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் செய்தியாளர்களுக்கு விளக்கமளித்தனர்.

மட்டக்களப்பு, ஜூன் 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இராணுவ முகாம்களும் விகாரைகளும் திட்டமிட்ட முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன. வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டும் என்பதுதான் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையின் பரிந்துரை. ஆனால் இங்கு இராணுவ முகாம்கள் அதிகரித்து வருகின்றன.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சனிக்கிழமை மாலை அவரது இல்லத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராணுவம் இருக்கும் இடத்தில் எல்லாம் புத்த விகாரைகள் அமைக்கப்படுகின்றன. அவை திட்டமிட்ட செயற்பாடுகளாகும். அரசு போரின் பின்னர் மக்கள் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்தவில்லை. இனரீதியாகவும் மதரீதியாகவும் முரண்பாடுகளை ஏற்படுத்த முயல்கின்றது. அதை எங்களால் அனுமதிக்க முடியாது.

முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில்கூட பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் நிலவுகின்றன. அப்படியொரு நிலை ஏற்பட்டால் அரசில் இணைந்திருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகள் என்ன செய்வார்கள் என்பதை நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் நாங்கள் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் கூட பௌத்த விகாரைகள் அமைக்கப்பட்டால் அதனை எதிர்ப்போம்.

வன்செயலால் வீடுகளை இழந்த மட்டக்களப்பு, புனானை கிழக்கு, புனானை மேற்கு மக்களுக்கு வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்படவேண்டும். மக்கள் அந்தப் பகுதிகளில் மீண்டும் குடியேற முடியாத நிலையிலுள்ளனர். ஆனால் எங்களுடைய கோரிக்கையை ஏற்பதுபோல் நாடகமாடப்பட்டு இன்று அந்தப் பகுதியில் திட்டமிட்ட முறையில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். புனானை ரயில் நிலையத்தின் முன் சிறிதாக இருந்த புத்த வழிபாட்டுத்தலம் இன்று பிரமாண்டமான விகாரையாக பௌத்த பிக்கு ஒருவரால் அமைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே அந்த இடத்தில் இருந்த விநாயகர் ஆலயம் விகாரையால் மறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கை அரசு, இந்திய அரசை சீனாவின் நட்பை வைத்து விரட்டிக்கொண்டிருக்கின்றது. அதனால் இந்திய அரசு இலங்கை அரசைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. - என்றார். (ச)



வடமாகாண பெண் சாரணியர்களுக்கான ஆண்டு பொதுக் கூட்டம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியா இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம பெண் சாரணிய ஆணையாளர் திருமதி சாந்த ஜயலத், பிரதிப் பெண் சாரணிய ஆணையாளர் மஞ்சுளா பீரிஸ், பெண் சாரணிய அதிகாரிகள் வன்னி ரணசிங்க, பெர்னாண்டோ, துஷ்யந்தி மற்றும் மாகாண, மாவட்ட, வலய சாரணிய தலைவிகளும் சாரணிய மாணவிகளும் கலந்து கொண்டனர். நடனம், பேச்சு மற்றும் நிகழ்வுகள் பல இடம்பெற்றன. (ஒ-402)

# அனுமதியின்றி மாடு வெட்டியவருக்கு ரூ. 10,000 அபராதம்

வடமராட்சி, ஜூன் 17

துன்னாலை, குடவத்தையில் அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமாக மாடு ஒன்றை இறைச்சிக்காக வெட்டிய நபருக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

மாடு வெட்டிக் கொண்டிருந்த நபரைக் கையும் மெய்யுமாக கைது செய்த நெல்லியடிப் பொலிஸார் அவர் மீது வழக்குத் தாக்கல் செய்து பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினார்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். அதை அடுத்து அந்த நபருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-8)

**காணி விற்பனைக்கு**

மீசாலை மேற்கு, பங்களா வீதி, ஏரம்பு வீதியில் வீடு கட்டக் கூடிய 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

T.P: 077 451 9986, 077 990 7122.

(35070)(3.6.11)

**லொறி விற்பனைக்கு**

1) ASHOK- LEYLAND E-COMET, LJ-XXXX எனும் தொடர் இலக்கமுடைய 16½ அடி அலுமினிய பொடி யுள்ள லொறியும்

2) IZUSU LJ-XXXX எனும் தொடர் இலக்கமுடைய 14½ அடி அலுமினிய பொடியுள்ள லொறியும் விற்பனைக்குண்டு

தொடர்பு:077 742 2604

(37613)(3.6.11)

**வளவாளர் தேவை- ஆறுதல் நிறுவனம்**

எமது நிறுவனம் நடத்தும் முன்பள்ளிக் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் புதிய தொகுதி யூலை மாதம் முதல் வாரத்தில் இருந்து தொடங்க இருக்கின்றது. இக் கற்கைநெறி பின்வரும் பாடங்களை உள்ளடக்கியதாகும்.

குழந்தை உளவியல், சிறுவர் உரிமை, ஆங்கிலம், கல்வித் தத்துவம், மொழி விருத்தி, சித்திரம், சுகாதாரமும் போசாக்கும், முன்கணிதம், செயல்நிலை ஆய்வு, விஞ்ஞானமும் சுற்றாடலும், சமூக உளவியல், மதிப்பீட்டு முறைகள், முன்பள்ளி முகாமைத்துவமும் வகுப்பறை முகாமைத்துவமும், கல்வித் தொழில் நுட்பமும் கற்பித்தல் முறையியலும்

இப் பாடங்களைக் கற்பிக்க விரும்பும் வளவாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்பமுடையவர்கள் தாங்கள் கற்பிக்க விரும்பும் பாடத்தைக் குறிப்பிட்டு சுயவிவரத்தை 25.06.2013 இற்கு முன்னர் கீழே குறிக்கப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

யாழ்ப்பாணம், தீவகம், கிளிநொச்சி, துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா, மடு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களில் கற்கைநெறி நடைபெறும்.

குறிப்பு: இக் கற்கைநெறி செயல்முறை கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

Mr.Sundram Divakalala
Aaruthal,
No.172, Sir Pon Ramanathan R d ,
Thirunelvely, Jaffna.Tel No.021 221 9254

(ப/9840)(3.6.11)

**Vacancy for Journalist**

A well established news paper institution is looking for an experienced journalist capable of translating English matters into Tamil and vis-a-vis.Apply in own handwriting giving details of experience with copies of testimonials mentioning two names of non related referees with contact numbers.Preference will be given to persons living within the Jaffna town limits and suburbs.Salary and other matters negotiable.

Applications should reach the address before 20.06.2013.

Box No: 2013, New Uthayan Publications Ltd,
361, Kasthuriyar Road, Jaffna.

அனைத்து கொம்ப்யூட்டர் டிப்ளோமா பாடநெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் 20-06-2013

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677

**காணி விற்பனைக்கு**

நீர்வேலியில், மடத்தடி வீதியில் உள்ள பழைய இனிப்பு கம்பனிக்கு முன்பாக உள்ள 9 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 077 6231

(38420)(3.6.11)

**கார் விற்பனைக்கு**

வெள்ளை TOYOTA ALLION கார் (2012) 850 km பாவனையுடன் விற்பனைக்கு. விலை 55 இலட்சம்.

தொடர்பு: 077 711 1502

(38405)(3.6.11)

**பிரத்தியேக வகுப்புக்கள்**

கணக்கீடு, வணிகக்கல்வி A/L,O/L பிரபலமான ஆசிரியர்களால் வீடுகளிற்கு வந்து சிறப்பான முறையில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் கற்பிக்கப்படும். பல்கலைக்கழக வாய்ப்பு பிரகாசம்

தொடர்பு: 077 737 5336

(38378)(3.6.11)

உதயன் விளம்பர தொடர்புகளுக்கு
0215671111
advt@uthayan.com

**ஆயுள்வேத வைத்தியர்களினதும் மக்களினதும் கவனத்திற்கு!**

- நீங்கள் முகப்பரு, சூரிய வெப்பத்தால் ஏற்படும் வரட்சி, சருமவியாதி, இளநரை, முடி உதிர்வு, பொடுகு, வாதம், கைகால் விறைப்பு, மூட்டுவலி, முதுகுவலி, இடுப்புவலி, சொறி, சிரங்கு, தோல் இடுக்குகளில் வரும் சிரங்கு என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?
- இந்நோய்களுக்கு பல வழிமுறைகளிலும் தீர்வு தேடிச் சலித்து விட்டீர்களா? இந்நோய்களுக்கான நிவாரண ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட தைலங்கள் மூலிகைப் பவுடர்கள் எம்மிடம் உண்டு.

**ஆயுள்வேத வைத்தியர்களின் கவனத்திற்கு!**

- எம்மிடம் நீரிழிவு, கொலஸ்ரோல், இரத்த அழுத்தம், நரம்புத் தளர்ச்சி, சளி, வரட்சி இருமல், மலச்சிக்கல், வெள்ளைபடுதல், மாதவிடாய்க்கால அதிக உதிரப்போக்கு, பாலியல் பிரச்சினை, இழுப்பு, சிறுநீர்க் கோளாறு, வாதம் போன்ற பலவகை நோய்களுக்குரிய அரிஷ்ட ஆஸவங்கள், குவாதங்கள், சூரணங்கள், குளிகைகள், சிறப்பு வகைகளை மிகக்குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
- மற்றும் தரமான பஸ்பங்கள், செந்தூரங்கள், கோரோசனை மாத்திரைகள், கஸ்தூரி மாத்திரைகள், பலாஞ்சீவி பேதிக் குளிகைகள் போன்றவற்றை மிகக்குறைந்த விலையிற் பெற்றுக்கொள்ளலாம்.

**சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்!**

இளமைத் துடிப்பு மிக்க முழுமையான திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற பாவியுங்கள் "சிதாரா முடக்கத்தான் அமுக்கரா சிறப்"

நீங்கள் நாட வேண்டிய இடம்:
**சிவா நறுமணப் பூங்கா**
இல: 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
தொலைபேசி: 021 222 2567

(சி/9008)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவியுயர்வுக்கான போட்டிப் பரீட்சையில்

## சிற்றூழியர்கள் 43 பேர் வடக்கு மாகாணத்தில் சித்தி

வடக்கு மாகாணத்திலுள்ள அமைச்சுக்கள் மற்றும் திணைக் களங்களில் கடமைபுரியும் சிற்றூழியர்களை முகாமைத் துவ உதவியாளர் தரம் III க்கு தரம் உயர்த்துவதற்காக கடந்த டிசம்பர் மாதம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தி னால் நடத்தப்பட்ட மட்டுப் படுத்தப்பட்ட போட்டிப் பரீட் சையில் வடக்கு மாகாணத் தைச் சேர்ந்த 43பேர் சித்தி யடைந்துள்ளனர். அவர்களின் பெயர் விவரம் பின்வருமாறு:-
இ.தேவிகா, ச.பாலசூரியன், பொ.தயாபரன், கு.ஸ்ரீராம், செ.ஞானேஸ்வரன், வ.தினேஸ், நா.விஜேந்திரன், வ.தர்மகுல சிங்கம், சோ.நாகநந்தினி, கு.தயாளன், தி.மகாமூர்த்தி, ஜெ.லஷ்மி, ஜீ.லிகிதமாலா, செ.விஜயபாண்டியன், வி.ரதீஸ் வரி, ப.ஸ்ரீரஞ்சிதமலர், ச.லோகேஸ்வரி, க.விக்னேஸ் வரன், சி.சிஜிவர்த்தனி, கா.செந் தில்செல்வன், யோ.சாந்த லீனா, ம.சதீஸ்குமாரி, சி.பி.நாகேஸ்வரி, சே.தயோன் அல்போன்ஸ், லோ.புஸ்ப காந்தி, தே.வாசுதேவன், ந.சண் முகராசா, கா.கிருபானந்த கிருஷ்ணன், வி.விஜிதா, பொ.அன் பரசன், தே.அரவிந்தன், தேசு. மகேந்திரராசா, சு.சுதன்ராஜ், ஜெ.விஜயா, யோ.மோகன தாஸ், இ.கிருபாகரன், பா.பால ரஞ்சன், கா.திருக்குமார், வே.மாது மைராஜி, ச.நிக்கிலஸ், கு.காந்திமதி, இ.மார்க்கரட் சந் திரகலா, வ.ஆதவன். (க-288)

# வருமானம் குறைந்த சபைகளுக்கு உள்ளூராட்சி அமைச்சு உதவி

### 3 பிரதேச சபைகளுக்கு 85 மில்லியன் ரூபா

வலி.தென்மேற்கு, ஜூன் 17
வருடாந்தம் 10 மில்லியன் ரூபாவுக்குக் குறைவான வரு மானமீட்டும் பிரதேச சபை களுக்கு கைகொடுத்து உதவ முன்வந்துள்ள வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு, வட மாகாணத்திலுள்ள 13 பிர தேச சபைகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு 85 மில்லியன் ரூபாவை வழங்க வுள்ளது.
வருமானம் குறைந்த பிரதேச சபைகளினால் அப்பிரதேச சபைப் பகுதிக்குள் வசிக்கும் மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இதனால் மக்கள் பெரும் சிர மங்களுக்கும் அசௌகரியங் களுக்கும் உள்ளாகிறார்கள்.
இதனையடுத்து வட மாகாண உள்ளூராட்சி அமைச்சு வரு டாந்தம் 10 மில்லியன் ரூபா வுக்குக் குறைவான வருமான மீட்டும் பிரதேச சபைகளின் அபிவிருத்திக்கு நிதி வழங்க வுள்ளது.
அந்த வகையில் காரைநகர், வலி.வடக்கு, ஊர்காவற்றுறை, மன்னார் ஆகிய பிரதேச சபைகளுக்கு 4 மில்லியன் ரூபா வீதமும், பூநகரி, பச்சி லைப்பள்ளி, வவுனியா, நெடுந் தீவு ஆகிய பிரதேச சபை களுக்கு 10 மில்லியன் ரூபா வீதமும், முசலி, வவுனியா தெற்கு ஆகிய பிரதேச சபை களுக்கு 7 மில்லியன் ரூபா வீதமும், துணுக்காய்க்கு 6 மில்லியன் ரூபாவும், மாந்தை கிழக்குக்கு 8 மில்லியனும், வல்வெட்டித்துறைக்கு ஒரு மில்லியன் ரூபாவுமாக 85 மில்லியன் ரூபா வட மாகாண அமைச்சினால் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காக வழங்கப்படவுள்ளது.
இந்த நிதி மூலம் வீதி, கிழ மைச் சந்தை, சிறிய மருந்த கம், முச்சக்கர வண்டி நிறுத் தும் நிலையம், பஸ் தரிப்பு நிலையம் அமைத்தல் போன்ற வேலைத் திட்டங்களை மேற் கொள்ளுமாறு வட மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செய லாளர் 13 பிரதேச சபை செய லாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள கடிதங்களில் குறிப்பிட்டுள்ளார். (த-115)


## கனடாவுக்கு அனுப்புவதாக ரூபா 47 லட்சம் மோசடி

### வங்கி ஊழியருக்கு எதிராக முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 17
கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி 47 லட்சம் ரூபாவைப் பெற்று மோசடி செய்துள்ள தாக வங்கி ஊழியரொரு வருக்கு எதிராக யாழ். பொலி ஸில் முறைப்பாடு செய்யப் பட் டுள்ளதாக யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் எம்.எம்.ஜெப்றி தெரிவித் தார்.
நேற்று முன்தினம் நடை பெற்ற வாராந்த செய்தியா ளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:-
உரும்பிராயைச் சேர்ந்த ஒரு வரே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார். வங்கியில் ஊழியராக பணிபுரிந்த வேளை குறித்த சந்தேக நபர் 46 லட்சத்து 85 ஆயிரத்து 500 ரூபா வைப் பெற் றுள்ளார்.
பின்னர் அவர் குறித்த வங்கி யிலிருந்து விலகிவிட்டார் என்பது விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. அவர் தற்போது எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை. குறித்த வங்கியினரும் அவர் எங்குள்ளார் என்று தெரி யாது எனக் கூறுகின்றனர்.
இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்படுகிறது.
இதேவேளை, யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த ஒருவர் 2 லட்சம் ரூபா காசோலை மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பிலும் விசா ரணை முன்னெடுக்கப்படு கிறது-என்றார்.
(த-4)



## கதவுகள் இல்லையே... எப்படிச் செல்வது?



யாழ். நவீன சந்தையில் உள்ள ஆண்களுக்கான மலசல கூடத்தின் கதவுகள் உடைந்தும், கழன்றும் காணப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் உள்ளே போய் வருவதற்குச் சிரமப்படுகின்றனர். (ஒ-7)

## பௌதிகவியல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 17
ஜ.சீ.ஈ. உயர்தர விஞ்ஞான பிரிவு (2013) மாணவர் களுக் கான பௌதிகவியல் பாட கருத்தரங்கு இன்று திங்கட் கிழமை யாழ். வேம்படி மக ளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.
வளவாளர்கள், விரிவுரை யாளர்களினால் நடத்தப்பட வுள்ள இந்தக் கருத்தரங்கை தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
மாணவர்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு நிலைய பணிப்பாளர் திருமதி எம்.றாஜாராம் கேட்டுள்ளார்.
(த-4)

## லயன்ஸ் நிர்வாகிகள் பதவியேற்பு

தென்மராட்சி, ஜூன் 17
தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்தின் 9 ஆவது புதிய நிர் வாகிகள் பதவியேற்பு நிகழ்வு சனிக்கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள கழக அலுவலகத்தில் இடம்பெற் றது.
கழகத்தின் புதிய நிர்வாகிகளுக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 'பி1' மாவட்ட ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ முன்னி லையில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. கழகத் தின் புதிய தலைவராக லயன் தர்மலிங்கம் ரவீந்திரனும், செயலாளராக லயன் இராமு கந்தையாவும், பொருளாள ராக அருணாசலம் கலைச் செல்வனும் பதவி ஏற்றுள்ள துடன் ஏனைய பதவிகளுக்கும் புதிய நிர்வாகிகள் பதவிப் பிர மாணம் செய்து கொண்டனர்.
கழகத்தின் நலநோம்புத் திட் டங்களாக தென்மராட்சி பிர தேச முன்பள்ளிகளுக்கு கற் றல் உபகரணங்கள் வழங் கல், வறிய குடும்பங்களுக்கு தென்னம் பிள்ளைகள் வழங்கல் போன்றவையும் மாவட்ட ஆளு நரால் கொடிகாமம் பிரதேச சபை வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலியும் வழங்கப்பட்டன.
கழகத்தின் புதிய உறுப்பினர் களாக நால்வர் நேற்று மாவட்ட ஆளுநர் முன்னிலை யில் இணைந்து கொண் டனர். (த-9)


## கொடுக்கல் வாங்கல் தகராறில் தட்டாதெருவில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வியாபார கொடுக்கல் வாங் கலில் ஏற்பட்ட தகராறு கார ணமாக ஒருவர் மோசமாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளதுடன் அவரது வீட்டுக் கண்ணா டிகளும் அடித்து நொருக்கப் பட்டுள்ளன என்று யாழ். பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரி சமன்சிகேரா தெரி வித்தார்.
யாழ். தட்டாதெருச் சந்தியை அண்மித்து கடந்த புதன் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
அதே இடத்தைச் சேர்ந்த எதிர்த்தரப்பினர் அவரது வீட்டுக்குச் சென்ற அவரது வீட்டின் மீது தாக்குதல் நடத் தியுள்ளனர். அதனால் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தன.
தாக்குதல் நடத்தப்பட்ட வேளை குறித்த நபர் அங் கிருந்து தப்பி ஓடி அருகி லுள்ள மதுபான நிலையத் தில் நின்றுள்ளார்.
தாக்குதலாளிகள் தாக்குதல் நடத்திவிட்டுத் திரும்பும்போது மதுபான நிலையத்தில் குறித்த நபர் நிற்பதைக் கண்டுள்ளனர். அங்கு சென்ற அவர்கள் அவரைக் கடுமை யாகத் தாக்கிவிட்டுச் சென்று விட்டனர். காயமடைந்த அவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் தாம் விசாரணையை முன்னெடுத்து வருவதாக பொலிஸ் அத்தி யட்சகர் தெரிவித்தார்.
(த-4)

## அரச நியமனம் பெறுவோர் பெரும் அதிர்ஷ்டசாலிகள்

### பிரதம செயலர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வடமாகாணத்தில் அரச நிரந் தர நியமனங்கள் பெறுவது மிகக் கடினமான ஒன்று. அந்த வகையில் ஆள்சேர்ப்பு திட்டத்தில் கிடைக்கப்பெறும் இந்த நியமனங்கள் பெற்ற வர்கள் அதிர்ஷ்டசாலிகள் என்று வடமாகாண பிரதம செயலா ளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ் தெரிவித்தார்.
வடமாகாண கல்விசாரா சுகாதார, விவசாய ஊழியர் களுக்கான நியமனம் வழங் கும் நிகழ்வு வெள்ளிக் கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்த தாவது:-
நிரந்தர நியமனம் பெற்றவர் கள் தமது தராதரத்துக்கு ஏற்ப பொதுமக்களுக்கான சிறந்த சேவையை வழங்க



வேண்டும். ஏனெனில் அரச நியமனம் கிடைக்கப் பெறுவது வடமாகாணத்தைப் பொறுத் தவரை அதிர்ஷ்டமானது என்றே கூறவேண்டும். ஆள் சேர்ப்புத் திட்டத்தில் ஆளணிப் பற்றாக்குறைக்கு ஏற்ப உள் வாங்கப்பட்ட இந்த உத்தியோ கத்தர்கள் சிறந்த சேவையை வழங்க வேண்டும் -என்றார்.
இந்த நிகழ்வில் வடமா காணத்தைச் சேர்ந்த கல்வி சாரா ஊழியர்களாக 1,137 பேருக்கு சுகாதாரம் மற்றும் விவசாய திணைக்களங்களில் நியமனங்கள் வழங்கப் பட்டன.
(த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விடம் கோரி மக்கள் போராட்டம்

வீடுகள் இல்லாத எங்களை உடனே வெளி யேறுமாறு சொன்னால் நாம் எங்கே செல்வது......



திருகோணமலை,ஜூன் 17
வாழ்விடம் வழங்கக்கோரி திருகோணமலை, கோணேசபுரி சுனாமி குடியிருப்பு மக்கள் சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோணேசபுரி சுனாமி குடியிருப்பில் தற்போது 372 வீடுகள் கட்டப்பட்டு உள்ளன. ஆனால் அங்கு249 வீடுகளில் மட்டுமே மக்கள் குடியிருந்து வருகின்றனர்.

அதில் 123 வீடுகள் பூட்டப்பட்டுள்ளபோதும், 85 வீடுகளில் ஏற்கனவே வீடுகள் இல்லாத ஏழை மக்கள் வாடகைக்கு குடியிருந்து வருகின்றனர்.

இந்தநிலையில் குறித்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு அறிவித்தல் விடுத்த திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம் எதிர்வரும் 14 நாள்களுக்குள் வீடுகளைவிட்டு குறித்த 85 குடும்பங்களையும் வெளியேறுமாறு அறிவித்தல் விடுத்துள்ளது.

இதனைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

வீடுகள் இல்லாத எம்மை உடனடியாக வெளியேறச் சொன்னால் நாம் எங்கு செல்வது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கேள்வி எழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 'ஆலயங்களை பாதுகாப்போம்' பேரணிக்கு பொலிஸார் தடை

## தமிழர், முஸ்லிம்களுக்கு மட்டும் அனுமதி தேவையா?



பொது பல சேனா அமைப்பு நடத்தும் ஊர்வலங்களுக்கு அனுமதி தேவையில்லை என்கிறார் யோகேஸ்வரன் எம்.பி.

மட்டக்களப்பு,ஜூன் 17
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்கள் தொடர்ந்து சேதமாதக்கப்பட்டு வருவதைக் கண்டித்து 'இந்து ஆலயங்களைப் பாதுகாப்போம்' என்ற தொனிப்பொருளில் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பில் நடத்தப்படவிருந்த அமைதிப் பேரணிக்கு பொலிஸார் தடை விதித்துள்ளனர்.

குறித்த பேரணியில் கலந்து கொள்வதற்காக வருகை தந்தவர்கள், மட்டக்களப்பு, தேற்றாத்தீவு பிள்ளையார் ஆலயத்தில் அவசர கூட்டமொன்றை நடத்தினர்

இந்தக் கூட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் கலந்து கொண்டு உரையாற்றியபோது தெரிவித்ததாவது:

பொது பல சேனா அமைப்பு ஊர்வலங்கள் பேரணிகள் நடத்துவதாயின் எந்தவொரு பொலிஸ் அனுமதியும் பெறத் தேவையில்லை.

ஆனால் தமிழர்கள், முஸ்லிம்கள், கிறீஸ்தவர்கள் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்துவதாயின் பொலிஸ் அனுமதி தேவைப்படுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பல இந்துக் கோவில்கள் உடைக்கப்பட்டன. அதில் சம்பந்தப்பட்டோர் இது வரை கைது செய்யப்படவில்லை.

அதனைக் கண்டித்து கவனயீர்ப்பு அமைதிப் பேரணியொன்றை நடத்த திட்டமிட்டிருந்தோம்.

ஆனால் அதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எனினும் பிறிதொரு தினத்தில் இந்தப் பேரணியை நடத்தியாவோம்.-என்றார். (ச)

# கல்வியை விலைபேசி விற்றுவிட வேண்டாம்

## சுபைர் வேண்டுகோள்



நாளைய தலை முறையினருக்காக கல்வியை பரிசளியுங்கள்.

கொழும்பு,ஜூன் 17
கல்வியை ஒருபோதும் விலை பேசி விற்றுவிட வேண்டாம். அதை எமது எதிர்கால சந்ததிக்காக விட்டுவிடுங்கள் என்று கிழக்கு மாகாண சபையின் பிரதித் தவிசாளர் எம்.எஸ். சுபைர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரால் நாம் இழந்த சொத்துக்களை மீளப்பெற வேண்டுமானால், அதற்கு ஒரே வழி கல்வி என்ற ஆயுதம்தான். அந்தக் கல்வியினால்தான் நாம் எமது உரிமைகளையும் பெற்றுகொள்ள முடியும்.

அரசு கல்வியில் மாற்றத்தையும் முன்னேற்றங்களையும் மேற்கொண்டுவருகிறது. ஆனால், சில கல்வி நிறுவனங்கள் வியாபார நோக்கில் செயற்படுகின்றன. தயவு செய்து கல்வியை ஒரு போதும் விலை பேசி விற்றுவிட வேண்டாம்.

எமது நாளைய தலைமுறையினருக்காக கல்வியை பரிசளியுங்கள். அதன் மூலம் எமது மாவட்டத்திலும் மாகாணத்திலும் சிறந்த கல்வியாளர்களை உருவாக்கி மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும்.-என்றார். (ச)



திருகோணமலை, சிவபுரி கிராம சேவகர் பிரிவில் நுளம்பு வலை வழங்கும் நிகழ்வு திருமலை செல்வம் ஞாபகார்த்த பொது நூலக மண்டபத்தில் சனிக்கிழமை நடைபெற்றது.இந்த நிகழ்வில் திருகோணமலை நகரசபைத் தலைவர் க.செல்வராசா கலந்துகொண்டு நுளம்பு வலையை ஒருவருக்கு வழங்கியபோது... (ச-40)

# தேசிய உணவு கலாசார மேம்பாட்டு திட்டம் 20 இல்

மட்டக்களப்பு,ஜூன் 17
கலாசார அலுவல்கள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் இணைந்து தேசிய உணவு கலாசார மேம்பாட்டுதிட்ட நிகழ்வை நடத்தவுள்ளன.

இந்தநிகழ்வு அரச அதிபர் திருமதி பி.எஸ். எம்.சாள்ஸ் தலைமையில் எதிர்வரும் 20ஆம் திகதி மட்டக்களப்பில்-நடைபெறவுள்ளது என்று மாவட்ட கலாசார அபிவிருத்தி உதவியாளர் எம்.ஏ.சீ.ஜெயினுலாப்தீன் தெரிவித்தார்.

இந்தநிகழ்வில் பாரம்பரிய உணவுப்பழக்க வழக்கங்கள் தொடர்பாக விளக்கமளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சமப்படுத்தப்படுகின்றன நீர்தேங்கும் இடங்கள்

மட்டக்களப்பு,ஜூன் 17
டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு ஏதுவாக நீர் தேங்கி நிற்கக் கூடிய இடங்களை அடையாளம் கண்டு அவற்றைச் சமப்படுத்தும் வேலைத் திட்டத்தை ஏறாவூர் நகர பிதா அலி



ஸாஹிர் மௌலானா முன்னெடுத் துள்ளார்.

ஏறாவூரில் பள்ளங்களிலும் குழிகளிலும் நீர் தேங்கி நின்று டெங்கு நுளம்புகள் பரவுவதற்குத் ஏதுவாக இருக்கக் கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு மண் இட்டு நிரப்பட்டன.

எதிர்வரும் பருவ மழைக்காலத்துக்கு முன் இந்த செயல் திட்டம் நிறைவு செய்யப்படும் என்று ஏறாவூர் நகர பிதா அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார். (ச)

# கிழக்கு மாகாண முதல்வரின் செயற்பாடு திருப்தி இல்லை

## அமைச்சர்கள் , உறுப்பினர்கள் முறைப்பாடு

திருகோணமலை,ஜூன் 17
கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் செயற்திறன் இல்லாதவராக காணப்படுகிறார். அவரது செயற்பாடுகள் திருப்தியற்றவையாக உள்ளன.

இவ்வாறு கிழக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் பலர், ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற உயர்மட்டக் கூட்டமொன்றில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களிடம் விளக்கமளித்துள்ளனர்.

அதனையடுத்து, கிழக்கு மாகாண சபையின் ஆளும் தரப்புக்குள் நிலவி வரும் முரண்பாடுகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த உயர்மட்ட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது என்று கிழக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

''கிழக்கு மாகாணசபை செயலிழந்து வருகிறது. கிழக்கு மாகாண முதலமைச்சர் செயற்றிறனில்லாதவராக காணப்படுகிறார். அத்தோடு கிழக்கு மாகாண ஆளுனரின் செயற்பாடுகள் குறித்தும் கிழக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் எடுத்துக் கூறியுள்ளனர்.

கிழக்கு மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானங்கள் எதுவும் நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை. ஆளுநர், அதிகாரிகளைப் பயமுறுத்தி வருகிறார். கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாண அமைச்சர்களை மதித்துச் செயற்படுவதில்லை'' என்னும் அவர் அவர்கள் சுட்டிக் காட்டினர்.

கிழக்கு மாகாண சபையின் அமைச் சரவை தீர்மானங்கள் எதுவும் நடைமுறைப் படுத்தப்படுவது இல்லை.

கிழக்கு மாகாணசபை முதலமைச்சருக்கும் கிழக்கு மாகாண அமைச்சர்கள் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் இடையே ஒரு இணைப்பு இல்லாமல் இருப்பது குறித்தும் அவர் கவலை தெரிவித்தனர்.

இந்த விடயங்களை கேட்டறிந்த அமைச்சர்கள், ஜனாதிபதியிடம் இவைகளைத் தெரிவித்து விரைவில் இதற்கு தீர்க்க மான முடிவு எடுக்கப்படும். அது வரை அனைவரும் ஒற்றுமையாக செயற்படுமாறு வலியுறுத்தியதாக கிழக்கு மாகாண சபையின் ஆளும் தரப்பு உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்துலக கடற்பரப்பில் மீன்பிடிக்க இலங்கை கொடியுடன் சீன கப்பல்கள்

## உடன்படிக்கையை அடுத்து அனுமதி

கொழும்பு,ஜூன் 17
இலங்கைக் கொடியுடன், அனைத்துலக கடற்பரப்பில் மீன்பிடிக்க சீன மீன்பிடிக் கப்பல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
சீன நிறுவனம் ஒன்று இலங்கை முதலீட்டுச் சபையுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாட்டை அடுத்தே, இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.
சீன நிறுவனத்தின் மீன்பிடிப் படகுகள், இலங்கையின் பொருளாதார கடல் எல்லைக்கு அப்பால் அனைத்துலக கடற்பரப்பில் இலங்கைக் கொடியுடன் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன என்று இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
இந்த உடன்பாட்டுக்கு அமைய பிடிக்கப்படும் மீன்களில் 90 வீதமானவை சீனாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும்.
எஞ்சிய 10 வீத மீன்கள் ஒரு கிலோ ஒரு டொலர் வீதம், இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்படும்.
சீன மீன்பிடிக் கப்பல்கள், அண்மையில் திறக்கப்பட்ட டிகோவிற்ற மீன்பிடித் துறைமுகத்தில் தரித்து நின்று செயற்படும். சுமார் 150 அடி நீளம் கொண்ட நான்கு மீன்பிடிக் கப்பல்களை முதலில் பயன்படுத்த சீன நிறுவனம் திட்டமிட்டுள்ளது.
பின்னர், மேலும் 16 மீன்பிடிக் கப்பல்கள் பயன்படுத்தப்படும்.
தற்போது, முதற்கட்டமாக, கொண்டுவரப்பட்டுள்ள நான்கு கப்பல்கள், இலங்கை பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக, தெற்கு கடற்பகுதியில் தரித்து நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



நான்கு கப்பல்கள் தெற்கு கடற் பகுதியில் தரித்து நிற்கின்றன.

## மாதுரு ஓயா காட்டுப் பகுதியில் தீ



கொழும்பு,ஜூன் 17
மகா ஓயா, மாதுரு ஓயா காட்டுப் பகுதியில் திடீர் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து தீ பரவுவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.
சனிக்கிழமை மாலை தொடக்கம் தீ பரவ ஆரம்பித்தது.
கடும் காற்று மற்றும் காட்டு யானைகளின் நடமாட்டம் காரணமாக இந்தத் தீ ஏனைய இடங்களுக்கும் பரவாமல் கட்டுப்படுத்துவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது என்று மகாஓயா பொலிஸார் தெரிவித்தனர்.(ச)


## இணையத்தளத்துக்கும் வருகிறது புதிய சட்டம்

### ஊடக அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் கூறுகிறார்

கொழும்பு,ஜூன் 17
இலங்கையிலிருந்து இயங்கிவரும் இணையத்தளங்கள் தொடர்பில் புதிய சட்டங்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன என்று அரசு அறிவித்துள்ளது.



இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் அச்சு ஊடகங்களுக்கான ஒழுக்க விதிகள் அறிமுகம் செய்யப்படவுள்ளன என்று அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது.
தற்போது இலங்கையிலிருந்து இயங்கிவரும் இணைய ஊடகங்களுக்காக புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளது என்று ஊடக அமைச்சின் செயலர் சரித்த ஹேரத் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
இலங்கையில் 67 இணையத்தளங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன.
இந்த இணையத் தளங்களுக்கு எதிராகவோ அல்லது பதிவு செய்யப்படாத இணையத் தளங்களுக்கு எதிராகவோ சட்ட நட வடிக்கை எடுக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.
எனவே, இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் புதிய சட்டமொன்று உருவாக்கப்பட உள்ளது.
சட்டத்தை உருவாக்கும் நோக்கில் பிரதிநிதிகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.- என்றார். (ச)



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு அலரி மாளிகையில் நடைபெற்ற விசேட நிகழ்வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு சர்வதேச இந்து மத பீடத் தலைவர் சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

## காணி, பொலிஸ் அதிகாரங்கள் மாகாணசபைக்கு அவசியமற்றவை

### பிரதமர் தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 17
13 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் அடங்கியுள்ள பொலிஸ், காணி அதிகாரங்கள் இந்தக் காலகட்டத்தில் நாட்டுக்குத் தேவையற்றவை என்று பிரதமர் டி. எம். ஜய ரத்ன தெரிவித்தார்.
பிரதமரின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பொலிஸ், காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்குவதால் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகும். இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டில் அவை வீண் மோதல்கள் உருவாவதற்கு வழியேற்படுத்தலாம்.
மேற்குலக அழுத்தங்களால் இலங்கையில் மீண்டும் அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவது தெரிகிறது.
மனிதர்கள் ஆன்மிக ரீதியில் கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதே மதங்களின் அடிப்படை நோக்கமாகும். சகல மத போதகர்களும் சிறந்த சமூகத்தைக் கட்டி எழுப்பவே போதனை செய்கின்றனர். மதங்களைச் சகலரும் கௌரவிக்க வேண்டும் -என்றார். (ச)

## சாரதி களைப்படைவதும் விபத்துக்குக் காரணம்

### மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் தெரிவிப்பு



கொழும்பு,ஜூன் 17
வீதி விபத்துக்களில் நூற்றுக்கு 15 வீதமானவை சாரதி கள் களைப்படைவதாலேயே ஏற்படுகின்றன என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் எஸ்.எம். ஹரிச்சந்திர தெரிவித்தார்.
வாகனம் செலுத்திச் செல் லப்படும் ஒவ்வொரு நான்கரை மணித்தியாலங்களுக்கு ஒரு முறை அரை மணி நேரமும் ஒவ்வொரு 24 மணித்தி யாலங்களுக்கு ஒருமுறை 10 மணி நேரமும் சாரதியொருவருக்கு ஓய்வு கிடைக்க வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டினார்.
தனியார்துறை போக்குவரத்துச் சேவைகள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தலைமையில் அமைச்சில் இடம்பெற்ற சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
வாகன விபத்துக்களில் பெரும்பாலானவை பயணத்தின் இறுதிக் கட்டத்திலோ அல்லது அதற்குச் சற்று முன்னரோதான் நிகழ்கின்றன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## ஆயுள்வேத கூட்டுத்தாபனத்துக்கு ரூ.6 கோடி 70 லட்சம் இலாபம்

கொழும்பு,ஜூன் 17
இலங்கை ஆயுள்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் 2012 ஆம் ஆண்டில் 6கோடி 70 லட்சம் ரூபாவை இலாபமாகப் பெற்றுள்ளது.
2007 ஆம் ஆண்டில் 4 கோடி ரூபா நட்டமடைந்த கூட்டுத்தாபனத்தை 2012 ஆம் ஆண்டில் இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டு வர முடிந்துள்ளது என்று அதன் தலைவர் சோமவீர சந்திரசிறி தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளை ஜப்பான் மற்றும் கொரியாவுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்றிட்டம் [illegible] தன் பின்னரே 2012 இல் 6 கோடி 70 லட்சம் ரூபாவை இலாபமாக ஈட்டிக் கொள்ள முடிந்துள்ளது.
நவீன தொழில்நுட்பங்கள் கொண்ட தொழிற்சாலை ஒன்றை நிறுவும் நோக்கில் [illegible] வீதியில் கூட்டுத்தாபனத்துக்கு 5 ஏக்கர் [illegible] கொள்வனவு செய்யப்பட்டுள்ளது- என்றார். (ச-22)

2012 ஆம் ஆண்டில் இலாபமீட்டும் நிலைக்குக் கொண்டுவர முடிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சமாதானச் சுட்டெண்; அது எமக்கு என்ன கொம்பா? கொக்கா?

உலக சமாதானச் சுட்டெண் வரிசையில், கடந்த வருடத்தில் [2012 இல்], இலங்கை அரசு நூற்றுப்பத்தாவது [110] இடத்தை எட்டிப் பிடித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பரிசீலனைக்கு எடுக்கப்பட்ட 162 நாடுகளில் இலங்கை மேற்கூறிய நிலையை அடைந்துள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் 2007 ஆவது வருடம் மே மாதத்தில், உருவாக்கப்பட்ட, பொருளாதாரம் மற்றும் சமாதானம் ஆகிய இரண்டிலும் நாடுகளின் வளர்ச்சி மற்றும் செயல்முறையான முன்னேற்றம் குறித்து–

பொருளாதார வளர்ச்சி மற்றும் சமாதான செயற்பாடுகளைக் கண்காணித்து மதிப்பிடும் நிறுவனம் வெளியிட்ட பிந்திய அறிக்கையில் மேற்கண்ட சுட்டெண் அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட தரம் பிரித்தலில், ஐஸ்லாந்து, டென்மார்க், நியூசிலாந்து ஆகியன முறையே முதல் மூன்று இடங்களைக் கடந்த ஆண்டில் பெற்றுள்ளன.

அதேவேளை இந்தியா 141 ஆவது இடத்தையும் அமெரிக்கா 99 ஆவது இடத்தையும் சீனா 103 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

சுவீடனின் உப்சலா பல்கலைக்கழகத்தில் மேற்குறித்த மதிப்பீட்டுக்கான தரவுகள் பேணப்படுகின்றன.

அந்தந்த நாடுகளின் வன்முறை மட்டங்கள், குற்றச் செயல்கள், வெளிநாடுகளுடனான உறவு நிலைகள், மக்களுக்குரிய சமூகப் பாதுகாப்பு, ஜனநாயக உரிமைகளை இடையூறுகள் இன்றி அனுபவிக்கும் மட்டம்–

மனித உரிமை பேணல், தற்கொலை விகிதம் [ஒரு லட்சம் என்ற வரம்பு முறையில்], வன்செயல்களால் பாதிக்கப் பட்டோருக்கான வாழ்வாதார உதவிகள், இடம் பெயர்ந்தோர் எண்ணிக்கை, சிறையில் அடைக்கப்பட்டோர் விகிதம் [ஒரு லட்சம் என்ற வரம்பு முறையில்] இராணுவத்தினருக்கான மொத்த ஒதுக்கீடுகள்– என்பனவும் மதிப்பீட்டுக்கான அடிப்படைத் தரவுகளில் மேலும் சிலவாகும்.

உலக சமாதான சுட்டெண் வரிசையில், எமது நாடு, கடந்த ஆண்டை விட மேலும் கீழ் மட்டத்துக்கு வீழ்ந்ததற்குப் பல வகை சார், பெரும் எண்ணிக்கையான காரணிகள் உள்ளன.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக இருக்கும் என்ற, துவேசமான சட்டம், இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், உருவெடுத்த இனப்பாகுபாடும் அதன் வழியான இன ஒடுக்கல் விளைவுகளும் இன்னும் நியாயமான அளவுக்கேனும் அமிழ்ந்து போகவில்லை.

அதனால்–

சிறுபான்மையினரான தமிழ் மக்கள் தமக்குச் சேரவேண்டிய ஜனநாயக உரிமைகளுக்காக, ஆட்சிக்கு வரும் அரசுகளின் தயவை நாடி நிற்கும் 'அடிமைசார்' நிலையிலேயே வாழ்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயகம் என்ற அடையாளச் சீட்டுடன் இலங்கையில் சிறுபான்மை மக்களின் உரிமைகள் காலால் மிதிக்கப்படுவதற்கு அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் படும்பாடு ஓர் ஆழமான விடய ஆய்வுக்கு [Case Study] உரியதாகும்.

இந்தியாவின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட பதின்மூன்றாவது திருத்தத்தின் உயிர் நாடியான [சமஷ்டியைப் புறந்தள்ளிய] மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை நீர்த்துப் போகச் செய்யும், கழற்றிவிடுவதற்கான சதிராட்டக் காட்சிகள் நாளை மறுதினம் நாடாளுமன்றில் அரங்கேறவுள்ளன.

உலக சமாதானச் சுட்டெண்ணும் அதன் விவரணங்களும், எங்கள் விவகாரங்களை நாம் நினைத்தவாறு செய்வதற்கு, செய்வதில் எந்த வகையிலும் தலையிட முடியாது என்ற தற்குறிப்போக்கை வெளிப்படுத்தி உள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குத் திகதி குறித்த பின்னர், நாடாளுமன்ற நெறிமுறைகளை கையிலெடுப்பதன் மூலம், எதனையும் சாதிக்கலாம் என்ற உள்ளார்ந்த நோக்கத்துடன், தாம் நினைத்ததை அரங்கேற்றி ஒப்பேற்றுவது நிச்சயமாகிவிட்ட நிலையில் –

''கவ்வைக்கு உதவாத'' உலக சமாதான சுட்டெண் குறித்தோ, இன சமத்துவம், இன நல்லுறவு பற்றியோ நாம் கிஞ்சித்தும் அக்கறை காட்டமாட்டோம் என்று அனைத்துலகத்துக்கு கொடி அசைத்துக்காட்டும் நிலையில் –

இந்தியாவையோ அன்றி இன நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் குறித்து அக்கறை காட்டும் அனைத்துலக அமைப்புக்களையோ அரசு ஏறெடுத்தும் பார்க்குமோ? சந்தேகமே!

# பொலிஸ்– காணி விடயங்கள் தெரிவுக்குழுவின் ஆய்வுக்கு

## அமைச்சரவை எடுத்துள்ள முடிவு

சண்டேரைம்ஸ் கட்டுரையிலிருந்து
■ கோகுலன்

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் முக்கியமான இரண்டு பிரிவுகளை நீக்கி விடுவதற்கான முயற்சியிலிருந்து கடந்த வியாழக்கிழமை அரசு பின்வாங்கிக் கொண்டது. அதற்குப் பதிலாக ஒரு திருத்தத்தை மட்டும் மேற்கொள்வதென அமைச்சரவை பலத்த வாக்குவாதங்களுக்குப் பிறகு முடிவுக்கு வந்தது. அமைச்சர்கள் பலர் ஒருவரை ஒருவர் திட்டிக் கொண்டார்கள்– குற்றச்சாட்டுக்களையும், அவமதிப்புக்களையும் பொழிந்து தள்ளினார்கள். இந்த நிலைமை மோசமான கட்டங்களை அடைந்தபோது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்று சந்தர்ப்பங்களில் அமைச்சர்களை எச்சரிக்க வேண்டியிருந்தது. நடந்தவற்றில் எதனையும் ஊடகங்களுக்கு வெளியிட வேண்டாம் என்று அவர் எச்சரித்தார். அமைச்சரவை கருத்து மோதல்களின் போது சில பத்திரிகைகளின் பெயர்களும் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இப்பொழுது அரசு அரசமைப்புக்கு அரசு 19 ஆவது திருத்தம் ஒன்றைக் கொண்டு வரவிருக்கிறது. அவசர சட்டமுன்வரைவு என்ற முறையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இந்தத் திருத்தம் நிறைவேற்றப்படும் . அரசமைப்பின் 154 Λ (3) அத்தியாயத்தில் உள்ள இரண்டு அல்லது மூன்று மாகாணங்கள் ஒன்றாக இணைத்து ஒரே நிர்வாகம் அலகாக ஒரே மாகாண சபையாக அமைந்து ஒரே முதலமைச்சர் மற்றும் ஒரே அமைச்சர் அவையை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கும் பிரிவை அகற்றுவதற்கு இந்த சட்ட முன்வரைவு முன்மொழிவதாக இருக்கும். இந்த மாற்றங்களை செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பாக கொண்டுவர முடிவு செய்யப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள சில முக்கிய செல்வாக்கு மிக்க பிரிவினர் இந்த அரசமைப்புத் திருத்தத்தில் உள்ள குறித்த பிரிவு தொடர்ந்தும் அவ்வாறே இருக்குமானால் செப்ரெம்பரில் தெரிவு செய்யப்படும் வடமாகாண சபையானது கிழக்கு மாகாணத்துடன் இணைவதற்கான முடிவை எடுக்கக் கூடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். கிழக்கு மாகாண சபையில் ஏழு ஆசனங்களை உடைய முஸ்லிம் காங்கிரஸ் ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி பதவியிலிருப்பதற்கு ஆதரவளித்து வருகிறது.

இந்த முன்னணிக்கும் சபையில் ஏழு உறுப்பினர்களே உள்ளனர். அமைச்சர் ஏ.எல்.எம் அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸின் இரண்டு உறுப்பினர்களும் அரச தரப்பை ஆதரிக்கிறார்கள். முஸ்லிம் காங்கிரஸ் அதிலிருந்து விலகிவிடும் நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்கள் 11 ஆசனங்களுடன் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து கொள்ளும் நிலையில் ஐ.தே.கவுக்கு 11 ஆசனங்கள் உண்டு. (வடக்கில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வெல்லும் சாத்தியம் உண்டு) இந்த இரண்டு சிறுபான்மைக் கட்சிகளும் இணைந்து கொண்டு பெரும்பான்மை நிலையில் நிர்வாகத்தைக் கைப்பற்றக் கூடும் என அரச தரப்பினர் கருதுகிறார்கள். அவ்வாறு ஏற்படின் இரண்டு மாகாணங்களிலும் அவர்கள் அதிகாரத்தைக்கைப்பற்றுவதுடன்மாகாணங்கள் இணைந்துகொள்வது தொடர்பான ஒரு முன் மாதிரியையும் உருவாக்கிவிடக் கூடும் என்பது அவர்களின் அச்சம்.

2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 16 ஆம் திகதி உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பொன்றின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைந்திருப்பது தடுக்கப்பட்டது.

நாடாளுமன்றத்துக்கும் , மாகாண சபைகளுக்குமிடையில் சட்டவாக்க அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான இரண்டாவது திருத்தம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த சட்டப்பிரிவின் படி மாகாணங்களுக்கான பட்டியலில் இடம் பெற்றுள்ள எந்த ஒரு விடயமும் ஒவ்வொரு மாகாண சபையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டால் மட்டுமே சட்டமாக முடியும்.

பெரும்பான்மையான மாகாணசபைகளால் ஏற்றுக்கொள்ளப்படுமானால் அதனை சாத்தியமாக்குவதற்கான முயற்சி ஒரு திருத்தத்தின் மூலமே மேற்கொள்ளப்படவிருந்தது.

இவை தொடர்பாக இரண்டு சட்ட வரைவுகள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸினால் தயாரிக்கப்பட்டிருந்தன. இவைகளுக்கு மேலதிகமாக மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் நாடாளுமன்ற தெரிவுக் குழுவினால் ஆராயப்படவிருக்கின்றன. நாடாளுமன்றத்தின் பேரவைத் தலைவர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவுக்குழு நியமனம் தொடர்பான ஒரு முன் மொழிவை பிரேரிப்பார் என்று தெரிகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து கொள்கின்றதோ இல்லையோ தெரிவுக்குழுச் செயற்பாடுகளை நாம் முன்னெடுத்தாக வேண்டும் என்று அரச சார்பு கொறடா தினேஷ் குணவர்தன கடந்த வாரம் அமைச்சர்களிடம் கூறினார். எல்லாக் கட்சிகளும் தமது சார்பிலான உறுப்பினர்களின் பெயர்களை தெரிவுக் குழுவில் செயலாற்ற வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளன. எதிர்த்தரப்பிலுள்ள முக்கிய கட்சிகள் இதில் கலந்து கொள்வது சாத்தியமில்லையென்று தெரிகின்றது.

### இந்தியாவின் கண்காணிப்பு

இங்குள்ள நிலைமைகளை மிக உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறது அண்டை நாடான இந்தியா. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதிநிதிகள் குழுவொன்று இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கையும் , காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியையும் இந்த வாரம் புதுடில்லியில் சந்திக்கவிருக்கிறது. 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் ஒருதலைப்பட்சமாக திருத்தம் எதனையும் செய்ய வேண்டாம் என்று இந்தியா மீண்டும் மீண்டும் வற்புறுத்திவந்துள்ளது. அந்த வகையில் கடைசியாக இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித், இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருந்தார். இந்த நிலைமையில் இலங்கை விவகாரங்களை கையாள்வதற்கென விசேட அதிகாரி ஒருவரை இந்தியப் பிரதமர் நியமிப்பது தொடர்பாக ஆலோசிப்பதாகவும் தெரிய வந்துள்ளது. இந்தச் செயற்பாடானது இலங்கை மீது இந்தியா பழிவாங்கும் செயற்பாட்டில் இறங்க முற்படுவதைக் காட்டுவதாக சில வட்டாரங்களில் கருதப்பட்டாலும் இந்தியா, ராஜபக்ஷ அரசுடன் தொடர்ந்தும் இருதரப்பு உறவுடன் செயற்படவே விரும்புவதாகக் கருதப்படுகின்றது.

அமைச்சரவையில் 13 ஆவது திருத்தத்தை மாற்றுவதற்கு பலத்த எதிர்ப்பும் அதே சமயம் ஆதரவும் காணப்பட்டது. அமைச்சர் ஹக்கீம் திருத்தம் எதுவும் கொண்டுவரப்படுவதை எதிர்த்ததுடன் அவை நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் விடப்பட வேண்டுமா என்று வாதிட்டார். திஸ்ஸ விதாரண திருத்தப் பிரேரணைகளை ஆதரிக்கவில்லையென்றார். உத்தேச திருத்தப் பிரேரணைகளை பலமாக எதிர்த்தவர்களில் கம்யூனிஸ்ட் கட்சியின் டி.ஈ.டபிள்யு.குணசேகர மற்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ன முதலியவர்கள் அடங்குவர். ராஜித சேனாரட்ன பின்னர் நடத்திய பத்திரிகையாளர் கூட்டமொன்றில் 13 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்வது தொடர்பான திருத்தப் பிரேரணைகளை தமது பதவி பறிபோனாலும் தாம் ஆதரிக்கப் போவதில்லையென்று தெரிவித்தார். வாசுதேவ நாணயக்கார, ராஜித சேனாரட்ன டியூ குணசேகர ஆகியவர்கள் ஒரு பக்கமும் , வீரவன்ச ஒரு புறமுமாக பெரும் விவாதத்தில் ஈடுபட்டனர். இப்பொழுது இப்படியெல்லாம் பேசுகிறவர்கள் முன்னர் போருக்கு எதிராகவும் செயல்பட்டார்கள் என்றார் வீரவன்ச. வீரவன்ச பக்கம் திரும்பிய நாணயக்கார இந்த ஆள்கள் எங்களைக் கொல்லத் துணிந்தார்கள் என்றார். அந்தக்காலத்தில் புலிகள் இருக்கவில்லை என்று கூறிய சேனாரட்ன , என் தலையில் இன்னமும் கூட குண்டுத் துண்டுகள் நான்கு இருக்கின்றன என்றார்.

ஒரு கட்டத்தில் அமைச்சர் ஹக்கீம் குறுக்கிட்டு பெரும்பான்மையினர் தமது எண்ணத்தை சிறுபான்மையினர் மீது திணிக்கப் பார்க்கிறார்கள் என்றார். இந்தியாவில் அதிகாரப் பரவல் செய்யப்பட்ட மாநிலங்கள் இணைவதற்கான பிரிவுகிடையாது என்று அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறியதற்கு ஹக்கீம் பதிலளித்தார். இந்திய அரசமைப்பின்படி புதிய மாநில அரசு ஒன்றை உருவாக்க முடியும். வேற மாநிலங்களில் இருந்த சில பகுதிகளை இணைத்து புதிய மாநிலம் அமைக்க முடியும். இரண்டு வேறு மாநிலங்களை இணைத்தும் புதிய மாநிலம் உருவாக்க முடியும் என்றார் அவர்.

மக்கள் ஆணையைப் பெற்றிருப்பதால் திருத்தங்களை கொண்டு வருவதை மேற்கொள்ளலாம் என்று வீரவன்ச தெரிவித்த கருத்தை ஜனாதிபதி நிராகரித்தார். எல்லாக் கருத்துக்களையும் நான் அறிய விரும்புகிறேன் என்றார் ஜனாதிபதி. ஜனாதிபதி கூறினார் , ''என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரியும். அவர்கள் சிங்கள எதிர்ப்பு கோஷங்களைக் கிளப்புகிறார்கள். நான் இருக்கும் வரை அவ்வாறு எதுவும் நடக்கவிடமாட்டேன். என்றார் அவர். 13 ஆவது திருத்தத்தை மாற்றுவதில் ஒரு முடிவு எடுக்கப்படாவிட்டால் வடமாகாண தேர்தலை ஒத்திப் போடும்படி சம்பிக்க ரணவக்கவும், வீரவன்சவும் கோரினார்கள். மக்கள் வாக்கெடுப்பொன்றை நடத்தலாம் என்றும் வீரவன்ச கூறினார். ''சரி, சரி பார்ப்போம்'' என்று ஜனாதிபதி பதில் அளித்ததுடன் கொந்தளிப்பான அமைச்சரவைக் கூட்டம் முடிவுக்கு வந்தது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் கல்வியின் புதிய போக்கும் செல் நெறிகளும்


பா.தனபாலன்,
ஆசிரியர் வாண்மை
விருத்தி நிறுவகம்.

நாட்டின் முழு அபிவிருத்தியின் அடித்தளத்துக்கு தீர்க்கமான பங்களிப்பை வழங்கும் முதல்காரணி கல்வியாகும். சமகால-பூகோள சவால்களை வெற்றி கொள்வதற்கும், உள்நாட்டு இனத்துவ கலாசார அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் உறுதுணையான கருவியும் கல்வியாகும். சமூகத்தில் கல்வியறிவு இன்மையாலும், கல்வி விழிப்புணர்ச்சி இன்மையாலுமே பல சீர்கேடுகளும், வறுமையும், குடும்பப் பிளவுகளும், கலாசாரச்சீர்கேடுகளும் அரசியல் தகராறுகளும் ஏற்படுகின்றன. கல்வியறிவையும், விழிப்புணர்ச்சியையும் சரியான சமூகத்துக்கு வழங்கினால் ஒரு புதிய சமூகப் புரட்சியை எம்மால் ஏற்படுத்த முடியும். இதனடிப்படையில் உலகளாவிய ரீதியிலும் நாடுகளிடையேயும் யுனெஸ்கோ அமைப்பு பல வேலைத் திட்டங்களை நடத்தி வருகின்றது. யுனிசெப் அமைப்பின் உதவியுடன் கட்டாயக் கல்வி வேலைத்திட்டமும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

### புதிய கல்விச் சட்ட முன்மொழிவுகள்

கலாநிதி குணவர்த்தனா தலைமையிலான பொதுக் கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான குழு தனது முன்மொழிவுகளை வெளியிட்டுள்ளது.

1939 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க கல்விச் சட்டமும் அதன் மீது மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களான 1939 இன் 61 இலக்கச் சட்டம், 1945 இன் 21 இலக்கச் சட்டம் 1960 ஆம் ஆண்டின் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கல்லூரிச் சட்டம், 1961 கல்வி வெள்ளையறிக்கை 1968, 28 இலக்க பொதுப் பரீட்சைச் சட்டம், 1973 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க புதிய பாதை கல்விச் சட்டம். 1985 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவகச் சட்டம், 1986 ஆம் ஆண்டின் தேசிய கல்விக் கல்லூரிச் சட்டம், 1991 ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக் குழுச் சட்டம் என்பன முக்கியமானவை.



இவை தொடர்பான விமர்சனங்களை உள்வாங்கிய புதிய கல்விச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் புதிய கல்விச் சட்ட முன்மொழிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இலங்கைக் கல்வியின் சகல விடயங்கள் தொடர்பான பிரச்சினைகளும் தீர்வுகளும் இவ் ஆவணத்தில் முன்மொழியப்பட்டுள்ளன. (பொதுக் கல்வி, இலக்குகள், அமைப்புகள், கல்வி முகாமை, ஆளணி, கல்வித்தரமேம்பாடு, வளங்கள்)

### கல்வி அமைப்பின் நோக்கு

"இலங்கை நாட்டின் அடையாளத்தின் பங்காளர்களாக திறமை மிக்க பிரஜைகள் மூலம் சர்வதேச சமூகத்தின் வெற்றியை நோக்கிய இலக்கை எட்டுதல்" என்பதே கல்வி அமைப்பின் நோக்கமாகும். இதன் அடிப்படையில் கல்வியமைச்சின் பணிக்கூற்று (Mission) "நவீனமயப்பட்ட கல்வி முறையினூடாக அதி சிறந்த இலக்கை எட்டுதல், சம உரிமை, சம சந்தர்ப்பங்களை உருவாக்கி 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை வெற்றிகரமாக எதிர் கொள்ளக்கூடிய மானிடப் பண்பு கொண்ட நற்பிரஜைகளை உருவாக்குதல், இதற்கேற்ப பாடசாலைகளில் மாணவர்களுக்குக் கல்வி வழங்கல் என்பவை முன்னெடுக்கப்படும்.

### பாடசாலை அபிவிருத்தி

தாம் உருவாக்கிக் கொண்ட சகல குறிக்கோள்களில் உரிய தேர்ச்சி மட்டத்தை அடையும் பாடசாலையே வினைத்திறன் மிக்க பாடசாலை எனக் கொள்ளப்படும். இதன் பண்புகள், மாணவர்களின் பாடசாலை வரவு உயர்மட்டத்தில் காணப்படல், மாணவர் இடைவிலகல் மிகக் குறைதல், பரீட்சைப் பெறுபேறுகள் உயர்மட்டத்தில் இருத்தல், லீவு பெறல் குறைதல் (அதிபர், ஆசிரியர், மாணவர்) உயிர்ப்பான பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு, வளங்கள் சீராகப் பேணப்படல், சிறந்த நூலகம், கற்றல் கணினிச் சாதனங்கள் கொண்டிருத்தல். பாட இணைப்பாடவிதான செயற்பாடுகள் சிறப்பாகப் பேணப்படல், கற்றல் செயன் முறை ஆக்க பூர்வமானதாகவும், சிறப்பானதாகவும் காணப்படல். இதற்கு பாடசாலையில் அரசியல் தலையீடுகளோ, அதிகாரத் தலையீடுகளோ தேவையில்லாத தாக்கல், ஆசிரியர் கௌரவத்தை அதிகரித்தல் என்பனவும் பாடசாலைகளை மேலும் வினைத்திறனாக்கப் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம், கணிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம், சிறுவர் நேயப் பாடசாலைச் செயற்றிட்டம், 1000 பாடசாலை அபிவிருத்தி செயற்றிட்டம், 5000 ஊட்டப் பாடசாலை விருத்திச் செயற்றிட்டம், பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் பண்புசார் விருத்தி செயற்றிட்டம், ஆலோசனை வழிகாட்டல் செயற்றிட்டம், உள்ளக மேற்பார்வைக்கு உட்படுத்தல், கல்வியில் ஜப்பானிய 5S முறை பின்பற்றல்.

பரீட்சை முறை களில் சீர்திருத்தம் எனப் பலவகை நடைமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன. இவை பற்றிய விமர்சனம் ரீதியான பார்வை தேவை.

### ஆசிரியர் முன்சேவை பயிற்சி

உலகளாவிய ரீதியில் பாடசாலையில் ஆசிரியர் கற்பிக்கச் செல்ல முன்னர் முன் சேவைப் பயிற்சியைப் பெற்று வாண்மையாளராகவே பாடசாலை செல்ல வேண்டும் என்ற நியமம் பின்பற்றத் தொடங்கலாயிற்று. இதன்படி இலங்கையில் 18 தேசிய கல்விக் கல்லூரிகள் செயற்படுகின்றன. தற்போது கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழை வழங்கும் தேசிய கல்விக்கல்லூரிகள் எதிர்காலத்தில் கல்விமாணிப் பட்டத்தை வழங்கும் கல்விக்கல்லூரிப் பல்கலைக்கழகங்களாகத் தரம் உயர்த்தப்படவுள்ளன. இவ்வாறான விடயத்தைத் தேடி அறிந்து படிக்கும் போது கல்வி சார் பொது அறிவு விடயங்களை தெரிந்து கொள்ளலாம்.

### பொது உளச்சார்பு

ஒருவர் தர்க்க ரீதியாக நியாயம் காணவும், தரப்படும் தகவல்களில் இருந்து உண்மையை அறியவும், மதிப்பிடவும், சரியான முடிவை விரைவாக எடுப்பதற்கும் பொது உளச்சார்பு உதவுகின்றது. இத்திறன்களை மதிப்பிடவே இந்தப் பரீட்சை நடத்தப்படுகின்றது. இதற்கு நேர முகாமைத்துவ தேர்ச்சி அவசியமாகும். ஒருவருடைய சொற்புலமை, எண் புலமை, கட்புலமை, வாசிப்பு ஆற்றல், எதிர்வுகூறும் தேர்ச்சி, புரிந்து கொள்ளும் புலமை என்பவற்றினை இந்தப் பரீட்சை மூலம் கண்டறிந்து, அவரது தர்க்க ரீதியான நியாயம் காணும் குவி சிந்தனை, ஆக்கத்திறன், விரி சிந்தனை ஆற்றல்களைக் கணிப்பிடலாம்.

ஒருவருடைய பொது உளச்சார்பை வெளிப்படுத்துவது நுண்ணறிவாகும். தன்னைத்தானே மதிப்பிடவும் இது உதவுகிறது. போட்டிப் பரீட்சைகளில் வெற்றி பெற இந்த வினாத்தாளே கை கொடுக்கும். இதற்குத் தொடர்ச்சியான பயிற்சி அவசியமாகும்.

# இயற்கை எழில் கொஞ்சும் வன்னேரிக்குளம்

## சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்ய தீர்மானம்

கி.பிருதிவி

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வன்னேரிக்குளத்தை சுற்றுலா மையமாக அபிவிருத்தி செய்வதற்கான தீர்மானம் கரைச்சி பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த நிலையில் வன்னேரிக்குளத்தின் இயற்கை எழில் தொடர்பாக நோக்குவது அவசியமாகின்றது.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டத்தில் நெடுந்தீவில் இருந்தும் பூநகரியில் இருந்தும் பெருமளவு மக்கள் குடியேறினர். வன்னேரிக்குளம் குடியேற்றக் கிராமத்தின் உயிர்நாடியாக இங்குள்ள குளமே காணப்படுகின்றது. 375 ஏக்கர் வரையான நிலத்துக்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய இந்தக் குளத்தின் கீழ் இருபோக நெற் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தற்போது 360 வரையான குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இறுதிக் கிராமமாக வன்னேரிக் குளம் விளங்குகிறது.





கிளிநொச்சி மாவட்டத்திலேயே மிகவும் அழகான குளமாக வன்னேரிக் குளம் விளங்குகின்றது. குளத்தின் இயற்கை அழகுக்கு மருதமரம், நாவல், புளிய மரம், பாலை, கொன்றை மரம் ஆகியன அழகு சேர்ப்பதுடன் குளக்கரையிலும் அதனை அண்டிய பகுதியிலும் சிறு புற்களும், குளத்தினுள் நீர்த்தாவரங்களான தாமரை, அல்லி, ஆகாயத் தாமரை , சல்வீனியா என்பனவும் காணப்படுகின்றன. குளத்தினுள் காணப்படும் தாவரங்கள் அனைத்தும் ஆண்டுதோறும் பச்சைப் பசேலென காட்சி அளிப்பதுடன் குளத்தின் அழகையும் அதிகரித்துக் காட்டுகின்றன. இயற்கை எழில் கொண்ட இந்தக் குளத்தின் இன்னொரு சிறப்பான அம்சமாக நூற்றுக்கணக்கான பறவையினங்கள் இந்தக் குளத்தை நாடி வருகின்றமையை குறிப்பிடலாம். இங்கு பறவைகள் தங்கி வாழ பட்ட மரங்களும், பச்சைத் தாவரங்களும் உதவுகின்றன.

குளத்தின் நடுப்பகுதியில் கூடுகட்டி வாழும் பறவையினங்கள் ஒரு இயற்கைச் சூழலுக்கான சாட்சியாகவுள்ளன. சைபீரிய வாத்து, நீர்க்காகம், நாரை, [illegible] களைக் கொண்ட பறவைகள் சரணாலயமாகவும் இது விளங்குகிறது.

இங்குள்ள பறவைகளை இறைச்சிக்காக வேட்டையாடுபவர்கள் தொடர்பாக சூழலியல் ஆர்வலர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் இணைந்து கவனம் செலுத்துவது அவசியமாக உள்ளது.

வன்னேரிக்குளத்துக்கு நீரைக் கொண்டுவருவதில் முடக்கன் ஆறு, வேம்படி வள்ளுவர் ஆறு, கற்குளி ஆறு என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. துணுக்காயின் கோட்டை கட்டிய குளம், அம்பலப்பெருமாள் குளம் என்பன வான் பாயும் போது அதன் வெள்ளம் வன்னேரிக்குளத்தையே வந்தடைகிறது. கிளிநொச்சி மாவட்டத்திலேயே மிக அழகான இந்தக் குளம் சுற்றுலா மையமாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது இந்தக் கிராம மக்களுக்கும் , மாவட்ட மக்களுக்கும் மகிழ்வான விடயமாக உள்ளது. மேலும் வன்னேரிக்குளத்தையும் , தேவன் குளத்தையும் இணைத்து. பெரும் நீர்த் தேக்கமொன்றை உருவாக்குவதன் மூலமாக வன்னேரிக்குளத்தின் குஞ்சுக் குளம் கிராம மக்களும், பூநகரியின் ஜெயபுரம் கிராம மக்களும் வயல்நிலங் களில் விவசாயம் மேற்கொள்வதற்கான சூழல் உருவாகும்.

எல்லாவற்றையும் விட வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான் குளம் ஆகிய கிராமங்கள் எதிர்கொண்டுள்ள உவர் ஆபத்தையும் இதனால் தடுக்க முடியும். வன்னேரிக் குளத்தையும் , தேவன் குளத்தையும் இணைக்கும் முயற்சிகளுக்கு மேற்படி பகுதிகளில் காணப்படும் மிதிவெடிகள் தடையாக உள்ளதாக மாவட்டத்தின் உயர் அதிகாரிகள் மூன்று ஆண்டுகளாகக் கூறி வருகின்றனர்.

வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டம் உருவாக்கப்பட்டதில் இருந்து ஒழுங்கான போக்குவரத்துப் பாதை, மின்சார வசதிகள் என்பன இல்லாத நிலையிலேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கிளிநொச்சி நகரிலிருந்து 30 கி.மீ தூரத்திலுள்ள வன்னேரிக் குளத்துக்கு சிறந்த வீதியொன்றை உருவாக்குவதன் மூலமாக இயற்கை எழில் நிறைந்த வன்னேரிக்குளத்தை கிளிநொச்சி மாவட்டத்தின் அனைத்து மக்களும் மற்றும், பிற இடங்களைச் சேர்த்து சுற்றுலா பயணிகளும் பார்வையிட முடியும். வன்னேரிக்குளம் சுற்றுலா மையமாகத் திகழ்வதன் மூலமாக 60 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட ஒரு கிராமம் பெரும் வளர்ச்சி அடையும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

## 10 ஒரு வரைபடம்

■ நிவேதிதா மோகன்.



யமுனாவுக்கு கோபம் தாங்கமுடியவில்லை. அதனால் கட கட என நிலாவின் அறைக்குச் சென்று நிலாவிடம் நீ நினைத்ததை சாதித்து விட்டதாக நினைக்காதே! இன்று உனக்கு சாப்பாடு இல்லை என்று கத்தி விட்டு கீழே சென்று விட்டாள். நிலாவுக்கு தான் மீண்டும் கல்லூரி போகப் போகிறோம் என்ற சந்தோஷத்தில் சாப்பாடு தேவைப்படவே இல்லை. அந்தச் சந்தோஷத் தோடு அங்கேயே தூங்கி விட்டாள். இவை எல்லாவற்றையும் சித்தியின் மகன் கவனித்து கொண்டிருந்தான். அவன் பெயர் ஆகாஷ். அவன் நிலாவின் அறைக்குள் வந்து 'அக்கா! நீங்க இன்னும் சாப்பிடவே இல்லை. உங்க ளுக்கு பசிக்கும், இந்த பிஸ்கட்டையும் யூஸையும் குடியுங்க' என்று கூறியவுடன் நிலாவால் அவளது அழுகையை கட்டுபடுத்த முடியாமல் அவனை கட்டிக்கொண்டு அழுது விட்டாள். பின் 'நீங்க கீழே போங்க. அம்மா பார்த்தா உங்களத் திட்டுவார்' என்று மெதுவாகச் சொன்னாள். அதற்கு ஆகாஷ் இல்லை அக்கா!. அம்மா தொலை பேசியில் கதைக்கிறார். அதனால் அவர் இப்போதைக்கு வரமாட்டார் என்றான். நிலாவும் சிரித்து கொண்டே உங் களுக்கு அக்காவைப் பிடிச்சிருக்கா ? என்று கேட்க அவனும் 'ம்ம் ..ரொம்ப பிடிக்கும்'. என்று சொல்லிவிட்டு கீழே சென்று விட்டான்.

மறுநாள் காலை , மனதுக்குள் சந்தோஷமோ தாங்க முடியவில்லை, ஆனால் வெளியில் அதைக் காட்டிக் கொள்ளாமல், கீழே ஆகாஷிடம் வந்து 'அக்கா , படிக்க போய்ட்டு வாறன்' என்று சொல்லி விட்டு வீட்டுக்கு வெளியே வந்தாள். வெளியே வந்த அவளுக்கு சந்தோசம் தாங்க முடியவே இல்லை.

கல்லூரியில் நிலாவை பார்த்ததும் நிலாவின் நண்பர், நண்பிகள் அவளைக் கட்டிக்கொண்டு கொண்டாடினார்கள். பின் அவர்கள் நிலாவிடம் பாடசாலைக்கு வராத காரணத்தைக் கேட்டனர். அதற்கு நிலா நடந்தவற்றை ஒன்றும் விடாமல் கூறினாள். இதை கேட்டு திகைத்து நின்றனர். பின்னர்

அவர்கள் கண்களின் கண்ணீரோடு நிலாவுக்கு ஆறுதல் சொன்னார்கள். பின் நிலாவின் கை, கால் நடுங்க தொடங்கியது. இதைப் பார்த்து பயந்த நண்பர்கள் ஏன் உன்னோட கை,கால் நடுங்குது ? என்று கேட்க 'பசிக்கிறது' என்று அழத்தொடங்கி விட்டாள் நிலா. உடனே அவளின் நண்பர்கள் ஓடிப்போய் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்கள். அவள் சாப்பிட்ட விதத்தை பார்க்கும் போதே அவளின் பசி அவர்களுக்கு தெரிந்தது. நிலாவின் நண்பர்கள் அதை கண்டு வேதனைப் பட்டுக்கொண்டே 'உன்னால் அங்கு வாழமுடியாது என்றால் எங்களோடு கல்லூரி விடுதியில் தங்கிப் படி' என்று கேட்டனர். அதற்கு அவள் அம்மாவுக்காக அங்கு தான் இருக்கவேண்டும் என்று கூறினாள். பின் மாலை கல்லூரி முடித்து வீட்டுக்கு வந்த நிலாவால், அந்த வீட்டின் கோலத்தைக் கண்டு நம்பவே முடிய வில்லை.

(தொடரும்)

> ஏன் உன்னோட கை,கால் நடுங்குது ? என்று கேட்க 'பசிக்கிறது' என்று அழத்தொடங்கி விட்டாள் நிலா. உடனே அவளின் நண்பர்கள் ஓடிப்போய் சாப்பாடு வாங்கிக் கொடுத்தார்கள். அவள் சாப்பிட்ட விதத்தை பார்க்கும் போதே அவளின் பசி அவர்களுக்கு தெரிந்தது.

# பெண்ணின் கலாசாரம்

■ தாமரை



ஒரு சமூகத்தின் மீது சுமத்தப்பட்ட அல்லது இணைக்கப்பட்ட வாழும் முறை, அரசியல், கலைகள், ஆடை ஆபரணங்கள் போன்றவற்றிலுள்ள தனித்தன்மை அந்த சமூகத்தின் கலாசாரமாகக் கொள்ளப்படுகிறது. வாழும் காலங்களில் ஓர் இனம் அடையாளம் காட்டப்படுகிற தன்மையை இந்த கலாசாரம் பிரதிபலிக்கிறது. சமூகத்தில் உள்ள பெண்களின் நடையுடை பாவனையே இதில் முக்கியத்துவம் பெறுகிறது.

ஆனால் பெண்களது எண்ணங்கள், உணர்வுகள், செயற்பாடுகள் மனித வாழ்வை அவள் எவ்வாறு வடிவமைக்க விரும்புகிறாள் என்பவற்றை அவளால் முழுமையாக சரியான விதத்தில் வெளிப்படுத்த முடிகிறதா என்பது பெரிய கேள்விக்குறியாகவே எம் கண்முன் நிற்கிறது. எந்த அளவுகோலுடன் இவள் இதைத் தீர்மானித்துக் கொள்கிறாள் என்பது இங்கே முக்கியமாகிறது.

இன்றைக்கு சமயம், கலை, பொருளாதாரம், இலக்கியம், தொடர்பூடகம் எனப் பல்வேறுபட்ட சகல கலாசாரச் செயற்பாட்டுத் தளங்களிலும் பெண்கள் ஈடுபட்டு வருவதை நாம் காண்கிறோம். ஆண்களால் மட்டுமே செய்ய முடியும் எனக்கருதப்படும் அபிவிருத்தி வேலைகள், தீர்மானம் எடுத்தல், ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், தலைமை ஏற்றல் போன்ற செயற்பாடுகளில் இன்று பல பெண்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எமது நாட்டில் நிலவிய போர்ச்சூழல் ஆண்களின் இயங்கு தளத்தில் ஓரளவு இடைவெளி ஏற்படுத்திய நிலையில் பெண்கள் வீட்டுக்குள் இருந்துவிடமுடியாத சூழல் ஏற்பட்டுள்ளதை கண் முன்னாலேயே நாம் பார்க்கிறோம். இங்கே பெண்களின் பங்களிப்புக்கான தேவை ஏற்படுமிடத்து அவர்கள் வெளியே வந்து செயற்படுவதற்கான சாதகமான நிலை ஏற்படுகிறது. இவர்கள் தாம் சார்ந்த துறைகளின் செயற்பாடுகளில் இந்த கலாசாரத்தை எவ்வகையில் பிரதிபலிக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே இந்த கலாசாரத்தின் பெறுமதி கவனத்தில் கொள்ளப்படுகிறது. பெண்களின் செயற்பாடுகளினூடாக கணிக்கப்படுகின்ற இந்த கலாசாரத்தை தீர்மானிக்கின்ற பொறுப்பும் பெண்களிடமே உள்ளதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும். இந்தப் பொறுப்பை எத்தனை பெண்கள் சரியாக புரிந்துகொள்கிறார்கள். ஏதோ ஒரு அதிகார வர்க்கத்தால் பெண்கள் மீது திணிக்கப்பட்ட இந்த கலாசாரத்தின் தன்மை சரியானதுதானா என்று எத்தனை பேர் சிந்திக்கிறார்கள். இந்த விதமாக அமைந்து விட்ட இந்த கலாசாரத்தின் ஆடம்பரங்கள் பெண்களுக்குத் தேவையா? என்ற கேள்வி இன்று பலராலும் முன் வைக்கப் படுகின்ற கருத்தாகிறது.

பட்டாடைகளும் நகைகளும் ஆடம்பரமான சடங்குகளும்தான் எமது கலாசாரம் என்பதை ஏற்றுக் கொள்ளும் அறியாமையிலிருந்து நமது பெண்கள் விழித்துக் கொள்ள வேண்டும். நகையும் பட்டாடையும் ஆடம்பரமான வாழ்வும்தான் தனக்குப் பெருமைதரும் என்று ஒரு பெண் நினைப்பாளேயானால் அது போன்ற முட்டாள்த்தனம் வேறு இல்லை. தன் கல்வி யாலும் தன்னம்பிக்கையாலும் ஆளுமையாலும் மனிதப் பண்புகளாலும் ஒரு பெண் நிமிர்ந்து நிற்பாளேயானால் அதுதான் சமூகத்தில் அவளுக்கு பெருமை தரும் விடயம் குறைந்த பட்சம் இந்த விதமாய் நிமிரும் பெண்கள் என்றாலும் தமது வாழ்வை எளிமையானதாகவும் ஆடம்பரமற்றதாகவும் ஆக்கிக்கொண்டால் சமூகத்தில் மற்றவர்கள் பின்பற்றகூடிய முன் உதாரணமாக திகழ்பவர்களாக இருக்க முடியும்.

போரினால் நலிவுற்றிருக்கும் நமது தேசத்தின் இன்றைய தேவை ஆடம்பரங்களை துறத்தல். எளிமையான வாழ்வை தேர்ந்தெடுத்தல். இது சாத்தியமாவது பெண்களின் செயற்பாட்டிலேயே தங்கியிருக்கிறது.

சமூகத்தில் எந்தப்பிரச்சனை என்றாலும் அதற்கு முகம் கொடுக்கும் பெரும் பொறுப்பு பெண்களுக்கே உள்ளது. அநேகமான பெண்களின் வாழ்நிலை சராசரிக்கும் கீழாகவே அமைந்துள்ளது. போரின் நடுவேயான பல இழப்புக்களைத் தாங்கியவர்களாகவே இவர்களில் பலர் இருக்கிறார்கள். இத்தகைய நிலைமையில் எமது கலாசாரங்களின் ஆடம்பரங்கள் சுமைகளாக அழுத்துவதை பெண்கள் அனுமதிக்கக் கூடாது. எமது இயற்கை வளங்களுக்கு பொருந்தக்கூடிய விதத்தில் எமது கலாசாரத்தை அமைக்கத் தவறினால் எமது இனம் பாரிய அழிவை எதிர்நோக்குவதை தவிர்க்க முடியாமல் இருக்கும்.

பொதுவாகவே பெண்கள் ஆடம்பரமோகம் கொண்டவர்கள் என்று சொல்லப்படுவதுண்டு இதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது என்பதை பல பெண்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்றைய சமூகத்தில் பலவிடையங்களில் பெண்களே பெண்களுக்கு எதிரிகளாகவும் தம்மை அடையாளம் காட்டுகிறார்கள். பெண்ணே பெண்ணிடமிருந்து விடுதலை பெறவேண்டும். பெண்ணே பெண்ணை சமமாய் நடத்த முன்வரவேண்டும்.

சகமனிதரை நேசிக்கும் மனிதப் பண்பையும் எளிமையான வாழ்வை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தையும் எமது கலாசாரமாக பெண்கள் ஏற்றுக் கொள்வதே இன்றைய காலத்தின் தேவையாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் உபகரணங்களை புனரமைத்து தருக

### வவுனியா பூங்காவில்: பெற்றோர் மீண்டும் கோரிக்கை

வவுனியா, ஜூன் 17
வவுனியா பொதுப் பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்களைப் புனரமைத்து பாவனைக்கு விடுமாறு பெற்றோர் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்.
வவுனியா நகரில் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ள வவுனியா பொதுப் பூங்கா வவுனியா நகரசபையின் பராமரிப்பில் உள்ளது.
கடந்த சில மாதங்களாக சிறுவர்களுக்கான விளையாட்டு இயந்திர உபகரணங்கள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.
இதனால் பூங்காவுக்கு வருகை தரும் சிறுவர்கள் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலையில் கவலை அடைவதையும், அவற்றில் ஏறி விளையாடுவதற்கு அடம்பிடிப்பதையும் காணமுடிகின்றது. இதனால் பெற்றோருக்கும் சிறுவர்களுக்கும் இடையில் தேவையில்லாத பிரச்சினைகள் தோன்றுவதாகவும் தெரிய வருகின்றது.
இது தொடர்பாக வவுனியா நகரசபைத் தலைவரிடம் கேட்டபோது;
''வெகு விரைவில் சிறுவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற வகையில் பழுதடைந்துள்ள விளையாட்டு உபகரணங்களை புனரமைக்கவுள்ளோம். தற்போது இந்தப் பூங்காவை நவீன முறையில் அழகுபடுத்துவதில் ஈடுபட்டுள்ளோம் எனத் தெரிவித்தார்.
(க-402)



## பரந்தன் பஸ் நிலையத்தில் தரித்துச் செல்லும் பஸ்கள்

கிளிநொச்சி, ஜூன் 17
பரந்தன் பஸ் நிலையத்தில் பஸ்களைத் தரித்துச் செல்ல கரைச்சிப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன்படி நேற்றுமுன்தினத்தில் இருந்து பஸ்கள் தரித்துச் செல்கின்றன.
நேரக்கணிப்பாளர் நிலையமும் பஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.
இதன்படி முல்லைத்தீவு, பூநகரி, யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட இடங்களுக்குச் செல்லும் பஸ்கள் பரந்தன் பஸ் நிலையத்தில் தரித்து பயணிகளை ஏற்றிச் செல்கின்றன.
பரந்தன் பஸ் நிலையம் மீளப் புனரமைக்கப்பட்டபோதும் அங்கு பஸ்கள் தரித்து செல்லாத காரணத்தால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்தனர்.
குறிப்பாக வீதிகளில் காத்திருந்தே பஸ்களில் ஏறவேண்டிய நிலை காணப்பட்டது.
இந்த நிலையில் பஸ் நிலையத்தில் பஸ்களைத் தரித்துச் செல்ல நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிவந்தனர்.
இதன்பயனாக நேற்றுமுன்தினத்தில் இருந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
(ஐ-6)



### அதிபர்களுடன் மாத்திரம் இயங்கிய

# ஒன்பது பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள் நியமனம்

முல்லைத்தீவு,ஜூன் 17
முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் அதிபர்களுடன் மாத்திரம் இயங்கி வந்த பத்து ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்பது பாடசாலைகளுக்கு புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.
முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள பத்து வரையான பின்தங்கிய பாடசாலைகள் ஆசிரியர் வளப் பற்றாக்குறைகளுடன் குறிப்பாக அதிபர்களுடன் மாத்திரமே இயங்கி வந்தன.
இதனால் இந்தப் பாடசாலைகளில் கல்வி கற்றுவந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வந்தன.
இந்த நிலையில் குறித்த பத்துப் பாடசாலைகளில் அம்பலப்பெருமாள்குளம் அ.த.க.பாடசாலை, ஆலங்குளம் அ.த.க.பாடசாலை, புத்துவெட்டுவான் அ.த.க.பாடசாலை, ஒதியமலை அ.த.க.பாடசாலை, அலைகல்லுபோட்டகுளம் அ.த.க.பாடசாலை, புலிமச்சிநாதகுளம் அ.த.க.பாடசாலை, மூன்று முறிப்பு அ.த.க.பாடசாலை, அம்பாள்புரம் அ.த.க. பாடசாலை, ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலை ஆகிய பத்துப் பாடசாலைகளுக்கே இந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன.
இதில் 5 பாடசாலைகளுக்கு நிரந்தர ஆசிரியர்களும் ஏனைய 4 பாடசாலைகளுக்கு தொண்டர் ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
இதேவேளை ஆரோக்கியபுரம் அ.த.க.பாடசாலைக்கு ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.
(ஐ-6)

## நம்பிக்கையுடன் படியுங்கள்

### ஆசிரியர் வளத்தை உருவாக்கித் தருவேன் கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர்

அக்கராயன், ஜூன் 17
மாணவர்கள் நம்பிக்கையுடன் படியுங்கள் ஆசிரிய வளத்தை நாம் உருவாக்கித் தருவோம் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.



அக்கராயன் மகா வித்தியாலய உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுடன் கலந்துரையாடும் போதே பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
பாடசாலையில் கணித, விஞ்ஞானப் பிரிவு ஆசிரிய நெருக்கடியை தீர்க்கும் வகையில் மேற்படி பாடசாலைக்கு வருகை தந்த வலயக் கல்விப் பணிப்பாளர் பாடசாலையில் நிலவும் நெருக்கடி தொடர்பாக அதிபரிடம் கேட்டறிந்ததுடன் கணித, விஞ்ஞானப் பிரிவு ஆசிரிய வளத்தைப் பெருக்குவது தொடர்பாகவும் அதிபர் மாணவர்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.
(எ-18)

### சிறாட்டிகுளத்தில் மிளகாய் செய்கை;

## எதிர்பார்த்த பயன் கிட்டியது

முல்லைத்தீவு, ஜூன் 17
மாந்தை கிழக்கு, சிறாட்டிகுளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மிளகாய்ச் செய்கை எதிர்பார்த்த வெற்றியைத் தந்துள்ளது. எனவே எதிர்வருங்காலங்களில் மிளகாய்ச் செய்கையை ஊக்குவிக்கக் கூடிய திட்டங்களை அறிமுகம் செய்ய வேண்டும் என மாந்தைகிழக்கு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;
முல்லைத்தீவு மாவட்டத்தில், மிளகாய்ச் செய்கைக்கு பெயர் பெற்ற இடமாக சிறாட்டிகுளம் காணப்படுகிறது. இங்கு இந்த வருடம் 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 27 ஏக்கர் நிலப்பரப்பில் மிளகாய்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதன் மூலம் இந்த முறை விவசாயிகள் நல்ல விளைச்சலைப் பெற்றுள்ளனர். இதன் மூலம் இந்தக் குடும்பங்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையும். இதேவேளை உள்நாட்டு உற்பத்திக்கான ஊக்குவிப்பாகவும் இது அமைகிறது. மிளகாய் செய்கையை மேலும் விரிவுபடுத்தி பயனாளிகளுக்கு ஊக்குவிப்பு வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.
மிளகாய்ச் செய்கை சிறாட்டிகுளம் பறங்கியாற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.
எனவே இதற்கு ஒரு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தை ஏற்படுத்தித் தரவேண்டும் என இந்தப் பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(ஐ-6)



# இந்திய இழுவைப் படகுகளின் வருகையை தடுக்க நாம் ஒருமித்து குரல் கொடுப்போம்

### மன்னார் மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத் தலைவர் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 17
இந்திய இழுவைப்படகுகளின் வருகையால் எமது மீனவர்களுக்கு ஏற்படும் இழப்பை தடுக்க நாம் ஒருமித்து குரல் கொடுக்க வேண்டும் என மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் எம்.எம். ஆலம் தெரிவித்தார்.



இந்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
அவர் மேலும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-
கடந்த 30 வருடங்கள் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு போரின் காரணமாக எமது மக்கள் கடற்றொழில் புரிவதில் பல தடைகளை எதிர்கொண்டனர். நேரக்கட்டுப்பாடு, தூரக் கட்டுப்பாடு, மற்றும் பாஸ் நடைமுறை போன்ற காரணங்களால் தொழிலில் பெரிய இடர்களைச் சந்தித்தனர்.
இந்தக் காலப்பகுதியை இந்திய [illegible] தங்களுக்கு [illegible] படுத்தி நினைத்தவாறு எமது கடற்பரப்பில் தொழில் புரிவதை வழக்கமாக்கிக் கொண்டனர். தற்போது பாரம்பரியமாகத் தாங்கள் தொழில் புரியும் இடம் என நியாயம் செய்யவும் முற்படுகின்றனர்.
எமது நாட்டில் தடைசெய்யப்பட்டுள்ள இழுவை மடி வலைகளைக் கொண்டு பெறுமதியான கடலுணவுகளைக் களவாடுகின்றனர். எமது மீனவர்கள் இந்திய இழுவைப்படகின் வருகையை காரணம் காட்டி தடைசெய்யப்பட்ட தொழில் முறையை மேற்கொள்ள முற்படுகின்றனர்.
இதனால் திணைக்கள அதிகாரிகளும் மீனவர் சங்கங்களும் மீனவர்களுடன் முரண் [illegible] சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. 45 நாள் தடைக்காலம் முடிந்தவுடன் இந்தியப் படகுகளின் வருகை நின்றுவிடும் என்ற எதிர்பார்ப்புடன் இருந்த மீனவர்கள்கடந்தஜூன் 03ஆம் திகதி தொடக்கம் இந்தியப் படகுகளின் தொடர் வருகையால் பாதிப்படைந்துள்ளனர்.
இந்த கடற்றொழிலை நம்பி பத்தாயிரம் குடும்பங்கள் உள்ளனர். பல வருடங்களாக இந்திய இழுவைப் படகின் வருகையால் வாரத்தில் மூன்று தினங்களே தொழில் புரிய வேண்டிய நிலைக்கு மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.
எனவே நாடாளுமன்ற உறுப்பினர்களோ, அமைச்சர்களோ, இந்தச் சமூகத்தின் மீது அக்கறை உள்ளவர்களோ இது தொடர்பில் உரிய இடங்களில் குரல் கொடுக்க வேண்டும். இல்லாது போயின் இந்திய மீனவர்களின் வருகையை எதிர்த்து அனைத்து இன மக்களையும் மீனவர்களையும் ஒன்று திரட்டி எமது எதிர்ப்பை வெளிக்காட்டுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம் -என்றுள்ளது.
(எ-12)


### கற்கள் பரவப்பட்டு கைவிடப்பட்ட

## அம்பாள்புரம் வீதியை புனரமைக்க கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 17
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு அம்பாள்புரம் கிராமத்தின் குடியிருப்பு வீதிகளில் ஒன்றான சகாய வீதியின் புனரமைப்புப் பணிகள் கிடப்பில் போடப்பட்டுள்ளமையால் குறித்த வீதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.
அம்பாள்புரம் கிராமத்தில் தற்போது 205 வரையான குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. இவர்கள் வெளி இடங்களுக்குச் சென்று வருவதில் வீதி பெரும் தடையாக இருப்பதாகக் குறிப்பிடுகின்றனர்.
வன்னிவிளாங்குளம்- வவுனிக்குளம் வீதியையும், வெள்ளாங்குளம்- மாங்குளம் வீதியையும் இணைக்கும் அம்பாள்புரம் சகாய வீதி வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் புனரமைப்பு செய்ய தெரிவு செய்யப்பட்டது. இதன்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு வீதிக்கு கற்கள் பரவப்பட்ட நிலையில் அந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் நிறைவுறுத்தப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகள், அப்படியே கிடப்பில் போடப்பட்டுள்ளன. எனவே குறித்த வீதியினை புனரமைத்துத் தருமாறு இந்த வீதிப் பாவனையாளர்கள் கோரியுள்ளனர்.
(ஐ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவுடன் காணப்படும் ஆனைக்கோட்டைப் பாடசாலை



நவாலி, ஜூன் 17
ஐயாயிரம் பாடசாலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையும் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டிருந்தது.
இந்த நிதியைக் கொண்டு புனரமைக்கப்பட்ட வேலைகளில் பாடசாலை முன் பக்க முகப்புத் தோற்றம் புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. (ஒ-100)

# கணினி மயமாகும் காணி விவரங்கள்

## ஆராய்கிறது அரசு

கொழும்பு, ஜூன் 17
தேசிய அபிவிருத்திச் செயற்பாட்டை மேலும் மேம்படுத்த காணிகளின் விவரங்களை கணினி மயப்படுத்துவதற்கு அரசு ஆராய்கிறது.
இந்தத் தகவலை காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக்கபண்டா தென்னக்கோன் தெரிவித்தார்.
இந்தத் திட்டம் தேசிய காணி விற்பனைச் சந்தை விரிவாக்கம் செய்வதற்கும் , செம்மைப் படுத்துவதற்கும் உதவும் என்று அவர் கூறினார்.
நில அளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படும் எல்லைகளுக்கான வரைபடங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் ஒவ்வொரு காணித்துண்டுகளின் விவரங்கள் கணினியில் தரவுகளாக உள்ளடக்கப்படும் என்று அவர் கூறினார்.
இந்தத் தரவுகளில் காணியின் பெயர், பரப்பளவுகள், அமைவிடம், உரிமையாளரின் பெயர், காணி அமைந்துள்ள கிராம உத்தியோகத்தர்களின் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் காணியொன்றுக்கு உள்ள உரிமைகள் போன்ற விவரங்கள் உள்ளடக்கப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
கணினி மயப்படுத்தப்படும் காணிகளின் விவரங்கள் ஊடாக அவசியப்படும்போது பிரதிகளைப் பெறுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அவர் மேலும் கூறினார். (ச-22)

## வாகன விபத்தில் அறுவர் காயம்

கண்டி, ஜூன் 17
கண்டி பொலிஸ் தலைமையகத்துக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் சாரதிகள் இருவர் உட்பட 6 பேர் படுகாயமடைந்துள்ளனர்.
கட்டுகஸ்தோட்டைப் பகுதியை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ஒன்றும் அஸ்கிரிய பகுதியிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த வான் ஒன்றுமே ஒன்றுடனொன்று மோதி விபத்துக்குள்ளாகின என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இரண்டு வாகனங்களும் வீதிப் போக்குவரத்து விதிகளை மீறிப் பயணித்தமையே இந்த விபத்துக்கு காரணமாக அமைந்தது என்று கண்டி போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் கூறினர்.
இந்தச் சம்பவத்தில் காயமடைந்தோர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கண்டிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## காலதாமதமாக கிடைக்கிறது சிறுபோகத்துக்கான உரம்

### அம்பாறை விவசாயிகள் கவலை

கொழும்பு, ஜூன் 17
சிறுபோகத்துக்கான மஹிந்த சிந்தனை மூலம் வழங்கப்படும் உரமானியம் காலதாமதமாக கிடைக்கின்றது என்று அம்பாறை மாவட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
கடந்த காலங்களில் உரிய நேரத்துக்கு மொத்தமாக வழங்கப்பட்ட உரமானியம் இந்த முறை கட்டம் கட்டமாக வழங்கப்பட்டு வருகின்றது. அதனால் காலதாமதம் ஏற்படுகின்றது.
காலம் கடந்து வழங்கப்படும் உரமானியத்தால் எந்தவித பயனும் இல்லை என்று விவசாயிகள் தெரிவித்தனர்.
எனவே உரமானியத்தை உரிய நேரத்துக்கு வழங்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-ரி)

## அரசின் பிழையை மறைக்க முயல்வோரே ஐ.தே.க வாகன தொடரணி மீது தாக்குதல்

### அப்துஸ்ஸலாம் தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 17
ஐக்கிய தேசியக் கட்சியின் வளர்ச்சியை பொறுக்க முடியாதவர்களும், அரசின் பிழைகளை மறைக்க முற்படுபவர்களுமே ஐ.தே.கட்சியின் வாகனத் தொடரணிக்கு தாக்குதல் நடத்தியுள்ளனர்.
இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரசார செயலர் ஏ.அப்துஸ்ஸலாம் தெரிவித்தார்.
காலி, பலப்பிட்டியவில் ஐக்கிய தேசியக் கட்சியின் வாகனத் தொடரணி மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
நடைபெற்ற தாக்குதலை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.
இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறச் சென்றவர்கள் மீதே இவ்வாறான காடைத் தனம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.
நாட்டின் எதிர்க்கட்சிக்கும் ஆறுதல் கூறும் உரிமை உண்டு.
ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் நெருங்கிய உறவு உண்டு எனக் கூறுபவர்களுக்கு அந்த குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை என்பது புலனாகும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-ரி)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


**மேடர்:** எதிர்காலத்துக்கான முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களால் இருந்துவந்த மனக்கசப்புகள் விலகும்.


**இடபர்:** தைரியமான முடிவுகளை எடுத்து வெற்றி காண்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.


**மிதுனர்:** மனக்குழப்பங்கள் விலகும். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பர்களின் வருகையுண்டு. உத்தியோகத்தில் வேலைப்பளு குறையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி கிடைக்கும்.


**கடகர்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். மன நிறைவுடன் சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். வெளியூரிலிருந்து உறவினர்கள், நண்பகர்களின் வருகை உண்டு.


**சிங்கர்:** திட்டமிடாத செலவுகளும், பயணங்களும் குறுக்கிட்டாலும் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். மற்றவர்களுடன் உங்களை ஒப்பிட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களின் அணுகுமுறையை மாற்றுங்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.


**கன்னி:** குடும்பத்தினருடன் வீண் வாக்குவாதம் வந்து போகும். உதவி கேட்டுத் தொந்தரவுகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வடைவீர்கள். எதிலும் முன்யோசனையுடன் செயற்படப்பாருங்கள்.

**நாளை**
*ஆனி-04 செவ்வாய்க்கிழமை 18.06.2013*
*திதி: தசமி பி.இ. 04.14 வரை*
*நட்சத்திரம்: அத்தம் மு.ப. 10.05 வரை*
*சுபநேரம்: 10.23 - 11.53 வரை*
*இராகுகாலம்: 02.53 - 04.23 வரை*


**துலார்:** நீங்கள் முன்பு செய்த உதவிகளுக்கு இப்பொழுது பாராட்டப்படுவீர்கள். உற்சாகமான பேச்சால் அனைவரையும் கவருவீர்கள். தாயாரின் உடல்நிலை சீராக இருக்கும்.


**விருச்சிகர்:** சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரசுக் காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.


**தனுசர்:** துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். தாயாரின் நீண்ட நாள் கோரிக்கைகளை பூர்த்தி செய்வீர்கள்.


**மகரர்:** உங்களுடைய பலம் எது பலவீனம் எது என்று நீங்கள் உணர்ந்துக் கொள்வது நல்லது. சொந்தபந்தங்களால் அன் புத்தொல்லை உண்டு. இரண்டாவது முயற்சியில் சில காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் ஓரளவு வேலைச்சுமை குறையும்.


**கும்பர்:** தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். எதிலும் நிதானித்துச் செயற்படுங்கள்.


**மீனர்:** பழைய நல்ல சம்பவங்களை நினைவுகூர்ந்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 5 | | | 7 | 9 | 1 | 8 | |
| | | 7 | | | | | | |
| 1 | 2 | | 4 | 3 | 8 | 7 | | 9 |
| | | | 1 | 5 | | | 2 | |
| 2 | | | | | | | | 5 |
| | 6 | | | 8 | 7 | | | |
| 6 | | 5 | 7 | 9 | 2 | | 1 | 8 |
| | | | | | | 2 | | |
| | 9 | 2 | 8 | 1 | | | 7 | 3 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 8 | 6 | 5 | 3 | 7 | 4 | 2 |
| 7 | 3 | 6 | 2 | 4 | 8 | 9 | 1 | 5 |
| 2 | 4 | 5 | 9 | 7 | 1 | 6 | 3 | 8 |
| 5 | 7 | 3 | 4 | 6 | 9 | 2 | 8 | 1 |
| 8 | 1 | 9 | 5 | 3 | 2 | 4 | 6 | 7 |
| 6 | 2 | 4 | 8 | 1 | 7 | 3 | 5 | 9 |
| 3 | 6 | 2 | 1 | 9 | 5 | 8 | 7 | 4 |
| 9 | 5 | 7 | 3 | 8 | 4 | 1 | 2 | 6 |
| 4 | 8 | 1 | 7 | 2 | 6 | 5 | 9 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார் கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரை யான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறி முகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விரைவு அனுமதி வழங்கு சேவை இன்று ஆரம்பம்

யாழ். மாநகர சபையினால், கட்டடங்கள் அமைப்பதற்கான விரைவு அனுமதி வழங்கும் சேவைப்பிரிவு, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அறிவுறுத்தலுக்கமைய இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது. இதன் மூலம் கட்டட விண்ணப்பங்கள் சட்ட விதிகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட்டால் ஏழு நாள்களுக்குள் அனுமதி வழங்கப்படும். இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு விசேட கட்டணங்கள் அறவிடப்படும் என மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார். (ந)

# உணர்வான காட்சிகளுக்கு மொழிகள் தேவையில்லை

### மே–1' குறுந்திரைப்பட வெளியீட்டில் தேவானந் கருத்து

'காட்சிகள் மொழிகளாக வெளிவர வேண்டும். குறுந்திரைப் படங்கள் உணர்வு மூலம் வெளிப்படுத்தப்படுவதால் எந்த மொழி மக்களும் அதனைப் பார்த்துப் புரிந்து கொள்ள முடியும்' இவ்வாறு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய இயக்குநர் தே.தேவானந் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவன் மொஹமட் பர்ஷானின் இயக்கத்தில் உருவான 'மே–1' குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவின் போது உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் ஆரம்பத்தில் வெளிமாவட்ட மாணவர்களின் வரவு குறைவாக இருந்தது. ஆனால் தற்போது வெளிமாவட்ட மாணவர்களின் வருகையும் உள்ளது. எமது நிறுவனத்தில் அச்சு, இலத்திரனியல் மற்றும் இணைய ஊடகங்கள் தொடர்பான கற்கை நெறிகள் கற்பிக்கப்படுகின்றன.

இன்று வெளியிடப்பட்ட 'மே–1' குறுந்திரைப்படம் மாணவர் படைப்பாக வெளிவந்துள்ளது. கிடைத்த வளங்களைக் கொண்டு சிறுவர் தொழிலாளர்களை இல்லாது செய்வோம் எனும் தொனிப் பொருளை இந்த குறும்படம் பேசிச் சென்றுள்ளது'' என்றார்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தில் இடம் பெற்ற இந்த விழாவுக்கு யாழ்ப் பாணப் பல்கலைக்கழக கலைப் பீட பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சிவநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புக்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.சத்தியசீலனும் கலந்து கொண்டனர். (ந–ரி)

## பாடசாலை சுவரில் ஓவியங்கள் மாணவர் திறன் விருத்திக்காக



வவுனியா , ஜூன் 17

வவுனியா மாவட்ட பாடசாலைகளில் சுவர் ஓவியம் வரைதல் ஊடாக மாணவர் திறன் விருத்தி மற்றும் சிறுவர் உரிமையை முன்னெடுக்கும் முயற்சியில் 'யுனிசெப்' அமைப்பு ஈடுபட்டு வருகிறது.

சுவர் ஓவியங்களை வரைவதற்காக பாடசாலை அதிபர்களுக்கு உதவு தொகையை 'யுனிசெப்' நிறுவனம் வவுனியா கல்வி வலயங்களின் கல்வி அபிவிருத்தி பிரிவின் ஊடாக வழங்கியுள்ளது.

பாடசாலை மாணவர்களால் வரையப்பட்ட இந்த ஓவியங்கள் சிறுவர் உரிமைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், சுற்றாடல் விழிப்புணர்வு செயற்பாடு உட்படப் பல்வேறு முக்கிய கருத்துக்களை பிரதிபலிக்கின்றன. இந்த ஓவியங்கள் பாடசாலையின் முன்பக்க சுவர்களில் வரையப்பட்டுள்ளன.

வவுனியாப் பகுதியில் முப்பதுக்கும் மேற்பட்ட பாடசாலைகளில் இந்த ஓவியங்களைப் பார்வையிடக் கூடியதாகவுள்ளது. (ஒ–402)

## இசைத் தொகுப்பு இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். இந்துக் கல்லூரிக்கென மும்மொழிகளால் தயாரிக்கப்பட்ட ''அல்மா மெற்றர்'' (ALMA MATER) இசைத் தொகுப்பு வெளியீடு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவன் சுந்தரேஸ்வரன் சுகன்யன் தயாரிப்பில் வெளியிடப்படவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மூத்த பத்திரிகையாளர் என். வித்தியாதரன், கௌரவ விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வி.கணேசராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்த இசைத் தொகுப்பு தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய மூன்று மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளது. (ஒ–14)

## வீடியோவில் 'ஆபாசம்' கரவெட்டி வாசிக்கு தண்டம் ரூ. 1 லட்சம்

வடமராட்சி, ஜூன் 17

வீடியோவில் ஆபாசப் படங்களைப் பதிவு செய்து வைத்திருந்த கரவெட்டி வாசிக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தினால் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கரவெட்டி இராஜ கிராமத்தில் சோதனை நடத்திய நெல்லியடிப் பொலிஸார் வீடியோ கசட்டில் படங்களை வைத்திருந்த நபர் ஒருவரைக் கைதுசெய்தனர். கைதுசெய்யப்பட்ட நபருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்த பொலிஸார் நபரையும் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் குறித்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் ஒரு லட்சம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார். (ஒ–8)

## ஆள் நடமாட்டமற்ற இடத்தில் தவறணையை மீள அமைக்குக பொதுமக்கள் வேண்டுகோள்

கொடிகாமம், ஜூன் 17

கடந்த சனிக்கிழமை வரணி மாசேரிப் பகுதியில் இனந் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்ட கள்ளுத் தவறணையை மீள அமைக்கும்போது ஆள்கள் நடமாட்டமற்ற பகுதியில் அமைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இத் தவறணை மது விற்பனையை மட்டும் கவனத்தில் கொண்டுள்ளது. மது வாடிக்கையாளர்களின் அடிப்படைத் தேவையான வேறான கொட்டில் அமைத்து இருக்கைகள் ஏதுமற்ற நிலையில் மது அருந்துவோர் பிரதான பாதையின் மத்தியிலும் மற்றும் ஆங்காங்கே அமர்ந்து இருந்து கள் அருந்தும் நிலையில் வழமையைக் கொண்டுள்ளனர்.

பிரதான பாதையால் பயணிக்கும் பொதுமக்கள் மது அருந்திய நிலையில் போதை தலைக்கேறியதில் அவர்களின் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்கும் நிலை வழமையாக உள்ளது.

இளைஞர்கள் அதிகமாக இங்கு மது அருந்துவதற்கு வருகின்றனர். இதனால் அவர்கள் அடிதடி போன்ற தேவையற்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எனவே நிர்வாகம் நடமாட்டம் இல்லாத பகுதியில் தவறணையை அமைத்து வாடிக்கையாளர்களின் தேவையையும் கவனிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (வ–122)

## பாடகர் சௌந்தர ராஜனின் நினைவு நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, ஜூன் 17

மறைந்தும் மறையாத பாடகர் ரி.எம்.சௌந்தரராஜனின் நினைவு நிகழ்வு வவுனியா தமிழ்ச் சங்கத்தால் வவுனியா ஆதி விநாயகர் ஆலய பாலாம்பிகை மண்டபத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தமிழ்ச் சங்கத் தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நினைவுச் சுடர் ஏற்றலைத் தொடர்ந்து தமிழ் வாழ்த்துப் பாடலை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் இசை ஆசிரியை செல்வி சி.லேகாவும், நினைவுப் பேருரையை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் துறை விரிவுரையாளர் ச.சசீதரனும் நிகழ்த்தவுள்ளனர்.

மேலும் சௌந்தரராஜனின் நிலைத்த புகழுக்குப் பெரிதும் காரணம் அவர் பாடிய பக்திப் பாடலா?, தத்துவப் பாடல்களா?, லௌகீகப் பாடல்களா? என்ற தலைப்பில் பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (எ–400)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

கசிப்பு வைத்திருந்த மட்டுவில் வடக்கு வாசிக்கி சாவகச்சேரி நீதிமன்றில் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. இதேவேளை, மதுவரி நிலையத்தினரால் அனுமதிப் பத்திரம் இன்றி வீடுகளில் கள்ளு வைத்திருந்த 12 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. அனைவரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து தலா 500 ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (த–9)

## முதலீட்டாளருக்கான பயிற்சிப் பட்டறை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் யாழ். கிளை முதலீட்டாளர் வலுவூட்டல் நிகழ்வாக ''நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வு'' எனும் தலைப்பில் முழுமையான நடைமுறை மாற்றங்களை உள்ளடக்கிய 2 ஆம் நிலைப் பயிற்சிப் பட்டறை ஒன்றை எதிர்வரும் 22 ஆம் திகதி தொடக்கம் வார இறுதி நாள்களில் பிற்பகல் 3மணி தொடக்கம் 6 மணிவரை பங்குப் பரிவர்த்தனையின் கோட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்துள்ளது.

வளவாளர்களாக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களான ஆ.சுப்பிரமணியம் மற்றும் கலாநிதி நிமல தாசன் ஆகியோருடன் வே.கும[illegible] [illegible] கருத்துரை வழங்குவர். (ஒ)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



கடந்த (20.05.2013) திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் சுப்பன் பாறி

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (17.06.2013) திங்கட்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிரியைகள் நாளை மறுதினம் (19.06.2013) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பன்னாலை, சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி.

குலசேகரம் குடும்பத்தினர்.

யாழ்.அரியாலை புங்கன்குளத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் பொன்னையா யோகானந்தன் அவர்களின்
(இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர் மகாவலி அபிவிருத்தி சபை)
31 ஆம் நாள் நினைவஞ்சலி



அப்பா உங்களை நாமிழந்து
முப்பத்தியொருநாள்கள்
ஆறாது உங்கள் பிரிவின் துயரம்
தீராது எங்கள் சோகம்
உங்கள் இழப்பை எண்ணியெண்ணி
இதயம் வரைக்கும் இறங்கிய சோகத்தால்
இன்று எங்கள் விழிகளில் வழிகின்றதே
கண்ணீர்த் துளிகள்....
உங்களது உறவுகளைப் பிரிந்து நீங்கள்
இறைவனை அடைந்து விட்டீர்கள்
உங்களது நினைவுகளுடன் உமது உறவுகள்
இவ்வுலகில் வாடிக்கொண்டு இருக்கிறார்கள்
நாள்கள் 31 என்ன பல்லாண்டு சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சகலாது
நின்று நிலைத்து வாழ்ந்திருக்கும்.
நினைவில் எம்முடனும் நியத்தில் இறைவனிடமும்
[illegible] உங்களின் ஆத்மா
[illegible] இறைவனை வேண்டுகிறோம்.

அன்னை மடியில்
29.07.1942
இறைவன் மடியில்
18.05.2013

உம் பிரிவால் வாடும் குடும்பத்தினர்.

(38326)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

## அதிபர் நியமனம்

யாழ். புனித ஜேம்ஸ் ஆண்கள் பாடசாலையின் புதிய அதிபராக ஏ.எம்.சி.மகேந்திரன் கடந்த மே மாதம்15 ஆம் திகதி தொடக்கம் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.
இவர் யாழ். மத்திய கல்லூரியில் வர்த்தகப் பாடத்துக்குரிய ஆசிரியராக முன்னர் கடமையாற்றிவர். யாழ். புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமைபுரிந்த எம்.ஞானப் பிரகாசம் கோப்பாய் மகா வித்தியாலயத்தின் அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். (ஒ-51)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 177 ஆவது ஆண்டு நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை அதிபர் தி.மாதவன் தலைமையில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பேராசிரியர் க.தேவராஜா கலந்து கொன்டார்.
தரம் ஒன்று தொடக்கம் தரம் 12 வரையிலான மாணவர்களில் கல்விச் செயற்பாட்டில் சிறப்பான பெறுபேறுகளைக் காட்டிய மாணவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டனர்.
2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பிரிவில் கலை, வர்த்தகம் ஆகிய பாடங்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரும் பல்கலைக்கழக பேராசிரியருமான பேராசிரியர் க.தேவராஜா வழங்கினர்.
பண்ணிசை, சித்திரம் ஆகிய துறைகளில் கோட்டமட்டத்தில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. இணைப் பாடவிதான செயற்பாடுகளாகிய விளையாட்டுத்துறையின் தடைதாண்டல் 100 மீற்றர் 200 மீற்றர், 400 மீற்றர் ஆகியவற்றில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஒ)

## ஜூபிலி பெருவிழா

யாழ். சுண்டுக்குளி புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு ஜூபிலிப் பெருவிழா இந்த மாதம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.
கொடியேறியுள்ள ஆலய நவநாள் வழிபாடுகள் தினமும் மாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும்,
தென்னிந்தியா பாளையங் கோட்டை மறை மாவட்ட மறை உரைஞர் அருட்திரு. இராஜேஸ்குமார் அடிகளின் மறை உரைகளுடன் நவநாள்கள் இடம்பெறும்.
எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 7 மணிக்கு முதல் நன்மை விழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.15 மணிக்கு நற்கருணை விழாவும் 24 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் இடம்பெறும்.
ஜூபிலி விழா சிறப்புத் திருவிழாத் திருப்பலிகளில் யாழ். ஆயர் மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருப்பலி நிறைவேற்றவுள்ளதாக ஆலய பங்குத் தந்தை அருட்திரு அ.கிறிஸ்தோப்பர் அடிகள் தெரிவித்துள்ளார். (ஒ-135)

# மானியம் வழங்கக் கோரும் கத்தரிக்காய் செய்கையாளர்

யாழ்ப்பாணம், ஜூன் 18
வலி.தென்மேற்கில் இந்த வருடம் கத்தரிச் செய்கையை மேற்கொண்டவர்கள் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.
எனவே கத்தரிச் செய்கையாளர்களின் நட்டத்தை நிவர்த்தி செய்ய அரசு மானியம் வழங்க வேண்டும்.
இவ்வாறு கட்டுடையைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-
அரசு நெற்செய்கைக்கு உர மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது. ஆனால் விவசாயிகள் பெரும் பணச் செலவில் கத்தரி, வெண்டி, புடோல், பாகல் மற்றும் பயிரினங்களைச் செய்கை பண்ணுகின்றனர்.
திறந்தவெளி சந்தையால் வெளி மாவட்டங்களில் இருந்து பெருந்தொகையான கத்தரி குடாநாட்டுக்குள் வருகின்றது.
இதனால் உள்ளூர் மரக்கறி பயிர்ச் செய்கையாளர் போட்டி போட முடியாமல் பெரும் நட்டத்தை அடைகின்றனர்- என்றார். (வ-50)



# வீதி புனரமைப்பை அமைச்சர் நிர்மல பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரதான வீதிகளின் புனரமைப்பு பணிகளை, மற்றும் துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் திட்ட அமைச்சர் நிர்மல கொத்தலாவல நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பார்வையிட்டார்.
யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருத்தித்துறை-யாழ்ப்பாணம் வீதிப் புனரமைப்புப் பணிகளைப் பார்வையிட்ட அவர், வல்லிபுர ஆழ்வார் கோயிலுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## 'அந்தோனியார் காவியம்' வெளியீடு



பாஷையூரில் கடந்த சனிக்கிழமை பங்குத் தந்தை அருட் திரு. றோய் பேடினன் தலைமையில் நடைபெற்ற கலாபூஷணம் மு.அருள்பிரகாசம் எழுதிய 'அந்தோனியார் காவியம்' நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ. யோன்சன் ராஜ்குமார் நூலை வெளியிட்டு வைக்க சட்டத்தரணி மு.ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் பெற்றுக் கொண்டார். ஆய்வுரையை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்திரு. மைக்கல் சவுந்தரநாயகம் அடிகள் நிகழ்த்தினர். (ஒ-135)

## யாழ். மாநகர சபை எல்லைக்குள் விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 17
யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த பஜார் -Iபொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி பின்வரும் இடங்களில் ஏற்றப்படவுள்ளன
இன்று திங்கட்கிழமை காலை 9-11 மணிவரை கன்னாதிட்டி காளிகோயிலடி, முற்பகல் 11.30- 1.30 மணிவரை கஸ்தூரியார் வீதி, றொலக்ஸ் பேக்கரி,
நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-11 மணிவரை கொட்டடி நமசிவாய பாடசாலை முன்பு, முற்பகல் 11.30-1.30 மணி வரை கூழாவடி வைரவர் கோயிலடி கொட்டடி.
புதன்கிழமை காலை 9-11 மணிவரை மீனாட்சி அம்மன் கோயிலடி கொட்டடி, முற்பகல் 11.30-1.30 மணி வரை முத்தமிழ் முன்பள்ளி கொட்டடி.
வியாழக்கிழமை காலை 9-11 மணி வரை பொன் னப்பா வீதி, முற்பகல் 11.30- 1.30 மணி வரை பிறப்பங்குளம் வீதி.
வெள்ளிக்கிழமை காலை 9-11மணி வரை ஸ்ரான்லி வீதி, விக் ரோரியா வீதி, முற்பகல் 11.30- 1.30 மணிவரை கந்தப்பசேகரம் வீதி, நிம்மர் மண்டபம் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (ந)

# தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழா தமிழ்ச் சங்கம் நடத்திய போட்டி முடிவுகள்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணம் தமிழ்ச் சங்கமும் யாழ். மறை மாவட்டமும் இணைந்து வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்திய பேச்சு, கட்டுரை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. புதன்கிழமை புனித சம்பத்தரிசியார் கல்லூரியில் இடம்பெற்ற நூற்றாண்டு விழாச் சபைக் கூட்டத்தில் போட்டி முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளியிடப் பட்டன.
இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கங்கள், பரிசில்கள், சான்றுப் பத்திரங்கள் என்பன எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப் பாணப் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் இடம்பெறவுள்ள தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழா ஆய்வரங்கத் தொடக்க நிகழ்வில் வழங்கப்படவுள்ளன.
இந்தப் போட்டியில் மாவட்ட ரீதியாக வெற்றி பெற்ற மாணவர் விவரம் வருமாறு:-

**கிளிநொச்சி மாவட்டம்**

**கீழ்ப் பிரிவு**
1ஆம் இடம்- ப.தமிழ்வாணி (தர்மபுரம் ம.வி.), 2ஆம் இடம்- ஆ.விழியழகி (உருத்திர புரம் ம.வி.), 3ஆம் இடம்- ச. டிலக்சி (முழங்காவில் ஆரம்பப் பாடசாலை)

**மத்திய பிரிவு**
1ஆம் இடம்-வே.அபிராமி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), 2ஆம் இடம்- [illegible] (உருத்திர புரம் ம.வி.), 3ஆம் இடம்- செ.டிலக்சா (தர்மபுரம் ம.வி.)

**மேற்பிரிவு**
1ஆம் இடம்-ச.ரசனா (அக்கராயன் ம.வி.), 2ஆம் இடம்- நா.சுதர்சினி (தர்மபுரம் ம.வி.),

**அதிமேற்பிரிவு**
1ஆம் இடம்- மோ. அனுஷாஜினி (அக்கராயன் ம.வி.), 2ஆம் இடம்- நி.குகாயினி (உருத்திரபுரம் ம.வி.),

**கவிதை**

**மேற்பிரிவு**
1ஆம் இடம்-கி.கிரிசாந்தி (உருத்திரபுரம் ம.வி.), 2ஆம் இடம்- ர.லியாந்தினி (புனித திரேசா பெண்கள் கல்லூரி), 3ஆம் இடம்- த.பேபிசாலினி (தர்மபுரம் ம.வி.)

**அதிமேற்பிரிவு**
1ஆம் இடம்-செ.ரெஜிஷா ([illegible] ம.வி), 2ஆம் இடம்- சி.நிரோஜினி (உருத்திரபுரம் ம.வி.), 3ஆம் இடம்- நா.ஜெனோபா (தர்மபுரம் ம.வி.)

**கட்டுரை**

**மத்திய பிரிவு**
1ஆம் இடம்-ச.கீர்த்தனா (தர்மபுரம் ம.வி.)2ஆம்இடம்-தெ.சரிதா (புனித திரேசா பெண்கள் கல்லூரி),

**மேற்பிரிவு**
1ஆம் இடம்-ஜே.சர்மிளா (அக்க ராயன் ம.வி.), 2ஆம் இடம்- க.கிருசாஜினி (தர்மபுரம் ம.வி.), 3ஆம் இடம்-சி. அனித்தா (புனித திரேசா பெண்கள் கல்லூரி)

**அதிமேற் பிரிவு**
1ஆம் இடம்-யோ.கஜாயினி (தர்மபுரம் ம.வி), 2ஆம் இடம்- சி.அஜிதா (புனித திரேசா பெண் கள் கல்லூரி), 3ஆம் இடம்- க.மதுசனா (உருத்திரபுரம் ம.வி.) (ந) (தொடரும்)

சமய சந்திகளில்

வவுனியா கல்நாட்டினகுளம் புதிய வீட்டுத்திட்டம் ஸ்ரீபுதுமை முத்துமாரி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.35 க்கு ஆரம்ப மாகும். (ந-421)

★ ★ ★

நயினை நாகபூஷணி அம்பாள் ஆலய 10 ஆம் நாள் திருமஞ்சத் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். மூல மூர்த்தி அம்பாளுக்கு 108 சங்காபிஷேகம் இடம்பெற்று கைலாச வாகனத்தில் அம்பாள் வீதி உலா வருவார். இரவு விசேட கலை நிகழ்வுகள் இடம் பெறும். (ந)

★ ★ ★

அனலைதீவு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர் வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. முன்னதாக எதிர்வரும் 20 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை எண்ணெய் காப்புச் சாத்தும் நிகழ்வு நடைபெறும். (ந)

## பெண்கள் வசமானது ச.ச.நிலைய நிர்வாகம்

வடமராட்சி, ஜூன் 17
கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் மிகப் பின்தங்கிய கிராமமாக துன்னாலை கிழக்கு ஆட்டுப்பட்டி கிராம சனசமூக நிலைய நிர்வாகத்தை பெண்கள் பொறுப்பேற்றுள்ளனர்.
இச் சனசமூக நிலையம் நீண்ட காலமாக இயங்காதிருந்த நிலையில் கரவெட்டிப் பிரதேச சபையின் ஆளும் கட்சி உறுப்பினர் கே.பரஞ்சோதி எடுத்த முயற்சியால் அண் மையில் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவும் இடம்பெற்றது.
நிர்வாக உத்தியோகத்தர் தெரிவில் நிறைவேற்று உறுப்பினர்களில் முற்று முழுதாக பெண்களும் நிர்வாக சபை உறுப்பினர்களில் பெண்களுடன் இரு ஆண் உறுப்பினர்கள் மாத்திரமே இடம்பெற்றுள்ளனர். (வ-8)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



யாழ். கோயில் வீதியைச் சேர்ந்த ஐயம்பிள்ளை சின்னப்பு அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிபதி பெ.சிவகுமார் முன்னிலையில் அண்மையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.
வடபிராந்திய தபால் திணைக்களத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமை புரிந்து வரும் இவர் உடுத்துறை மகாவித்தியாலய பழைய மாணவராவார்.
36 வருடங்கள் அஞ்சல் திணைக்களத்தில் பணியாற்றியுள்ள இவர் கடந்த 6 வருடங்களாக மன்னார் மாவட்ட அஞ்சல் அத்தியட்சகராகவும் சேவை யாற்றியுள்ளார். (ஒ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உருவாகும் சுதந்திர தமிழீழம்

# இந்தியாவுடன் சிறப்பான நல்லுறவை பாதுகாக்கும்

## நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவிப்பு

இலங்கையில் உருவாகும் சுதந்திரத் தமிழீழ அரசானது இந்தியாவுடன் சிறப்பானதோர் நல்லுறவைப் பேணிப் பாதுகாக்குமென நாடு கடந்த தமிழீழ அரசின் செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் முரசறையப்பட்டிருந்த தமிழீழ சுதந்திர சாசனத்தினை கோடிட்டுக் காட்டி இதனை நாடுகடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது. தமிழீழ சுதந்திர சாசனத்தின் 12 ஆம் பிரிவில் 'தமிழீழ அரசானது இந்திய மக்களுக்குத் தமது பரிபூரண ஆதரவைத் தெரிவிப்பதோடு, இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் அமைதியையும் அதன் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு தமிழீழ அரசானது இந்திய நாட்டுடன் சிறப்பான நல்லுறவைப் பேணி வரும் என்று கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இந்தியா தொடர்பில் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கருத்துத் தெரிவிக்கையில், வரலாற்று ரீதியாகப் பார்க்கும் போது இந்தியாவை ஈழத் தமிழர்களே நட்பு நாடாகப் பார்த்தார்களே அன்றி, சிங்கள அரசும் சிங்கள மக்களும் அவ்வாறு பார்க்கவில்லை. சிங்களவர்கள் இந்தியாவை ஓர் ஆக்கிரமிப்பு நாடாகவே பார்க்கிறார்கள்.

ஈழத் தமிழர்கள் மீதான சிங்களவர்களின் வெறுப்பில் ஒரு பாதி இந்திய வெறுப்பு உணர்வும் உண்டு என்பதை இந்தியா நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தியா இலங்கை அரசைக் கையாள்வதன் ஊடாக, அந்தத் தீவைக் கையாளும் அணுகுமுறையைக் கொண்டுள்ளது- என்றார். (வ)

## குறைவடைந்து வரும் முருகைக்கற்களின் வளம்

வடமராட்சி, ஜூன் 17

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் உள்ள பாக்கு நீரிணைக்கடலில் முருகைக்கற்களின் வளம் குறை வடைந்து வருகின்றது.

இந்தச் கடலின் கரைப் பகுதிகளில் முந்திய காலங்களில் முருகைக் கற்கள் நிறைந்து ஆங்காங்கே குவியல்களாகவும் பாதுகாப்பு அரண்களாகவும் இருந்து வந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. கடலைப் பார்க்க, இரசிக்கச் செல்லும் பொது மக்கள் கரையிலிருந்து சிறிது தூரம் நடந்து சென்று முருகைக்கற்கள் மீது ஏறி இருந்தும், நின்றும் கடலின் அழகை ரசிப்பதுண்டு.

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவின் கோரத்தை இந்தக் கடலின் கரையோரப் பகுதியில் சூழ்ந்திருந்த முருகைக்கற் பாறைகள் தணித்திருந்தன. வான் தோண்டப்படும் போது முருகைக்கற்கள் மீது கவனம் செலுத்தப்படுவதில்லை.

அதன் மூலம் முருகைக்கற்கள் சேதமடையவும் காரணமாகவும் அமைந்துள்ளன. அத்துடன் கடலில் இருந்து கடந்த காலங்களில் முருகைக்கற்களை கட்டடம் உட்பட வேறு தேவைகளுக்காக கடத்தப் பட்டும் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாக்குநீரிணை கரையோரத்தில் உள்ள முருகைக்கற்கள் கடல் வளத்துக்காகத் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பது சூழலியலாளர்களின் கோரிக்கையாகும். எனவே முருகைக்கற்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட திணைக்களம் முன்வர வேண்டும் எனச் சூழலியலில் ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-8)

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு; ஒரு கோடிக்கு மேல் அபராதம்

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தகவல்

கொழும்பு,ஜூன் 17

இந்த ஆண்டில் இதுவரையான காலப் பகுதிக்குள் உணவு சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை மூலம் ஒரு கோடி 72 லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் அறவிடப்பட்டுள் ளது என்று இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் 16 ஆயிரத்து 233 வர்த்தக நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டன என்று சங்கத்தின் உப செயலர் சி.எஸ்.முத்துகுட தெரிவித்தார்.

இதில் மூவாயிரத்து 386 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்தல், காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)


## மரண அறிவித்தல்கள்

### நாகரட்ணம் கஜேந்திரன்

(யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர், முன்னாள், விஞ்ஞான பாட ஆசிரியர், நயினாதீவு மகாவித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி)



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகட்ணம் கஜேந்திரன் நேற்று முன்தினம் (15.06.2013) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகரட்ணம் (ஓய்வு பெற்ற வருமானவரிப் பரிசோதகர், யாழ்ப்பாணம் மாநகர சபை) மற்றும் சுசிலா தம்பதியரின் கனிஷ்ட புத்திரரும், விநாயகமூர்த்தி சுகைலாவின் (லண்டன்) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இந்தியாவில் நடைபெறும். இது பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.
0750971678
00919789932400 (38427) (10,7)

தகவல்: S. இளங்கோ
மற்றும் உடன் பிறவாச் சகோதரர்கள்



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
13.07.1950

மறைவு
27.06.2012

அமரர் வேலுப்பிள்ளை துரைரெட்ணம்

*"தலைத் தோங்கிச் சென்றாலும் தளிர்*
*வேரை மறப்பதில்லை*
*புயல் காற்று சாய்த்தாலும்—அசையாது*
*உரமூட்டும் என்றும் எங்கள் —ஆணி*
*வேரான உம்மை நாம் மறவோம்"*

இன்று (17.06.2013) திங்கட்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்தி நிகழ்வில் கலந்து கொண்டு அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அனைவரையும் வேண்டுகின்றோம்.

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம். (38429) (6.3.7.11)

குடும்பத்தினர்.


## மாகாணத்தில் முதலிடம்



வவுனியா, ஜூன் 17

பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான திறன் விருத்தி கிறுக்கல் சித்திரப் போட்டியில் மாகாண மட்டத்தில் வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாண வர்கள் வெற்றியீட்டியுள்ளனர்.

ஜெ.ரிக்ஷிகா (தரம் ஒன்று) முதலாம் இடத்தையும், க.சதுர்ஜா (தரம் மூன்று) ஐந்தாம் இடத்தையும், மு.சாகித்தியன்(தரம் நான்கு) நான்காம் இடத்தையும் பெற்றுள்ளனர். தரம் ஒன்றில்கல்வி பயிலும் ஜெ.ரிக்ஷிகா கிறுக்கல் சித்திரத்தை கீறுவதில் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்.

(ஒ-402)


## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க அங்கத்தவர் P. கயூரன் அவர்களின் மகனும், எமது சங்க அங்கத்தவரும், பாதுகாப்பு பரிசோதகருமான V. தூயகுமார் அவர்களின் பேரனுமான

### ஷாம் சந்தோஸ்

15.06.2013 சனிக்கிழமை இறைவனுக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்.
யாழ்.பல்கலைக்கழகம், (38422)(3.6.7.11)



## கண்ணீர் அஞ்சலி



யா/ சென்ஜேம்ஸ்ஆண்கள் பாடசாலை
ஆங்கில ஆசிரியர்

### இரத்தினவேல் செந்தூரன்

அவர்கள் 12.06.2013 அன்று அகால மரணமடைந்ததையிட்டு துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர்கள், க.பொ.த உயர்தரம் 1997
சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(38374)(3.6.11)


## போலி நாணயத்தாள் அச்சிடும் நிலையம் சுற்றிவளைப்பு

கொழும்பு,ஜூன் 17

போலி நாணயத்தாள்கள் அச்சிடும் நிலையமொன்றை சுற்றிவளைத்த பொலிஸார், சந்தேகத்தின் அடிப்படையில் இருவரைக் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பின்போது 2 லட்சத்து 66 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத் தாள்களுடன், போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்காகப் பயன்படுத்திய காகிதாதிகள், கணினி உள்ளிட்ட உபகரணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை, கஹல்ல பகுதியிலுள்ள போலி நாணயத்தாள்கள் அச்சிடும் நிலையமொன்றையே சனிக்கிழமை கண்டி குற்றப்புலனாய்வுப் பிரிவு பொலிஸார் சுற்றிவளைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணையை கண்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச)


## செல்லத்துரை வைத்திலிங்கம்



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை வீமன்காமத்தைச் சேர்ந்தவரும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செ.வைத்திலிங்கம் 14.06.2013 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சேனாதிராஜா, சிவஞானம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுசீலா, நளாயினி (உரிமையாளர் - Sparkle Link (Pvt) Ltd), Dr. நிர்மலா (U.K), ரஞ்சினி (Canada), நந்தினி (Canada), கங்காதரன் (Shanthi Pharmacy), ரவிதரன், கிரிதரன் (G.M.Causeway Paints) ஆகியோரின் அன்புத் தந்தையும், கிருஷ்ணராஜ், பாலன் (U.K), மதனரூபன் (Canada), அனுஷா (Daffodil Montessori) ஆகியோரின் அன்பு மாமனும், பிரசாத் (Australia), ரேனு (U.K), ஷர்மிகா (Canada), ஒலிவியா (Canada), ரம்யா (Canada), கிஷானி, அனுஷாலினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இல.74, 37 ஆவது ஒழுங்கை கொழும்பு 6இல் இன்று (17.06.2013) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: V.கிரிதரன்

தொ.பே. 011 2362 852, 077 734 8689, 077 756 1336.

(சி/9866) (45.6.3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சம்பூரில் 819 ஏக்கர் காணி

## 99 ஆண்டுகால குத்தகைக்கு வழங்குகிறது அரசு

திருகோணமலை,ஜூன் 17

திருகோணமலை, சம்பூரில் 4 பில்லியன் ரூபா செலவில் கனரகத் தொழிற்துறை சிறப்பு வலயத்தை உருவாக்க சிங்கப்பூர் நிறுவனத்துக்கு 819 ஏக்கர் காணியை வழங்க இலங்கை அரசு இணங்கியுள்ளது.

இந்தத் தகவல் கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றில் வெளியிட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, ஆழமான இறங்குதுறை , களஞ்சியம் ஆகியன 700 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

இரண்டாவது கட்டத்தில், இரும்புத்தாது மற்றும் கற்கரித் தொழிற்சாலை என்பன 1,300 ரூபா டொலர் செலவில் அமைக்கப்படும்.

இறுதிக் கட்டத்தில், கப்பல்கட்டும் மற்றும் திருத்தும் தளம், இயந்திர உற்பத்தி, மோட்டார் வாகன ஒருங்கிணைப்பு தொழிற்சாலைகள் மற்றும், அதுசார்ந்த தொழிற்கூடங்கள் 2000 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

இந்த சிறப்பு கனரகத் தொழிற்துறை வலயத்தின் மூலம், 10 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவுள்ளது.

இந்தத் திட்டம் மூலம் பிரதேசத்தின் நகர அபிவிருத்தி மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் உயரும் என்று இலங்கையின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்துக்காக சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட 'சிறிலங்கா கேற்வே இன்டஸ்ட்றீஸ்' என்ற தனியார் நிறுவனத்துக்கு, 819 ஏக்கர் நிலம் இலங்கை முதலீட்டுச் சபையால் 99 ஆண்டு கால குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்பூரில் 500 மில்லியன் டொலர் செலவில் அனல்மின் நிலையம் ஒன்றை அமைப்பதற்கு இலங்கை ஏற்கெனவே இந்தியாவுடன் இணக்கம் கண்டுள்ளது.

சம்பூரில் பாரம்பரியமாக வசித்து வந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள், மீளக்குடியமர இலங்கை அரசால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதற்குத் தேவைப்படும் காணி தவிர, எஞ்சிய பொது மக்களின் காணிகளில், இடம்பெயர்ந்த மக்கள் மீளக்குடியமர அனுமதி வழங்கப்படும் என்று அரசு உறுதியளித்திருந்தது.

அதற்கு முரணாகவே சிங்கப்பூர் நிறுவனத்துக்கு சம்பூரில் 819 ஏக்கர் காணியை அரசு குத்தகைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

---

ரூ.62 லட்சம் செலவில்

## வெள்ளப் பெருக்கை தடுக்க புதிய திட்டம்



நுவரெலிய,ஜூன் 17

நுவரெலியாவில் ஏற்படும் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்த புதிய திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்காக 62 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட செயலர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்தார்.

இதற்காக எலகல ஓயாவுக்கு அருகில் புதிய திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, தேசிய கட்டட ஆய்வு நிலையத்தால் கொத்மலை பகுதியில் 90 மில்லியன் ரூபா செலவில் மண்சரிவு அபாயத்தை தவிர்த்து கொள்வதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

நுவரெலியாவில் ஏற்படுகின்ற இடர்களுக்காக இந்த ஆண்டின் இதுவரையான கால பகுதியில் சுமார் 100 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## வாடகை வாகனங்களை விற்ற நபர் சிக்கினார்

கொழும்பு,ஜூன் 17

வாடகைக்கு வாகனங்களைப் பெற்று அவற்றை விற்பனை செய்த நபரொருவர் பம்பலப்பிட்டி பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து, குருநாகல், பாணந்துறை , கொழும்பு ஆகிய இடங்களில் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டு விற்பனை செய்யப்பட்ட மூன்று வாகனங்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.



சந்தேகநபர் கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை கல்கிஸைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)




மட்டக்களப்பு, கண்ணகி கலை இலக்கியக் கூடலின் ஏற்பாட்டில், 3 ஆவது வருட கண்ணகி கலை இலக்கிய விழா சனிக்கிழமை அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்தநிகழ்வின் ஆரம்ப வைபவமாக பட்டிமேடு புராதன கண்ணகி ஆலயத்திலிருந்து ஊர்தி ஊர்வலப் பவனி இடம்பெற்றது.

## தொழில் நுட்பம் 20 இல் அறிமுகம்

### 15 இல் பாடசாலைகளில் கற்பித்தல் என்கிறது தேசிய கல்வி நிறுவனம்

கொழும்பு,ஜூன் 17

ஜி.சீ.ஈ உயர்தரத்துக்கு தொழில்நுட்பப் பாடம் எதிர்வரும் 20 ஆம் திகதி அறி முகப்படுத்தவுள்ளது என்று தேசிய கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தப் பாடம் அடுத்த மாதம் 15ஆம் திகதி முதல் பாடசாலைகளில் கற்பிக்கப்படும் என்று நிறுவனத்தின் பணிப்பாளர் அபேரத்ன பண்டார தெரிவித்தார்.

முதல்கட்டமாக 200 பாடசாலைகளில் தொழில் நுட்பப்பாடம் பயிற்றுவிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இந்தப் பாடத்துக்காக ஆசிரியர்களுக்கு தற்போது பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அவர் தெரிவித்தார்.

இந்த பாடத்திட்டத்தின்கீழ் தொழில் நுட்ப



விஞ்ஞானம், பொறியியல், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. தொழில் நுட்ப பாடத்தை தொடர்வதற்கு சாதாரண தரத்தில் கணிதம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சித்தி பெறுவது அவசியம் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டினார். (ச)

## அளவுக்குக் கூடிய உடல்நிறை தொற்றாநோய் ஏற்படவாய்ப்பு

### 19, 20, 21 திகதிகளில் ஆய்வை மேற்கொள்கிறது அமைச்சு

கொழும்பு,ஜூன் 17

அளவுக்கு அதிகமான உடல் நிறையை கொண்டிருத்தலானது, பல தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைகிறது. நாட்டில் 22 வீதமானோர் அளவுக்கு அதிகமான உடல்நிறையை கொண்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களில் 10 வீதமானோர் மாணவர்கள் என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

நபரொருவரின் உயரத்துக்கு ஏற்ப அவரது உடல் நிறை காணப்பட வேண்டும். அதற்கு அதிகமாக உடல் நிறை காணப்படுமாயின் தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கான காரணமாக அமைகிறது என்று மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் பணிப்பாளர் அனில் சமரநாயக்க தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து ஆராய்வதற்கான நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

அதற்கமைய எதிர்வரும் 19ஆம், 20ஆம் , 21ஆம் திகதிகளில் பொரளையிலுள்ள மருத்துவ ஆய்வு நிறுவனத்தில் இதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆய்வு நடவடிக்கையில் 600 பேரை ஈடுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



## எரிபொருள் தரத்தை அதிகரிக்க பரிந்துரை ஆராய்கிறது அரசு

கொழும்பு,ஜூன் 17

எரிபொருள் தரத்தை அதிகரிப்பதற்கான புதிய பரிந்துரைகளை முன்வைக்க அரசு தீர்மானித்துள்ளது.

அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவொன்றினால் இந்தப் பரிந்துரைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

சுற்றாடல் அமைச்சின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த குழுவில், எரிபொருள் , போக்குவரத்து அமைச்சுக்களின் பிரதிநிதிகளும் உள்ளடங்குகின்றனர்.

சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் உள்ளடக்கங்கள் சில எரிபொருளிருந்து குறைக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு லீற்றர் டீசலில் ஐயாயிரமாகக் காணப்படும் கந்தகத்தின் அளவை மூவாயிரம் வரை குறைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. (ச)



## துப்பாக்கி வெடித்து பொலிஸார் காயம்

மட்டக்களப்பு,ஜூன் 17

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் நிலையத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சனிக்கிழமை மாலை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நந்தன என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பயன்படுத்தி வரும் கைத்துப்பாக்கியே இவ்வாறு வெடித்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகத்தில் அதிகரிக்கும் திருட்டுக்களால் மக்கள் பீதி

சுன்னாகம் மயிலணிப் பகுதி யில் உள்ள வீடுகளில் இடம் பெறும் அதிரடியான திருட்டுச் சம்பவங்களால் அந்தப் பகுதி யில் உள்ள மக்கள் இரவு நேரத் தைப் பயத்துடன் கழிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களில் இரண்டு வீடுகளில் புகுந்த திரு டர்கள் மிகவும் கனகச்சித மாகப் பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

தொலைத் தொடர்பு நிலையத்தில் புகுந்த திருடர்கள் கடைக்குள் பிரவேசிக்க முடியாத நிலையில் கடையின் பின்புறத்தில் வைக்கப்பட்டி ருந்த சுமார் ஐயாயிரம் ரூபா வுக்கு மேற்பட்ட பெறுமதியான கிடாரத்தைத் திருடியுள்ளனர்.

மற்றுமொரு சம்பவமாக மோட் டார் சைக்கிள் திருத்துபவரின் வீட்டின் பின்புறத்தில் விடப் பட்டிருந்த சைக்கிள் ஒன்றை யும் வீட்டுச் சுவரில் மேலால் தூக்கிச் சென்றுள்ளனர்.

சனநெருக்கம் மிக்க இடத்தில் இடம்பெறும் இத்தகைய திருட்டுச் சம்பவங்களால் பொதுமக்கள் மத்தியில் இரவு வேளைகளில் பய உணவு ஏற்பட்டுள்ளது. (வ-86)

## போதை குடித்தது உயிரை

அளவுக்கு அதிகமாக மது அருந்தியவர் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார்.

யாழ். கொட்டடியைச் சேர்ந்த ஆழ்வார் நடராசா (வயது-65) என்ற மரக்கறி வியாபாரியே இவ்வாறு உயிரிழந்தார்.

குறித்த நபர் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் தனது வீட்டுக்குச் சென்று மரக்கறிகள் கொடுத்து விட்டு வெளியே புறப்பட்டுச் சென்றார். எனினும் அதன் பின்னர் அவர் வீடு திரும்பவில்லை. இதனால் அன்று முழுவதும் அவரைத் தேடிய அலைந்த உறவினர்கள் நேற்றுக் காலை யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று பார்த்த போது அவர் சடலமாகக் காணப்பட்டார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மது போதையில் யாழ். முற்றவெளியில் மயங்கிய நிலையில் கிடந்த வேளை பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பயனளிக்காத நிலையில் நேற்றுக்காலை உயிரிழந்தார் என்ற விடயம் அப்போதே உறவினர்களுக்கு தெரியவந்தது.

அளவுக்கு மீறி மது அருந்தியதலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று பரிசோதனையில் தெரியவந்துள்ளது. இதேவேளை அவர் பெறுமதி மிக்க 2 மோதிரங்களை அணிந்திருந்தார் என்றும் சடலத்தில் அவற்றைக் காணவில்லை என்றும் அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் இறப்பு விசாரணை மேற்கொண்ட பின்னர்சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ங-4)

## ஏணை மரம் வீழ்ந்து சிறுவன் படுகாயம்

வீட்டினுள் ஏணை கட்டப்பட்டிருந்த பனைமரம் எதிர்பாராத விதமாக நகர்ந்து கீழே விழுந்ததால் ஏணையில் ஆடிக் கொண்டிருந்த சிறுவன் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை கூடுவிழுந்தான் பகுதியில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பிரான்சிஸ் தனுசன் (வயது-7) என்ற சிறுவனே படுகாயமடைந்து தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளான். (ங-4-36)

## பண்ணைக் கடலில் ஒருவர் மூழ்கிச் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 17

நண்பர்களுடன் பண்ணைக்கடலில் நீராடிய குடும்பஸ்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று பிற்பகல் பண்ணைப் பாலத்தடியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான நல்லையா விஜயகுமார் என்பவரே நீரில் மூழ்கி சாவடைந்தவரர் ஆவார்.

விசாரணைகளுக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ங-400)

## ரணில் தலைமையில் எதிரணி வடபகுதிக்குப் படையெடுப்பு

வடக்கு நிலைமை தொடர்பாக நேரடியாக ஆராய்ந்து தேர்தல்கள் ஆணையாளரிடம் அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் அடுத்த வாரம் வருகை தரவுள்ளனர் என நம்பகரமாக அறியமுடிகின்றது.

வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொது எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் உயர்மட்டத்தினர் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுடன் கடந்த வெள்ளிக்கிழமை பேச்சு நடத்தியிருந்தனர்.

இதன்போது பொது எதிரணியினர் வடக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் பல குற்றச்சாட்டுகளையும், கோரிக்கைகளையும் தேர்தல்கள் ஆணையாளரிடம் முன்வைத்திருந்தனர்.

பொது எதிரணியினரின் குற்றச்சாட்டுகள் மற்றும் கோரிக்கைகளுக்குப் பதிலளித்த தேர்தல்கள் ஆணையாளர், "வடக்கு மாகாணசபைத் தேர்தல் எப்போது நடைபெறும் என்று ஜனாதிபதி எனக்கு உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கவில்லை. இதனால் அங்கு எந்தவொரு நடவடிக்கையையும் என்னால் எடுக்கமுடியாதுள்ளது. எனினும், நீங்கள் அனைவரும் வடக்குக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை அறிக்கையூடாக என்னிடம் விரைவில் சமர்ப்பித்தால் தேர்தலுக்கு முன்னர் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கக்கூடியதாக இருக்கும்" என்று கூறியுள்ளார்.

இதற்கான அறிக்கையிடலுக்காகவே ரணில் தலைமையிலான எதிர்க் கட்சிக் குழுவினர் வடக்குக்கு வருகை தரவுள்ளனர். (ங-சி)

## இசை நிகழ்ச்சியில் முறுகல் இளைஞனின் கை துண்டானது

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். நல்லூர் பகுதியில் இடம்பெற்ற கோஷ்டி மோதலால் இளைஞனின் கை மணிக்கட்டுடன் துண்டாகியது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நல்லூர் கொண்டலடி பகுதியில் இடம்பெற்றது. இதில் கலாசாலை வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த யோகனந்தன்- பிரசன்னா (வயது- 19) என்ற இளைஞனின் வலது கையே கத்தி வெட்டுக்கு இலக்காகி மணிக்கட்டுடன் துண்டாடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

குறித்த பகுதியில் சனசமுக நிலையத்தின் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இசை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. அந்த இசை நிகழ்ச்சியைப் பார்த்து இரசித்து நடனமாடிய இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தர்க்கமே பின்னர் கத்தி வெட்டில் முடிவடைந்துள்ளது.

கத்தி வெட்டுக்கு இலக்காகி கையை இழந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். எனினும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ங-4-400)


### மரண அறிவித்தல்

**நல்லையா விஜயகுமார் (சின்னத்தம்பி)**

**(நியூ விதுஷா வீடியோ உரிமையாளர்)**



யாழ்ப்பாணம் மீனாட்சியம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா விஜயகுமார் நேற்று (16.06.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லையா மற்றும் காந்தபூரணம் தம்பதியரின் அன்பு மகனும் கீதாவின் அன்புக் கணவரும் ஜர்மிளா, திலக்ஷன், விந்துஜா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஜானகி, உதயகுமார், சசிக்குமார், ராஜ்குமார் காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*206, வில்லூன்றி பிள்ளையார் கோயிலடி, கொட்டடி, யாழ்ப்பாணம்.* (38429) *தகவல்: குடும்பத்தினர்.*


முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பிரபாகரனின் கனவை நனவாக்க அரசு முயற்சி

களை முன்வைத்துள்ளனர். இந்நிலையில், அரசிலுள்ள பங்காளிக்கட்சிகளின் தலைவர்கள் வடக்குத் தேர்தலுக்கு முன்னர் மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் தமது முடிவைத் தெளிவாக அறிவிக்கவேண்டும். இல்லாவிட்டால் நாட்டில் மீண்டும் இனவாதம் தோன்றி பேராபத்து ஏற்படும்.

அத்துடன், பிரபாகரன் போர் மூலம் நாட்டை பிளவு படுத்தலாம் என்று கண்ட கனவை இன்று போரின்றி தாமாகவே வழங்க அரசு நடவடிக்கை எடுக்கிறது.

13ஆவது திருத்தச் சட்டம், வடக்குத் தேர்தல் ஆகியவை குறித்து ஐ.நா. சபைக்கும், சர்வதேசத்துக்கும் மற்றும் இந்தியத் தலைவர்களுக்கும் அரசு வாக்குறுதி அளித்துள்ளது. இதை நிறைவேற்ற வேண்டிய பொறுப்பிலிருந்து அரசு தவறக்கூடாது - என்றார். (ங-சி)

## 13' ஆவது திருத்தத்தை காப்பாற்ற களமிறங்க வேண்டும் இந்தியா

குடியேற்றங்கள் தடுத்து நிறுத்தப்படவேண்டும்.

இந்திய- இலங்கை ஒபந்தத்தை ஒழிப்பதற்கு இலங்கை அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை தடுப்பதற்கு இந்திய மத்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும்-

என்பன போன்ற விடயங்களை இங்கு தீர்மானங்களாக நிறைவேற்றப்பட்டன. குறித்த தீர்மானங்களின் பிரதிகளை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோருக்கு வழங் [illegible] ளது. (ங-சி)


### மரண அறிவித்தல்

**கனகசபை இராசநாயகம் (சின்னண்ணை)**



*(பிரபல கட்டடக் கலைஞர்)*

அல்வாய் தெற்கு, கிளிவிட்டியைப் பிறப்பிடமாகவும் சகிலாலயத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபை இராசநாயகம் (சின்னண்ணை) நேற்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - அரசம்மா தம்பதியரின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்தம்பி (வட அல்வாய்) - லஷ்மி ஆகியோரின் மருமகனும் சரோஜினியின் அன்புக் கணவரும் சபாநாயகம், வேலும்மயிலும், வசந்தாதேவி, கனகரத்தினம், ஜெயமணி தேவி ஆகியோரின் சகோதரனும் சுந்தரவேல்- சகிலா (ஜேர்மனி), சகிந்தன் (லண்டன்), பிரதீபன்- பிறேமலதா, ரதீஸ் (நோர்வே), ரமேஸ், வனிதா, வருணா, யாழரசி ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும் காலஞ்சென்ற டாக்டர் சு.வேலும்மயிலும் (ஜே.பி.), கனகரத்தினம், சபாநாயகம், பகவதியம்மா, சிவச்செல்வன் (சுவிஸ்), ரஞ்சிதநாதன், பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் சுந்தரவேல் (ஜேர்மனி), ரஜிதினி, சகானா (சுவிஸ்), சாலவன் (சுவிஸ்), சாதுரியன் (சுவிஸ்) ஆகியோரின் மாமனும் ரஞ்சிதநாதன், சிவச்செல்வன், சலஜா (சுவிஸ்) ஆகியோரின் சகலனும் கார்த்தீபன் (ஜேர்மனி), மயூரன்- சுனித்தா (லண்டன்), மதனராஜ் - சாளினி (ஜேர்மனி), சோபினி (ஜேர்மனி) ஆகியோரின் பேரனும் கபிசன் (லண்டன்), சாருக் (லண்டன்) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2013) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் [illegible]

(சி/9871) *தகவல்: டாக்டர்.வே.கணேசவேல் (மருமகன்) குடும்பத்தினர்.*



### துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கணிதத்துறை சிரேஷ்ட கல்வியியலாளர் க.கமலநாதன் அவர்களின் அன்புத் தாய்

**கந்தையா தங்கரத்தினம்** அவர்கள்

16.06.2013 அன்று காலமான செய்தி அறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**
**யாழ்ப்பாணம்**
**தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.**

(38428) (10,7,16)



### மரண அறிவித்தல்

*திருமதி*

**தங்கரத்தினம் கந்தையா**

போதரமடம், துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கரத்தினம் கந்தையா நேற்று (16.06.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும், வல்லிபுரம் கருணானந்தத்தின் (லண்டன்) அன்புச் சகோதரியும், புஸ்பராணி (கனடா), கமலநாதன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி), பத்மாவதி (ஜேர்மனி), பஞ்சலிங்கம் (கனடா), மனோகரன், சகுந்தலா, கேதீஸ்வரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புத் தாயும், கணேசு (கனடா), சந்திரபவானி, செல்வநாயகம் (ஜேர்மனி), யசோதா (கனடா), வேதநாயகி, உமாதேவி (சிங்கப்பூர்), சற்குணராசா (பாஃரெய்ன்) ஆகியோரின் அன்பு மாமியும், மாலதியின் (லண்டன்) மைத்துனியும், சாலினி அகிலன், அஜந், பிரகாஸ் (2ஆம் வருட விஞ்ஞானபீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்), பிரசாந்த், பிரதீஸ், ரூபினி, சுதர்சன், சுவீதன், அனோஜா, நிலானி, நிமலன், சமீரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.06.2013) திங்கட்கிழமை மு.ப 11.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்துமயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

போதரமடம், துன்னாலை வடக்கு, கரவெட்டி. (சி/8357)(16) தகவல்: குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜொலிஸ்ரார் வெற்றி கிண்ண கிரிக்கெட் தொடர்

# கிண்ணம் பரிஷ் வசம்





மானிப்பாய் பரிஷ் அணித் தலைவர் சுபாஸ்கரனுக்கு வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றனர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் சக நிறுவன உரிமையாளர் நாகரத்தினம் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் கணேச நாதன் மற்றும் பிரதம விருந்தினர் ஜெகநாதன்.

யாழ்ப்பாணம், ஜூன் 17
துல்லியமான பந்து வீச்சும் சிறப்பான துடுப்பாட்டமும் கைகொடுக்க முதன்முறையான பரிஷ் வசமானது ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம்.

ஈ.எஸ்.பி. நாகரத்தினம் சக நிறுவன அனுசரணையுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் நேற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நேற்றுப் பிற்பகல் 1 மணிக்கு ஆரம்பமான ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்துக் களமிறங்கியது மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழக அணி.

நாணயச் சுழற்றியில் வெற்றி பெற்ற மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது. துடுப்பெடுத்தாடத் தீர்மானித்த பரிஷ் அணிக்கு துடுப்பாட்ட வீரர்கள் கைகொடுத்தனர்.



இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட ஜொனியன்ஸ் அணித் தலைவர் அன்புஜனுக்கு பிரதம விருந்தினர் ஜெகநாதன் கிண்ணத்தை வழங்குகின்றார்.

25.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் அனைத்து இலக்குகளையும் இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது பரிஷ் விளையாட்டுக் கழகம்.

வினோத் 39 ஓட்டங்களையும், சுபாஸ்கரன் 30 ஓட்டங்களையும், கரிகரன் 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் சார்பில் சிறிதரன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 36 ஓட்டங்களுக்கு 3 இலக்குக்களையும், டன்சன் 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 37 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், லவேந்திரா 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 41 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

176 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கியது ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

ஜொனியன்ஸ் துடுப்பாட்ட வீரர்கள் பரிஷ் அணியினரின் துல்லியமான பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது திண றினர்.

இலக்குகள் மளமளவென சரிய 19.1 பந்துப் பரிமாற்றங்களில் 122 ஓட்டங்களுடன் சுருண்டது ஜொனியன்ஸ்.

சிறிதரன் 32 ஓட்டங்களையும், சஞ்சேயன் 28 ஓட்டங்களையும், றஜித்தன் 15 ஓட்டங்களையும், லவேந்திரா 14 ஓட்டங்களையும், அகிலன் 13 ஓட்டங்களையும் அணிக்காகப் பெற்றனர்.

பந்துவீச்சில் பரிஷ் விளையாட்டுக் கழகம் சார்பில் கிசோர் 5 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளையும், கரிகரன் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 21 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், யாழினியன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (ற-23)



மானிப்பாய் பரிஷ் கிரிக்கெட் அணியினர்.



சிறந்து பந்துவீச்சாளர் மற்றும் ஆட்ட நாயகன் விருதுகளைத் தட்டிச் சென்ற பரிஷ் வீரர் கிஷோக்குமார்.

சிறந்த பந்துவீச்சாளர் மற்றும் ஆட்ட நாயகன் விருதுகளை மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கிஷோக்குமார் பெற்றுக்கொண்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக அதே கழகத்தைச் சேர்ந்த வினோத்குமார் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த களத் தடுப்பாளராக ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ரெட்ணம் தெரிவானார்.



சிறந்த களத்தடுப்பாளருக்கான விருதைத் தட்டிச் சென்ற ஜொனியன் அணி வீரர் ரெட்ணம்.



சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான விருதைத் தட்டிச் சென்ற பரிஷ் அணி வீரர் வினோத்குமார்.

# இம்மாத இறுதியில் ஹொக்கி போட்டி

## யாழ்.மாவட்ட பாடசாலைகள் ஹொக்கிச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம் யுன்17
யாழ்.மாவட்ட பாடசாலை ஹொக்கி சங்கமும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் விளையாட்டு அவையும் இணைந்து நடத்தவுள்ள மாவட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 5 பேர் பங்குபற்றும் ஹொக்கிச் சுற்றுப் போட்டி இந்த மாத இறுதியில் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் விண்ணப்படிவங்களை யாழ். மாவட்ட பாடசாலைகள் ஹொக்கி சங்க இணைப்பாளர் பிரான்ஸிடமும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் மோகனிடமும் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். மாவட்டபாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் [illegible] தெரிவித்துள்ளார்.(ற-23-86)

## பாடசாலை வருடாந்த ஹொக்கி போட்டிகள் விரைவில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஜூன் 17
யாழ்.மாவட்ட பாடசாலை அணிகளுக்கு இடையே யாழ் .மாவட்ட ஹொக்கிச் சங்கம் வருடாந்தம் நடத்தும் ஹொக்கிப் போட்டிகளை இந்த மாத இறுதிக்குள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். மாவட்ட ஹொக்கிச்சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் 15 வயதுப் பிரிவு ஆண்கள் பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் வெற்றி பெறும் அணிகள் இலங்கை பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தினால் நடத்தப்படும் தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன என்று யாழ்.மாவட்ட ஹொக்கிச் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-86)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 17
வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழகத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வட மாகாண ரீதியிலான உதைபந்தாட்டத் தொடரில் இன்று திங்கட்கிழமை வதிரி டைமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம்:
மனோகரா வி.க. எதிர் சென். மேரிஸ் வி.க. (ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பந்தை சேதப்படுத்தினரா இங்கிலாந்து வீரர்கள்?

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து வீரர்கள் பந்தைச் சேதப்படுத்தினார்கள் என்று இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் பொப் வில்லிஸ் தெரிவித்துள்ளார். இலங்கைக் கெதிராக இடம்பெற்ற போட்டியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

குறித்த போட்டியில் இங்கிலாந்து அணி பந்து வீசும்போது பயன்படுத்தப்பட்ட பந்துகளில் ஒன்று நடுவர்களால் மாற்றம் செய்யப்பட்டது.

பந்தின் நிலை-சரியாகக் காணப்படாததன் காரணமாக நடுவர்கள் இந்த முடிவை எடுத்ததோடு, குறித்த முடிவிற்கு இங்கிலாந்து அணித்தலைவர் அலஸ்ரெயர் குக் தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்ததோடு, நடுவர்களுடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டிருந்தார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் இங்கிலாந்து அணித்தலைவர் பொப் வில்லிஸ், இங்கிலாந்து வீரர்கள் பந்தைச் சேதப்படுத்தியிருந்தனர் என்றும், அதன் காரணமாகவே நடுவர் அலீம் தார் பந்தை மாற்றுவதற்கு முடிவெடுத்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் வீரரொருவர் பந்தைச் சுரண்டிக் கொண்டிருந்ததாகவும், அதன் காரணமாகவே அலீம் தார் பந்தை மாற்றியதாகவும் தெரிவித்த அவர், குறித்த வீரரைப் பெயரிட விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் பொப் வில்லிஸின் இந்தக் குற்றச்சாட்டை இங்கிலாந்து ஒருநாள் சர்வதேசப் போட்டி அணியின் பயிற்றுவிப்பாளர் ஆஷ்லி கைல்ஸ் முழுமையாக மறுத்துள்ளார். (ற)





## அரையிறுதியில் சாய்னா

இந்தோனேஷிய பகிரங்க பூப்பந்துத் தொடரின் அரையிறுதிச் சுற்றுக்கு இந்தியாவின் சாய்னா நெவால் முன்னேறியுள்ளார்.

ஜகர்த்தாவில் இந்தோனேஷிய சூப்பர் சீரிஸ் பிரிமியர் பகிரங்க பூப்பந்துத் தொடர் நடைபெற்று வருகின்றது.

அதில் பெண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் நடப்பு சம்பியனான சாய்னா, ஸ்பெயினின் கரோலினி மரினை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் சாய்னா 21:16, 21:19 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று, அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார். (ற)


## சச்சின், டோனி மீது வழக்கு



இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் சச்சின், டோனி மீது இந்தியாவின் உத்தரகண்ட அரசின் சார்பில் வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது.

அரசு உணவு கட்டுப்பாட்டுச் சபையின் சார்பில் உத்தரகாண்டில் உள்ள உணவு விடுதிகள் மற்றும் கடைகளில் தரக்கட்டுப்பாட்டு சோதனை நடத்தப்பட்டது. சில காலாவதியான உணவுப் பொருள்களை அவர்கள் விற்பனை செய்து வந்தது தெரிய வந்துள்ளது.

அதனையடுத்து அந்த குறிப்பிட்ட உணவு பொருள்களின் விளம்பரங்களில் நடித்த விளையாட்டு வீரர்கள் மற்றும் பொலிவூட் நடிகர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற)




# இங்கிலாந்தும் அரையிறுதியில்

மினி உலகக் கிண்ண சம்பியன் கிண்ணப் போட்டியில் நியூசிலாந்தை 10ஓட்டங்களால் தோற்கடித்து அரையிறுதிக்கு நுழைந்தது இங்கிலாந்து.

மினி உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் 11ஆவது ஆட்டம் நேற்று லண்டன் கார்ட்டிவ் மைதானத்தில் பகலிரவு ஆட்டமாக நடைபெற்றது. இதில் அரையிறுதிக்குள் நுழைய வேண்டும் என்ற கனவுடன் நியூசிலாந்து இங்கிலாந்து அணிகள் களமிறங்கின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி களத்தடுப்பை முதலில் தெரிவு செய்தது ஆனால் போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே தொடர்ச்சியாக மழை பெய்ததன் காரணமாக அணிக்கு 24 பந்துப் பரிமாற்றங்களாக குறைக்கப்பட்டது.

மழை ஓய்ததன் பின் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிறய இங்கிலாந்து அணி துடுப்பாட்ட வீரர்களின் பங்களிப்புடன் 23.3 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றக் கொண்டது. அவ்வணி சார்பாக அலஸ்ரயர் குக் 64 ஓட்டங்களையும் றூட் 38 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர். நியூசிலாந்தின் பந்து வீச்சு சார்பாக கேடி மில்ஸ் 4, மக்லிங்ஹறன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணி இங்கிலாந்து அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஆரம்ப இலக்குகளை மளமளவென இழந்து பரிதாப நிலைக்கு உள்ளாகியது. ஒரு கட்டத்தில் 4[illegible] ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்து இக்கட்டான நிலைக்கு உள்ளான போது வில்லியம்ஸ்சன் நிதானமாக துடுப்பெடுத்தாடி அணியை அரையிறுதிக்கு கொண்டு செல்வதற்காக கடுமையாக போராடினார்.இவருடன் இணைந்து கொறி அண்டர்சன் தனது பங்குக்கு ஒத்துழைப்புக் கொடுத்து இணைந்து போராடினார். எனினும் அவருடைய போராட்டமும் இறுதி வரை போராடிய போதும் வெற்றிக்கான ஓட்டங்களை பெற்றுக் கொள்ள முடியாமல் போனது.வில்லியம்ஸன் 67 ஓட்டங்களுடன் ஆட்மிழந்து வெளியேறியதும் இங்கிலாந்து அணியின் வெற்றி உறுதியானது. இறுதியில் 24 ஆவது பந்துப்பரிமாற்றத்தில் 7இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்று 10 ஓட்டங்களால் நியூசிலாந்து தோல்வியைத் தழுவிக் கொண்டது.அவ்வணியின் அண்டர்சன் 30 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அண்டர்சன் 3 இலக்குகளையும் பிறிம்ஷன், போபரா தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர். இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி அரையிறுதிக்கு தெரிவாகி உள்ளது. (400)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANANDA HOMES AND CONSTRUCTIONS - சாவகச்சேரி

உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத் தர

1. சாதாரண வீடு-16 லட்சத்திலிருந்து
 (3அறை, ஹோல், குசினி உட்பட)
2. மாடி வீடு- 35 லட்சத்திலிருந்து
 (4அறை, ஹோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை - 2 லட்சத்திலிருந்து
4. நவீன குசினி அமைப்பு Morden Kitchen (Pantry System)
5. பழைய வீடு புனரமைப்பு செய்தல்

குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
(3842)(2,6,7) 2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்

அழையுங்கள்: ஆனந்தன் 021 320 5939, 0786155929



edexcel



புதிய பிரிவு ஆரம்பம் 23.06.2013

இரட்டை தகைமைகள்

ஒரே முயற்சியில்.... ஒரே செலவில்....

HND in CIVIL ENGINEERING & QUANTITY SURVEYING

உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்கள், வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தர வல்ல சர்வதேச தரம் வாய்ந்த இரு பட்டத் தகைமைகளை ஒரே முயற்சியில், ஒரே செலவில் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பினை IIS வழங்குகின்றது. பொறியியல் பிரிவில் தங்களை இணைத்துக் கொள்ளும் ஒவ்வொரு மாணவரும் கணிய அளவையியல் (Quantity Surveying) கற்கை நெறியை முற்றிலும் இலவசமாகப் பயிலும் வாய்ப்பினைப் பெறுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900 (C/9868)

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.
Tel: 021 222 8050
Web: www.iis.edu.lk
E-Mail: info@iis.edu.lk

# ஜனாதிபதிக்கு 'ஜால்ரா' போட இனியும் நான் தயாரில்லை

## '13' சர்ச்சையால் மனம் வெதும்புகிறார் பிரபா

கொழும்பு, ஜூன் 17

அரசுக்கு ஆதரவு தெரிவிக்கின்றேன் என்பதால் தமிழ் இனத்துக்கு எதிரான விடயங்களுக்கு அவர்களுக்கு 'ஜால்ரா' போடுவதற்கு நான் தயாராக இல்லை. '13' ஆவது திருத்தத்தில் உள்ள மாகாணங்கள் ஒன்றிணையும் அதிகாரத்தை மட்டும் நீக்க அரசு முற்பட்டால் அதற்கு ஒரு போதும் ஆதரவு தெரிவிக்கப் போவதில்லை.

'13' பிளஸ் என்று பகிரங்கமாக அறிவித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று தனது வாக்குறுதியிலிருந்து தவறியுள்ளார்.

-இவ்வாறு மனம் வெதும்பியுள்ளார். ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

அரசுக்கு நான் ஆதரவு தெரிவித்து வருவது .அரசிடமிருந்து தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பதற்காகத்தான் . மாறாக தமிழ் மக்களுக்குள்ள உரிமைகளை பறித்து அரசுக்கு கொடுப்பதற்கு அல்ல.

அதே சமயம் தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் போக்குகளை கடந்த காலங்களில் அரசுக்குள்ளேயே இருந்து கொண்டு கண்டித்துமுள்ளேன். 13 ஆவது திருத்தத்தில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தக் கூடாது என்பதற்கு அரசுக்கு அழுத்தம் கொடுக்க பல கட்சிகளுடன் இணைந்து முன்னின்று செயல்பட்டேன். இன்று '13' ஆவது திருத்தத்தில் அரசு கைவைக்கின்றது. இனவாதம் கொண்ட பௌத்த பிக்குகளின் கூக்குரலுக்கும் இனவாத சிங்கள அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக்கும் அடிபணிந்து ஜனாதிபதி இன்று '13' இல் மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கின்றார்.



இந்த அரசுக்கு ஏழாவது நாடாளுமன்றத்தில் முதல்முதல் எதிர் கட்சியிலிருந்து ஆதரவு வழங்கியது நானே. அரசின் நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு எதிராக இருப்பின் அரசில் இருந்து வெளியேறும் முதல் முதுகெலும்புள்ள அரசியல் வாதியாக நானே இருப்பேன். '13' வது திருத்தச் சட்ட மாற்றத்துக்கு இன்று அரசில் இருக்கும் இடதுசாரி அமைச்சர் களும் சரி வேறு அமைச்சர்களாயினும் சரி எதிர்ப்பைத் தெரிவித்தாலும் இறுதியில் அவர்களும் அரசுக்குச் சாதகமா கவே மாறிவிடுவார்கள். இது வரலாறு தெரிந்தவர்களுக்கு நன்கு புரியும்- என்றுள்ளது. (ஒ)

# ஆசிரியையின் சங்கிலியை அறுக்கும் முயற்சி தோல்வி

கொக்குவில், ஜூன் 17

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஆசிரியையின் பவுண் சங்கிலியைக் குறட்டினால் வெட்டித் துண்டாடினர் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர். எனினும் சங்கிலி தப்பிவிட்டது. இந்தத் துணிகரமான கொள்ளை முயற்சிச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.05 மணியளவில் சனநடமாட்டம் உள்ள பகுதியான குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் இடம் பெற்றது. பாடசாலை விட்ட கையோடு அருகில் - பாடசாலைக்கு சுமார் 50 மீற்றர் தூரத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. சம்பவம் குறித்து ஆசிரியை கூறிய தாவது:-

கொக்குவில் சி.சி.த.க. பாடசாலையின் ஆசிரியையான நான், பாடசாலை விட்டதும் எனது மோட்டார் சைக்கிளில் புறப்பட்டேன். மாணவர்கள் வீதியில் சென்று கொண்டிருந்ததால், மெதுவாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தேன். பின்னால் உறுமிக் கொண்டு வந்தது ஒரு மோட்டார் சைக்கிள். அந்த மோ. சைக்கிள் என்னை முந்துவது போன்று மிக அருகே வந்தது. அந்தக் கணத்தில் எனது கழுத்தில் ஏதோ நெருடியது போல் இருந்தது. என்னை அறியாமலே நான் சத்தமிட்டு குளறி னேன். சற்றுத் தடுமாறிய நான், என்னுடைய தங்கச் சங்கிலி சட்டைக்குள் விழுவதை உணர்ந்தேன். அதன் பின்னர் தான் புரிந்தது மோ. சைக்கிளில் வந்தவர்கள் சங்கிலியை வெட்டி அறுத்துள்ளனர் என்று. நான் குளறியதைக் கேட்டு, பின்னால் வந்த சக ஆசிரியை விரைந்து வந்தார். பதற்றமடைந்த என்னை ஆசுவாசப்படுத்தினார் அவர். அதேசமயம், மோ.சைக்கிளில் வந்து ஆசாமிகள் எம்மை நோக்கி கையசைத்தவாறு, நீதிராசா வீதியூடாகத் தப்பிச் சென்று விட்டனர்.

குறட்டால் அறுக்கப்பட்ட சங்கிலியிலும் எனது கழுத்திலும் ஈயத்துகள்கள் போன்று ஏதோ இருந்தன. அது மட்டுமன்றி கழுத்தில் சிறு கீறல் காயமும் ஏற்பட்டுள்ளது.- இவ்வாறு அந்த ஆசிரியை கூறினார். (ஒ)

யாழ் பேருந்து நிலையத்திற்கு வடக்குப் பக்கமாக...
திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை



Printing House
enjoy the quality, admire the value

உங்கள் எண்ணங்களுக்கேற்ற வடிவங்களில் அழைப்பிதழ்களை செய்தும் பெற்றுக்கொள்ளலாம்.

Wedding Cards Showroom
பிறிண்டிங் ஹவுஸ் (C/9467)
021 221 9929, 077 2200148
165, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

A/L ICT 2015
ICT புதிய பிரிவுகள் ஆரம்பம்
R.Kumaran-B.Sc.
for last 12 years in IT
74, Sabapathy Lane, Jaffna - 0776577359

"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்"
பங்குச்சந்தை முதலீட்டாளர்களுக்கான
2ஆம் நிலைப் பயிற்சிப்பட்டறை
(நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு FSA).
எதிர்வரும் 22.06.2013 சனிக்கிழமை முதல் வாரஇறுதி நாள்களில்
(மாலை 3.00 - 6.00)
இடம்:- பங்குப்பரிவர்த்தனை கேட்போர்கூடத்தில்
பதிவுகளுக்கு :- 0777 822 014 & www.cse.lk
(C/9856) (10,6,7)

Northern Central Hospitals
VACANCY

Vacancies exist for the following posts for immediate employment :

1. Pharmacist possessing SLMC registration and experience in stores management
2. Systems Operator with experience in networking and database

Salary negotiable.

Applications from prospective candidates should reach the address given below on or before 30th June 2013.

Self prepared applications should be accompanied by complete biodata and photocopies of :

1. NIC
2. Birth Certificate
3. Educational certificates
4. Letter from Grama Niladhari
5. Service Letter from present / previous employer.
6. Names of two non related referees

Human Resources Manager
Northern Central Hospitals
342, Palaly Road , Jaffna (C/9865)(2.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.